விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

Email Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 கார்த்திகை 17 திங்கட்கிழமை (03.12.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 349

## அமைதிக்கு பங்கம் ஏற்பட்டால் இராணுவம் வீதிக்கு இறங்கும்

### யாழ். கட்டளைத் தளபதி எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)



யாழ்.குடாநாட்டில் அமைதிக்கு பங்கம் விளைவிக்க யாராவது முற்பட்டால் மீளவும் இராணுவ முகாம்கள் வீதிகளில் அமைக்கப்படும் இதனால் வீதிச் சோதனை நடவடிக்கைகளையும் இராணுவத்தினர் முன்னெடுப்பர் என 02

## புதிய அரசியலமைப்பை கொண்டுவர ஐ.தே.முன்னணியுடன் இணக்கம்

### த.தே.கூட்டமைப்பு அறிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் அடங்கிய வகையில் வரையப்பட்டுள்ள அரசியலமைப்பு வரைபை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4-ம் திகதிக்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணக்கம் காணப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.


ஐக்கிய தேசிய முன்னணியுடன் காணப்பட்டுள்ள இணக்கத்தை எழுத்துமூலம் இருதரப்பினரும் பரிமாற்றிக் கொள்ள இணக்கம் எட்டப்பட்டுள்ளதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைை 02



இன்று ஆரம்பமாகும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள அனைத்து மாணவர்களும் சிறந்த பெறுபேறுகளை பெற மனதார வாழ்த்துகின்றோம்.
-வலம்புரி கல்விப்பிரிவு

# அரசியல் நெருக்கடியை தீர்க்க ஒரேவழி பொதுத் தேர்தலே!

## மகிந்த ராஜபக்ஷ விடாப்பிடி



**(கொழும்பு) இலங்கை மற்றும் சர்வதேச அனுபவங்களை சுட்டிக்காட்டி தற்போதைய அரசியல் நெருக்கடியைத் தீர்க்கவும் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்கும் பொதுத் தேர்தலே ஒரே வழியென மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

மகிந்த ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ள விடயங்கள் வருமாறு.

ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட தேர்தல்களை நடத்துவதற்கு அரசியல் கட்சிகள் எதிர்ப்பு தெரிவிப்பதை இலங்கையில் மாத்திரம் காண முடியும்.

ஜனாதிபதி அரசமைப்பிற்கு ஏற்ப வர்த்தமானி அறிவித்தலொன்றை விடுத்ததுடன் தேர்தலிற்கும் வேட்பு மனுக்களை தாக்கல் செய்வதற்குமான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே திட்டமிடட்படி அனைத்தும் இடம்பெற்றிருந்தால் நாட்டில் ஸ்திரதன்மையை ஏற்படுத்தியிருக்க 04

## க.பொ.த சா/த பரீட்சைகள் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

க.பொ.த சாதாரண தரப் பரீட்சை இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 12 ஆம் திகதி நிறைவடையவுள்ளது. காலை 8.30 மணிக்கு பரீட்சைகள் ஆரம்பமாகவுள்ளதால் 8 மணி 23

## வங்கி ஏ.ரி.எம்மில் திருட முயன்றவர் வசமாக சிக்கினார்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பகுதியில் உள்ள தனியார் வங்கி ஒன்றின் தன்னியக்க பண பரிமாற்ற இயந்திரத்தில் (ஏ.ரி.எம்) போலி அட்டையை செலுத்தி பணம் பெற 24

## பொதுத் தேர்தலே ஒரே வழியென ஜனாதிபதியும் உறுதி

(கொழும்பு)

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு டிசம்பர் 31-ம் திகதிக்குள் தீர்வை காண முடியாவிட்டால் பொதுத்தேர்தலிற்கு செல்வதே ஒரே வழி என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். 04

## பிரதமர் பதவியில் இருந்து மகிந்த புதன் நீக்கப்படலாம்!

(கொழும்பு)

ஆறு வாரகாலம் பிரதமராக இருந்த மகிந்த ராஜபக்ஷ வரும் புதன் கிழமை, பதவியில் இருந்து நீக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசிய முன்னணி ஆகிய கட்சிகளுடன், கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஜனாதிபதி நடத்திய பேச்சுக்களின் போது, மகிந்த ராஜபக்ஷவுக்கு பெரும்பான்மை பலம் இல்லை என்பதை ஏற்றுக்கொண்டிருந்தார்.

அத்துடன், புதிய பிரதமரை நியமிக்குமாறு நாளை மறுதினம் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுமாறும் அவர் கூறியிருந்தார்.

இந்தநிலையில், வரும் புதன்கிழமை நாடாளுமன்றம் 04

## எனது உருவப்பொம்மையை எரித்தாலும் தமிழர்களின் கொள்கைகளை எரிக்காதீர்!

### முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் உருக்கம்

(வவுனியா)



என்னுடைய உருவப் பொம்மையை ஒருமுறையல்ல ஆயிரம் முறை எரியுங்கள் அதைப்பற்றி நான் கவலைப்படமாட்டேன் என தெரிவித்த வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சார் சி.வி.விக்னேஸ்வரன், ஆனால் தமிழ் மக்களின் நீண்ட கால கொள்கைகளை நீங்கள் சார்ந்த கட்சியுடன் சேர்த்து எரித்து விடாதீர்கள் என தெரிவித்துள்ளார்.

வவுனியா நகரசபையின் மக்கள் நலத்திட்டங்கள் ஊடாக முன்னெடுக்கப்படுகின்ற வவுனியா நகர சபையின் பல்துறை 23

## ரணிலுக்கு கைவிலங்கிட்டு சிறையில் அடைப்போம்!

### வாசுதேவ நாணயக்கார சூளுரை



(கொழும்பு)

எமது ஆட்சியை பலமாக அமைத்தவுடன் ரணில் விக்கிரமசிங்கவை கைதுசெய்வதே முதல் நடவடிக்கை எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார, நாட்டில் இடம்பெற்ற மிக பெரிய ஊழலான மத்திய 04

## சு.கவின் 14 எம்.பிகள் ஐ.தே.முன்னணியுடன் இணைய முடிவு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து குறுகிய காலத்துக்குப் பணியாற்ற ஸ்ரீலங்கா 23

## தேர்தலுக்கு நாமும் தயார்

### ஐ.தே.கட்சி அறிவிப்பு

(கொழும்பு) தேர்தலுக்கு செல்ல தாமும் தயாரென்றும் 04

## ஐ.தே.முவுடனான சந்திப்பை ஒத்திவைத்தார் ஜனாதிபதி

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் ஐக்கிய தேசிய முன்னணிக்கும் இடையே நேற்றிரவு நடைபெறவிருந்த பேச்சு இறுதி நேரத்தில் இன்று இரவு 8 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பாராளுமன்றக் குழுவை ஜனாதிபதி நேற்றிரவு சந்தித்ததால் ஐக்கிய தேசிய முன்னணியுடனான சந்திப்பை ஒத்திவைத்தார் என்று அறியமுடிகிறது.

இந்த நிலையில் ஐக்கிய தேசிய முன்னணிக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு இன்று இரவு 8 மணிக்கு இடம்பெறும் என்று ஐ.தே.முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார். (மு)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தனிமையில் வசித்த மூதாட்டியை வீடு புகுந்து தாக்கிய கும்பல்

தனிமையில் வாழ்ந்த மூதாட்டியை வீடு புகுந்து கடுமையாகத் தாக்கிய கும்பல், அங்கிருந்து தப்பித்தது. படுகாயமடைந்து மூதாட்டியை குருதி வெள்ளத்திலிருந்து மீட்ட மகள், யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சேர்ப்பித்தார்.

உடுவிலில் நேற்று அதிகாலை 2 மணி யளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

எம் பொன்மலர் (வயது-72) என்ற மூதாட்டியே தாக்குதலுக்குள்ளாகி படுகாய மடைந்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்த கும்பலே மூதாட்டியைத் தாக்கினர் எனத் தெரிவிக் கப்படுகிறது.

படுகாயமடைந்த மூதாட்டியை அதி காலையில் உணவு வழங்க சென்ற மகள் கண்ணுற்று அவசர் இலக்கமான 119 இற்கு அழைப்பினை மேற்கொண்டு உடனடியாக அம்புலன்ஸின் உதவியுடன் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் சேர்த்தனர்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலைக்கு அவர் மாற்றப்பட்டார்.

வீட்டிலே பெரிய வளர்ப்பு நாய் நின்றுள் ளது. அது குரைத்த சத்தம் கேட்கவில்லை. இரண்டு கைகளும் கொடூரமாக அடித்து உடைக்கப்பட்டுள்ளன.

தலைப்பகுதி மற்றும் முகங்கள் முழுவ தும் அடிகாயங்கள் காணப்படுகின்றன. கொள்ளையிடும் நோக்கத்தோடு இச்சம்ப வம் இடம்பெறவில்லை என பாதிக்கப்பட்ட மூதாட்டியின் மகளின் கணவனார் ( தாதிய உத்தியோகத்தர், தெல்லிப்பளை வைத்திய சாலை) தெரிவித்தார். (மு)

## அமைதிக்கு பங்கம்...

தெரிவித்த பாதுகாப்பு படைகளின் யாழ்ப் பாண மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி, அமைதி யான வாழ்க்கையை வாழ இராணுவத்துடன இணைந்து செயற்படுங்கள் எனவும் தெரி வித்துள்ளார்.

வட்டுக்கோட்டை பகுதியில் புனரமைக் கப்பட்ட குளம் ஒன்றை பொதுமக்களுக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை யாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித் தார். தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்.

30 வருட கால யுத்தத்தினால் இந்த நாட்டில் உள்ள அனைவரும் துன்பப் பட்டோம். அதிலும் இந்த பிரதேச மக்கள் அதி களவு பாதிக்கப்பட்டார்கள். யுத்தம் நடை பெற்ற காலத்தில் நாம் ஆயுதம் ஏந்தி போராடி யது போர் புரிய வந்தவர்களுடன் தானே தவிர எந்த சந்தர்ப்பத்திலும் தமிழ் மக்களு டன் எந்த குரோதமும் எமக்கு இருக்க வில்லை.

தமிழமக்களுடன்சமாதானமான வாழ்வை வாழ்வதே எமது கனவாகவுள்ளது. 30 வருடத்துக்கு முற்பட்ட காலத்தில் தெற்கு மற்றும் வடக்கு மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்தார்கள். யுத்த காலத்தில் துன்பப்பட்ட தமிழ் மக்களின் துன்பத்தை இன்பமாக மாற்றுவது எமது கடமை அதனால் பல செயற்றிட்டங்களை நாம் முன்னெடுத்து வருகிறோம்.

இராணுவத்தினர் மக்களுக்கான வேலைத திட்டங்களை முன்னெடுப்பதற்கு ஒற்றுமை யும் அமைதியுமே அவசியமாக உள்ளது. எனவே தமிழ் மக்களிடம் நான் வலி யுறுத்திக் கேட்டுக் கொள்கின்றேன், அமைதி - ஒற்றுமையுமான நிலைமையை எதிர்காலத் திலும் பேணிப் பாதுகாக்கவேண்டும்.

அமைதியான சூழ்நிலை மாறுமாக விருந்தால், முன்னரைப் போன்று இராணு வத்தினரும் பொலிஸாரும் வீதிகளில் முகாம்களை அமைத்து மக்களை தடுத்து வீதிச் சோதனை முன்னெடுக்கும் நிலை ஏற்படும். எனவே அமைதிக்கு பங்கம் ஏற்பட ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. அமைதி யான வாழ்க்கையை வாழ வேண்டும். அதற்கு இராணுவத்துடன் இணைந்து ஒற்றுமையான வாழ்க்கையை வாழுங்கள்.

இராணுவத்தினருடன் இணைந்து பணி யாற்றுமாறும் எமது மக்கள் நலன்சார் திட்டங்களுக்கு ஒத்துழைக்குமாறும் தமிழ் மக்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

யாராவது அமைதிக்கு பங்கம் விளை விக்க முற்படுவாராயின் அவர்களை வலுப் படுத்துவதை நிறுத்தி, நாட்டின் அமைதி யைப் பாதுகாக்குமாறு கேட்டுக் கொள்கின் றேன்.நாம் உங்களுக்கு அரசியல் ரீதியான தேவையை எதிர்பார்த்து உதவவில்லை. மனிதாபிமானத்துடன்தான் உதவுகிறோம் என மேலும் தெரிவித்தார். (மு-9)

## ஆறுதல் குடும்பம் மாணவருக்கு வாழ்த்து

2018ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் தமிழ் மொழி மூலமான மாணவர்களை ஆறுதல் நிறு வனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப் பாளரும் முன்னாள் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாள ருமான சுந்தரம் டிவகலாலாவுடன் ஆறுதல் குடும்பத்திருனரும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று சித்தியடைய வாழ்த்துக்களைத் தெரி வித்துள்ளனர். (மு)

## புதிய அரசியலமை...

ப்பின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தயாரிக்கப்பட்டுள்ள அரசியல மைப்பின் ஊடாக தமிழ் மக்களின் இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கும், புதிய அரசிய லமைப்பு தமிழர்களின் அரசியல் தீர்வாக அமைய வேண்டும் என்பதற்கும் இணக்கம் எட்டப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

அத்துடன், இவ்வாறு சமர்ப்பிக்கப்பட வுள்ள அரசியலமைப்பு வரைபை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறை வேற்றுவதற்கான முயற்சிகளில் தாம் ஈடுபட வேண்டும் என்ற விடயத்திலும் இணக்கம் காணப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கூறி யுள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங் களில் விடுவிக்கப்படாதுள்ள காணிகளை டிசம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி வழங்கிய உறுதிமொழிக்கு, ஆதரவு வழங் கவும் ஐக்கிய தேசிய முன்னணி இணக்கம் தெரிவித்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை மீளக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளிலும், அதற் கான திட்டங்களை வகுக்கும் நடவடிக்கை களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முக்கிய பங்கை வகிக்க வேண்டும் என முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா குறிப்பிட் டுள்ளார்.

மேலும், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணப்படும் காணி பிரச்சினைகள், காணிகளை அத்து மீறி தன்வசப்படுத் தும் நடவடிக்கை களை தவிர்த்தல் போன்ற நடவடிக் கைகளுக்கும் ஐக் கிய தேசிய முன்ன ணியினர் தம் முடன் இணக் கத்தை எட்டியுள்ள தாக மாவை சேனா திராசா கூறியுள் ளார்.

இவ்வாறானசெயற பாடுகள் தொடர் பான தீர்மானத்தை எடுக்கும்போது, தமி ழ்த் தேசியக் கூட்ட மைப்பை கொண்ட ஒரு கட்டமைப்புக்கு சில அதிகாரங்கள் வழங்கப்பட வேண் டும் என்ற கோரிக் கைக்கும் இணக் கம் எட்டப்பட்டுள்ள தாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ்வாறான அனைத்து கோரிக் கைகளையும் உள் ளடக்கிய வகையி லான எழுத்துமூல ஆவணமொன்று எதிர்வரும் நாடாளு மன்ற அமர்வுக ளின் போது, இரு தரப்பினரும் பரி மாற்றிக் கொள்வதற் கான தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக இலங்கை தமிழர சுக் கட்சியின் தலை வரும், தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணமாவ ட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதி ராசா தெரிவித்துள் ளார். (மு)


## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கருவப்புலம் வீதியில் (யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கு முன்பாக) புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நான்கு பக்க மதில் சுவருடன் கூடிய நவீன வசதிகள் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு:-

**076 600 3303, 077 076 7114**


## சித்தியடைய வாழ்த்துகின்றோம்

2018 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தோற்றும் தமிழ் மொழிபேசும் மாணவர்கள் அனைவரும் இப்பரீட்சையில் சித்தியடைய ஆறுதல் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் ஆறுதல் குடும்பமும் வாழ்த்துகின்றோம்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 - 06 - 1950



மறைவு 02 - 12 - 2018

திருமதி

### பிலோமினா அந்தோனிப்பிள்ளை

*கச்சேரியடி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி பிலோமினா அந்தோனிப்பிள்ளை நேற்று (02.12.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்ற மனுவல் - இராசம்மா தம்பதி களின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நீக்லஸ் - லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும் அந்தோனிப் பிள்ளையின் (தனம்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற சின் னத்துரை, மோசேஸ், இராசேந்திரம், சூரி மற்றும் ஞானம் மாள் (கொலன்ட்), லூர்த்தம்மா (லெபனான்) ஆகி யோரின் அன்புச் சகோதரியும் மாலினி (பிரான்ஸ்), மைதிலி, ஷியாம் (ஜேர்மனி), ஜெயந்தி, நிலாந்தி, எனிற்றோ (ரீயூலன்) ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்ற ஜெகதீஸ் வரன், கொன்ஸ்சன் மற்றும் றொபின், விஜயகுமார் (தம்பி) ஆகியோரின் அன்பு மாமியும் மயூரன் (மலேசியா), நரேன், பெனிற்றா, அனிற்றா, துஷ்யந்தி, டினோஜன், சஞ்சீவன், சியாத்திப் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2018) திங்கட்கிழமை புனித திரேசாள் ஆலயத்தில் நடை பெற்று பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.* (6657)

இல.16/04
கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:- குடும்பத்தினர்
075 212 6574

## மாந்தை கிழக்கு பிரதேச சபையின் 2019 ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் மக்கள் பார்வைக்கு வைத்தல்

**1985ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபை கட்ட ளைச் சட்டத்துக்கு அமைவாகவும் பிரதேச சபையினரின் ஆலோசனைக்கும் ஏற்ப தயாரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டமானது 01.12.2018 - 15.12.2018ஆம் திகதி வரை மக்கள் பார்வைக்காக பிரதேச சபையிலும் பிரதேச சபை பொது நூலகத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது என்பதனை அறியத் தருகின்றேன்.**

**திரு.ம.தயாநந்தன்**
**தவிசாளர்**
**மாந்தை கிழக்கு பிரதேச சபை,**
**பாண்டியன்குளம்.**

(C-4589)


Gr 6 - 11 வரையான மாணவர்களுக்கான Maths (English Medium) வகுப்புக்கள் 7 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவமிக்க Maths (English Medium) நியமனம் பெற்ற தேசிய பாடசாலை ஆசிரியரால் குழுவாகவோ/தனியாகவோ கற்பிக்கப்படும்.

## BRILLIANT MATHS ACADEMY

இணுவில் கிழக்கு, அங்களப்பாய்.

**Mr.s.Tharshan 077 454 0529**

ஆரம்பம்:- 04.12.2018

(Gr.6 மாணவர்களுக்கான வகுப்புக்கள் 04.12.2018 அன்று 6.30 pm ஆரம்பம்)

குறிப்பு:- தமிழ் மொழி மூலமான கணித வகுப்புகளுக்கும் தொடர்பு கொள்ளவும்.
ஒரு பிரிவில் 15 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி

(6654)

# விடுதலைப் புலிகளுக்கு நிதி வழங்கியதால் ஐ.தே.கவுடன் த.தே.கூ கைகோர்ப்பு!

## மகிந்த அணி காட்டம்

(கொழும்பு)

நாட்டில் தீவிரவாதம் வளர்ச்சியடைவதற்கு துணை போகின்ற ஐக்கிய தேசியக் கட்சிதான் இன்று பிரதமருக்கும், அமைச்சர்களுக்கும் நிதியொதுக்கக் கூடாது என தெரிவித்து வருவதாக குற்றம் சாட்டிய மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன, விடுதலைப் புலிகளுக்கு நிதி வழங்கிய காரணத் தினால்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஐ.தே.கவுடன் கைகோர்த்துள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

பிரதமர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,



மகிந்த ராஜபக்ஷவினுடைய ஆட்சிக் காலத்தில் புலிகளுக்கு பணம் வழங்கப்பட்டதா? என்பது குறித்து எனக்கு தெரியாது. ஆனால் அது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. எனினும் அந்த விடயம் இது வரையில் நிரூபிக்கப்படவில்லை. முடிந்தால் ஐக்கிய தேசிய கட்சி அதனை நிரூபித்துக்காட்டட்டும்.

1989 மற்றும் 1990 காலப்பகுதிகளில் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக காணப்பட்ட போது அவரது பிரதான ஆலோசகராக செயற்பட்ட ஆர்.பாஸ்கரலிங்கம் என்பவரால் விடுதலைப் புலிகளுக்கு இலட்சக்கணக்கான நிதி வழங்கப்பட்டுள்ளது.

அதற்கான ஆதாரம் எம்மிடம் உள்ளது. ஆரம்ப காலங்களிலிருந்தே இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டமையினாலேயே நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமற்றதொரு நிலையினை இன்று எதிர் கொண்டுள்ளது என அவர் மேலும் குற்றம் சாட்டினார். (இ-7)

# மீண்டும் மகிந்த அணியினருடன் வசந்த சேனநாயக்க?

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சேனநாயக்க, ராஜகிரியவில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அரசாங்கத் தரப்பினருடன் கலந்துகொண்டுள்ளார்.

"நாட்டைக் கட்டியெழுப்பும் தேசிய சபை" என்ற நிகழ்வு ராஜகிரியவில் நேற்று அத்துரலிய ரத்ன தேரர் தலைமையில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் அமைச்சர்களான தினேஷ் குணவர்த்தன, உதய கம்மன்பில மற்றும் பொதுஜன பெரமுன கட்சியின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ ஆகியோருடன் வசந்த சேனநாயக்கவும் கலந்து கொண்டுள்ளார்.

இதேவேளை, கடந்த வாரம் அரசாங்கத்தில் இருந்து விலகி மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துகொண்ட வசந்த சேனநாயக்க, தனது அமைச்சுப் பதவியையும் இராஜினாமா செய்திருந்தார்.

அத்துடன், இனி ஒரு போதும் கட்சித் தாவல்களில் ஈடுபடப் போவதில்லை எனவும் அவர் கூறியிருந்தார்.

எனினும், நேற்று ராஜகிரியவில் நடைபெற்ற நிகழ்வில் அரசாங்கத் தரப்பினர்களுடன் வசந்த சேனநாயக்க கலந்துகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



### அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு

# அரசாங்கத்துக்கு எதிராக ஐ.தே.க.நேற்று ஆர்ப்பாட்டம்





(தெரணியகலை)

அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டமொன்று நேற்று தெரணியகலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களால் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தெரணியகலை பிரதேச சபையின் உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டு அரசாங்கத்துக்கு எதிராக தமது எதிர்ப்பினை வெளியிட்டனர்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்கவும், சூழ்ச்சி முறையில் ஆட்சியை கைப்பற்றிய அரசாங்கத்துக்கும் எதிராக இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இலங்கையில் சீனாவின் கடன்பொறி ஐ.நா. கூட்டத்தொடரில் விவாதம்

(கொழும்பு)

இலங்கையில் சீனாவின் கடன் பொறி தொடர்பாக, ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் அடுத்த கூட்டத் தொடரில் விவாதிக்கப்படவுள்ளதாக, தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐ.நாவின் சிறப்பு நிபுணர் ஜுவான் பப்லோ பொஹோஸ்லாவ்ஸ்கி இந்த ஆண்டு இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான நிலவரங்களை ஆராய்ந்திருந்தார்.

இதையடுத்து, அவர், மனித உரிமைகளில் வெளிநாட்டுக் கடன்களின் தாக்கம் தொடர்பாக, ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி -மார்ச் கூட்டத் தொடரில் விரிவான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளார்.

இதுகுறித்து, ஐ.நாவின் சிறப்பு நிபுணர் ஜுவான் பப்லோ பொஹோஸ்லாவ்ஸ்கியின் பேச்சாளர் ஒருவர், கொழும்பு ஆங்கில இதழ் ஒன்றுக்கு தகவல் வெளியிடுகையில், இந்த அறிக்கை பேரவையின் அடுத்த அமர்வில் சமர்ப்பிக்கப்படும் என்றும், அதற்கு முன்னதாக, பெப்ரவரி மாத தொடக்கத்தில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் இணையத்தில் வெளியிடப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு சீனாவின் கடன்பொறியே காரணம் என்று குற்றம் சாட்டப்படுவரும் நிலையில், இந்த விவகாரம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் எதிரொலிக்கவுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# யாழ்தேவி புகையிரதம்-மகேந்திரா வாகனம் விபத்து

### மயிரிழையில் உயிர்தப்பிய சாரதி





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தென்மராட்சி பகுதியில் யாழ்தேவி புகையிரதமும், ம்கேந்திரா ரக சிறிய வாகனம் ஒன்றும் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது. வாகனத்தில் பயணித்தவர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.

நேற்றுக்காலை கொடிகாமம் பிரதேச வைத்தியசாலைக்கு எதிரே உள்ள புகையிரத கடவையை கடக்க முற்பட்ட வாகனத்தை யாழ்தேவி புகையிரதம் மோதியது. இதில் வாகனத்தின் பின்பகுதி சேதமடைந்துள்ளது.

புகையிரதம் மோதிய வேகத்தில் வாகனம் தண்டவாளத்திற்கு வெளியே தள்ளப்பட்டது. இதனால் வாகன சாரதி மயிரிழையில் உயிர் தப்பினார். (இ-9)

# சிறந்த பெறுபேறுகள் கிடைக்க கல்வித்துறையினர் வாழ்த்து

இன்று (2018.12.03) ஆரம்பமாகும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு வடக்கு மாகாணத்திலிருந்து தோற்றும் அனைத்துப் பரீட்சார்த்திகளுக்கும் சிறந்த பெறுபேறுகள் கிடைக்க மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர். (இ

# மெகிடி ஹசன் 'மிரட்டல்'

## இன்னிங்ஸ் வெற்றியுடன் தொடரை வென்றது வங்கம்




12 விக்கெட்டுக்களை கைப்பற்றி பங்களாதேஷ் அணியின் தொடர் வெற்றிக்கு வித்திட்ட மெகிடி ஹசன் வெற்றி நடையுடன்...

மெகிடி சுழலில் மிரட்ட, டாக்கா டெஸ்டிலும் அசத்திய பங்களாதேஷ் அணி இன்னிங்ஸ் மற்றும் 184 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இதன்மூலம் மே.தீவுகளுடனான தொடரை 2:0 என்ற கணக்கில் முழுமை யாக கைப்பற்றி கிண்ணத்தையும் சுவீகரித்தது.

பங்களாதேஷ் சென்றுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி, அங்கு இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றது. முதல் போட்டியில் பங்களாதேஷ் வென்றிரு ந்த நிலையில்,

இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி டாக்காவில் நடந்தது. முதல் இன்னிங்சில் பங்களாதேஷ் 508 ஓட்டங்கள் எடுத்தது. இரண்டாம் நாள் ஆட்ட நேர நிறைவில், மே.தீவுகள் அணி முதல் இன்னிங்சில் 5 விக்கெட்டுக்களை இழந்து 75 ஓட்டங்களை எடுத்திருந்தது. ஹெட்மயர் (32), டவ்ரிச் (17) ஆட்டமிழக் காமல் இருந்தனர்.

நேற்று மூன்றாம் நாள் ஆட்டம் நடந்தது. மெகிடி 'சுழல்' ஜாலம் காட்டினார். இவரது பந்துவீச்சில் ஹெட்மயர் (39), பிஷ (37), டவ்ரிச் (37) சிக்கினர். லீவிஸ் டக் அவுட்டாக, மே.தீவுகள் அணி முதல் இன்னிங்சில் 111 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார் பில் அதிகபட்சமாக மெகிடி ஹசன் 7 விக்கெட் டுக்களை வீழ்த்தினார்.

**மிரட்டிய மெகிடி**

முதல் இன்னிங்சில் 397 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற பங்களாதேஷ் அணி, பொலோ ஒன் அடிப்படையில் மே.தீவுகளை மீண்டும் துடுப்பெடுத்தாட பணித்தது.

இதன்படி 2ஆவது இன்னிங்ஸை ஆரம் பித்த மே.தீவுகள் அணிக்கு மீண்டும் சுழற் பந்துவீச்சாளர்கள் தொல்லை கொடுத்தனர்.

அணித் தலைவர் கார்லோஸ் பிராத் வைட் (1) சரிவை ஆரம்பித்து வைத்தார். மெகிடி பந்துவீச்சில் பவெல் (6), ஹோப் (25) ஆட்டமிழந்தனர். தைஜுல் 'சுழலில்' அம்ப்ரிஸ் (4), சேஸ் (3) ஆட்டமிழந்தனர். ஒருபுறம் விக்கெட் சரிந்தாலும் ஹெட்மயர் (93) மட்டும் அரைச்சதம் அடித்து ஆறுதல் கொடுத்தார்.

இறுதியில், மே.தீவுகள் அணி இரண்டா வது இன்னிங்சில் 213 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து வீழ்ந்தது.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார் பில் அதிகபட்சமாக மெகிடி 5 விக்கெட்டுக் களைக் கைப்பற்றினார். இதன் மூலம், பங் களாதேஷ் அணி 2-0 என்ற கணக்கில் தொடரை முழுமையாக கைப்பற்றியது.

## தேர்தலுக்கு...

அதனை சட்டபூர்வமான அரசாங்கம் நடத்த வேண்டும் எனவும் ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் கபீர் ஹசீம் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகத்தை நிலைநாட்ட பொதுத் தேர்தலுக்கு செல்வதே ஒரே வழி என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்று ஆற்றிய விசேட உரையில் தெரிவித்தார்.

மேலும் தற்போது சில மாகாண சபைக் கான பதவிக்காலம் முடிவடைந்தும் ஐக்கிய தேசிய கட்சி தேர்தலை நடத்தாமல் காலம் தாழ்த்தி வருவதாக தெரிவித்த கருத்திற்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "தமது கட்சி தேர்தலை கண்டு அச்சம் கொள்ள வில்லை. தேர்தலுக்கு தாம் தயாராக இருக் கின்றோம்.

ஆனால் அது சட்டபூர்வமாக நடத்தப்பட வேண்டும். அத்தோடு அதனை சட்டப்பூர்வ மான அரசாங்கம் அதனை நடத்த வேண் டும். ஒரு தேர்தல் ஒரு ஜனநாயக கட்டமைப் பிற்குள் மட்டுமே நடக்க முடியும்" என்று அவர் கூறினார். (மு)

## பிரதமர் பதவி...

கூடும்போது, புதிய பிரதமரை நியமிக்கக் கோரும் தீர்மானம் நிறைவேற்றப்படவுள் ளது.

இதையடுத்து, இந்த தீர்மானம் ஜனாதி பதிக்கு அனுப்பப்படும். அவர் அதனை அமைச்சரவையில் சமர்ப்பித்து கலந்துரை யாடுவார். இதன் பின்னர், மகிந்த ராஜபக்ஷ வை பதவிநீக்கம் செய்யும் வர்த்தமானி அறிவிப்பை ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்ப டுகிறது.

மகிந்த ராஜபக்ஷவை பதவிநீக்கம் செய் வதைவிட வேறு வழியில்லை என்ற நிலை ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ள நிலையில், புதிய பிரதமராக யாரை நியமிப்பது என்பதில் இழு பறி காணப்படுகிறது.

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமிக்கமாட்டேன் என்பதில், ஜனாதிபதி உறுதியாக இருக்கின்ற நிலையில், அவரையே பிரதமர் வேட்பாளராக முன்மொழிவதாக, ஐக்கிய தேசியக் கட்சி நேற்று கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

இந்தநிலையில், ஐக்கிய தேசிய முன்ன ணியுடன் ஜனாதிபதி இன்று மீண்டும் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இதேவேளை, உயர் நீதிமன்றில் இடம் பெறும் அடிப்படை உரிமை மனுக்கள் மீதான விவாதம் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்ப மாகிறது. அத்துடன், உயர் நீதிமன்றில் தீர்ப்பு வரும் வெள்ளிக்கிழமை வழங்கப்படு கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (மு)

## பொதுத் தேர்...

தேர்தல் இடம்பெற்றால் மக்கள் கடந்த காலங்களில் இடம்பெற்றவைகள் மீள இடம்பெறாத நிலையை ஏற்படுத்த முடியும் என குறிப்பிட்டுள்ள சிறிசேன மக்கள் தங் கள் வாக்களிப்பின் மூலம் ஊழல்வாதிகள் மீண்டும் தெரிவு செய்யப்படாத நிலையை உறுதி செய்ய முடியும்.

ஐக்கிய தேசிய முன்னணியுடன் மீண் டும் இணைந்து பணியாற்ற வேண்டிய தேவை உருவானால் நான் அவர்களுடன் எவ்வாறு இணைந்து பணியாற்றுவது என் பது குறித்து ஆராய்வேன். நான் முன்ன ரும் தெரிவித்திருக்கின்றேன், தற்போதும் தெரிவிக்கின்றேன், எதிர்காலத்திலும் இதனையே தெரிவிப்பேன் - நான் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து பணி யாற்ற மாட்டேன்.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை காண்பிப்பதால் ஒருவர் பிரதமராக முடியும் என அரசமைப்பில் எங்கும் தெரிவிக்கப்பட வில்லை. ஜனாதிபதியுடன் விருப்பத்துடனேயே ஒருவர் பிரதமராக முடியும். கரு ஜெயசூரிய வும் சஜித் பிரேமதாசவும் என்னை நம்பாத தால் பிரதமர் பதவியை நிராகரிக்கவில்லை. ரணில் குறித்த அச்சத்தின் காரணமாகவே நிராகரித்தனர். பாராளுமன்றத்தை கலைக் கும் முடிவை கைவிடுவது குறித்து நான் சிந்திக்கவில்லை எனவும் சிறிசேன தெரி வித்துள்ளார். (மு)

## ரணிலுக்கு...

வங்கி ஊழல் குற்றத்தில் முதல் குற்ற வாளி ரணில் விக்கிரமசிங்கவே ஆகவே அவரை கைவிலங்கு போட்டு சிறையில் அடைப்போம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நிகழ்கால அரசியல் நிலைமைகள் குறித் தும் அரசாங்கத்தை அமைப்பது குறித்தும் தனது கருத்தினை தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

பாராளுமன்றத்தை கலைத்தமைக்கு எதிராக நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக் கின் தீர்ப்பினை எதிர்பார்த்துள்ளோம். தீர்ப்பு எமக்கு சாதகமாக அமைய வேண்டும் என்பதே எமது பிரார்த்தனையாகும். ஒரு வேளை பாராளுமன்றம் கலைக்கப்பட்டமை தவறென தீர்ப்பு வந்தால் அப்போதில் இருந்து ஆட்சியை கையில் எடுத்துக் கொள் வோம்.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும்நாட்டினை பிளவுபடுத்தும்கொள்கை க்கு ஆதரவு வழங்காது என்பது எமக்கும் தெரியும். எனவே வடக்கு கிழக்கு மக்களின் அபிவிருத்தி அவசியமா அல்லது நாடு பிளவு பட வேண்டுமா என்பதை வடக்கு கிழக்கு மக்களே தீர்மானிக்க வேண்டும். (மு)

## அரசியல்...

முடியும்.

கடந்த வருடம் நவம்பர் மாதம்

எல்லைநிர்ணய விவகாரம் தொடர்பில் சிலர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்த தன் காரணமாக உள்ளூராட்சி தேர்தல்கள் இடம்பெறாமலிருக்க கூடிய ஆபத்து ஏற்பட் டது.

எனினும் தேர்தல் ஆணையாளர் நான் தேர்தலை நடத்தியே தீருவேன் என தெரி வித்ததும் அரசாங்கம் அதனை தயக்கத் துடன் ஏற்றுக் கொண்டது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களும் விலக்கப் பட்டன.

அவ்வேளை அரசியல் நோக்கங்களிற் காக நீதிமன்ற நடைமுறைகள் தவறாக பயன்படுத்தப்படுகின்றன என்பது தெளிவாகி யது.

இன்று நாட்டில் ஆறு மாகாண சபைகள் இயங்காத நிலையில் காணப்படுகின்றன முன்னைய அரசாங்கம் தேர்தல்களை கடந்த ஒரு வருட காலமாக நடத்தவில்லை.

நாங்கள் யுத்தம் முடிவடைவதற்கு முன் னரே 2008 இல் விடுதலைப்புலிகளை அகற்றிய பின்னர் கிழக்கு மாகாண சபை தேர்தல்களை நடத்தினோம்.

வன்னியில் நிலக் கண்ணிவெடிகளை அகற்றிய பின்னர் 2013 இல் நாங்கள் வடமாகாண சபை தேர்தல்களை நடத்தி னோம்.

இன்று யுத்தமற்ற நிலையிலும் அந்த இரு மாகாணங்களும் மாகாண சபைகள் அற்ற நிலையில் காணப்படுகின்றன.

ஐக்கிய தேசிய கட்சியும் அதனுடன் இணைந்த கட்சிகளும் மக்களை ஏமாற்று வதற்காக தவறான அறிக்கைகளை விடுத்து வருவதன் காரணமாக கடந்த காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் சிலவற்றை சுட் டிக் காட்ட வேண்டியுள்ளது.

எங்களுடைய முதலாவது பாராளுமன்ற தேர்தல் காலம் முதல் அவசியமான சந் தர்ப்பங்களில் எல்லாம் தேர்தலிற்கு அழை ப்பு விடுக்கப்பட்டுள்ளது.

1952 இல் பிரதமர் டிஎஸ்.சேனநாயக்க இறந்த வேளை அடுத்தது யார் என்ற மோதல் ஐக்கிய தேசிய கட்சிக்குள் உரு வானது.

டிஎஸ்.சேன நாயக்கவிற்கு அடுத்த நிலை யில் சேர் ஜோன் கொத்தலாவல காணப்பட்ட போதிலும் ஆளுநர் சோல்பரி டட்லி சேன நாயக்காவை பதவி ஏற்குமாறு அழைத் தார்.

பிரதமரான ஒரு சில நாட்களில் அவர் புதிய தேர்தல்களிற்கு அழைப்பு விடுத்து ஆளும் கட்சிக்குள் காணப்பட்ட மோதல் களிற்கு தீர்வை காண்பதற்காக மக்களின் புதிய ஆணையை பெற்றார்.

1959 இல் எஸ் டபிள்யூ பண்டார நாயக்க வின் படு கொலைக்கு பின்னர் டபிள்யூ தக நாயக்க பிரதமரானார்.

அமைச்சரவைக்குள் பிளவுகள் ஏற்பட்ட வேளை அவரும் புதிய தேர்தல்களிற்கு அழைப்பை விடுத்தார்.

பலவீனப்படுத்தப்பட்ட ஜனநாயகத்திற்கு தேர்தல்கள் மூலம் மாத்திரமே ஸ்திரதன் மையை ஏற்படுத்த முடியும்.

இலங்கையின் அரசமைப்பின் படி இறைமை என்பது மக்களிடத்திலேயே உள் ளது பாராளுமன்றத்திடமில்லை. மக்கள் தங்கள் இறைமையை தேர்தல் வாக்களிப்பு மூலமே பயன்படுத்துகின்றனர்.

ஜனநாயகத்தை மதிக்கும் அனைவரை யும் இந்த விடயம் குறித்து அவதானமாக ஆழ்ந்து சிந்திக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (மு)

# விவசாயக் கிணறுகளை அமைப்பதற்கு 140 மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீடு

## பிரதியமைச்சர் அங்கஜன் தெரிவிப்பு




(யாழ்ப்பாணம்)

நாடு பூராகவும் விவசாயக் கிணறுகளை அமைப்பதற்கு 140 மில்லியன் ரூபாய் நிதி விவசாய அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதிலும் வடமாகாணத்திற்கு மட்டும் 100 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக விவசாயப் பிரதியமைச்சர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

துரித விவசாய மீளெழுச்சித் திட்டத்தின் கீழ் பழமரக்கன்றுகள் வழங்கல், விவசாயக் கிணறு அமைப்பதற்கான நிதி வழங்கல், வெங்காய கொட்டில்கள் அமைக்க நிதியுதவி வழங்கல் உள்ளிட்ட பத்து வேலைத் திட்டங்களை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை புலோலி கமநல சேவை திணைக்களத்தில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பிரதியமைச்சர் மேலும் தெரிவிக்கையில், பொருளாதார ரீதியில் எங்களது பிரதேசத்தை முன்கொண்டு வருவதாயின் விவசாயம் ஊடாகவே கொண்டு வர வேண்டும்.

அதனாலேயே துரித மீளெழுச்சித் திட்டத்தை கொண்டுவந்து வடக்கு-கிழக்கிற்கு முதற்கட்டமாக 600 மில்லியன் ரூபாய் நிதியினை விவசாய அமைச்சு ஒதுக்கி யுள்ளது.

பொருளாதார ரீதியில் நாங்கள் முன்னுக்கு வந்தால்தான் நாங்கள் ஒரு பலம் வாய்ந்த இனமாக இருக்க முடியும். எங்களது பிரதேசம் அபிவிருத்தியடைய முடியும்.

அப்போதுதான் நாங்கள் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அபிவிருத்தியும் எங்களது உரிமைதான் என்பதை பலர் மறந்துள்ளனர்.

இந்த உரிமையை நாங்கள் கேட்டு வாங்காவிட்டால் யாரும் கொண்டு வந்து தரமாட்டார்கள். அதனால் தான் நான் போய் கேட்டு எங்களது பிரதேசத்திற்கு இந்த நிதிகளைக் கொண்டுவந்துள்ளேன்.

இன்று மக்கள் ஆணையோடு பாராளுமன்றம் சென்ற உறுப்பினர்கள் மக்களை கைவிட்டுவிட்டு ஜனநாயகத்தைக் காப்பாற்றச் சென்றுள்ளனர்.

மக்களின் தேவைகள், ஆணைகள் இருக்க அதனை விடுத்து தங்களது நிகழ்ச்சி நிரலில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

3000 மில்லியன் ரூபாவில் வடக்கு-கிழக்கில் துரித மீளெழுச்சித் திட்டம் நடக்கவுள்ளது. அதில் இளைஞர்களும் விவசாயத்தில் ஊக்குவிக்கப்படவுள்ளனர். இதனைச் செய்வதற்கு தகைமை வேண்டும்.

தகைமை இல்லாத நிலை காணப்படுகிறது. இது கற்றல்மூலம் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என அவர் மேலும்தெரிவித்தார்(இ-30-60)


# 1 ஆம் ஆண்டு

## நினைவஞ்சலி அழைப்பு

பிறப்பு: 24.10.1928 இறப்பு: 14.12.2017

அமரர்.

**திரு.சுப்பன் கந்தசாமி** (லைட்டர் கந்தசாமி)

**(இளைப்பாறிய யாழ்.மாநகர சபை மின்சார திணைக்கள ஊழியர்)**




கடந்த 14.12.2017 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வம் சுப்பன் கந்தசாமி (லைட்டர் கந்தசாமி) அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுக் கிரியைகள் 03.12.2018 திங்கட்கிழமை இன்று பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வராகி கோவிலடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (06-29)

குடும்பத்தினர்.


# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு:- 03.11.1945 இறப்பு:- 30.11.2018



வலம்புரியின் உருவாக்கத்தில் உதவிக் கரம் தந்த உத்தமர்
அறத்தின்வழி வர்த்தகம் புரிந்த நேர்மையாளன்
யாழ்ப்பாணம் ஆசீர் வணிக நிறுவனத்தின் இயக்குநர்
**உயர்திரு சின்னப்பு ஜோசவ் செல்வநாயகம்**
அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை
காணிக்கையாக்குகின்றோம். அவரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலம்புரி நிர்வாகம்

# இராசி பலன்

**மீனம்:** சிறப்பாக பணிகளைச் செய்து குடும்ப பெரியவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், நிதி நிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சிதரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மேடம்:** பிரபலமானவர்களின் சந்திப்புக்களால் பெருமையடைவீர்கள், முன்கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**இடபம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எதிர்கால நலன்கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பிள்ளைகள் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள்.

**மிதுனம்:** புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், பாராட்டும் புகழும் கூடும் நாள், நினைத்த காரியம் நிறைவேறும் நாள், பெற்றோர் மீது பிரியம் கூடும், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்:** வரவும் செலவும் சமமாகும் நாள், பொது வாழ்வில் வீண்பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, பயணத்தால் மன உளைச்சல் ஏற்படலாம்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| செவ் | **இராசி பலன்**<br>கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்திரட்டாதி<br>மாலை 4.40 மணிக்கு<br>துலா-சந் | | ராகு |
| கேது | | | |
| சனி | குரு.சூரி | புதன்.<br>சுக் | சந் |

**03.12.2018**

கார்த்திகை 17, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.15 மணிக்கு
ஏகாதசி பிற்பகல் 2.43 மணிவரை
சித்திரை பின்னிரவு 4.35 மணிவரை
சுபநேரம் 12.15-01.45மணிவரை
இராகுகாலம் 7.45-9.15 மணிவரை
ஏகாதசி விரதம், சித்தாமிர்தம்

வளவன்

**கடகம்:** உறவினர், நண்பர்களின் வருகையால் வீட்டில் கலகப்பான சூழ்நிலை ஏற்படும், தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மகரம்:** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், பகையொன்று நட்பாகலாம், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்:** வெளியூர் பயணங்களால் அனுகூலமுண்டு, சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தொழில் மேன்மையுண்டு, விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, பொன்னான நாள்.

**தனுசு:** சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், உறவினர்கள் உங்கள் மனம்போல நடந்து கொள்வர், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், போசன சுகமுண்டு

**விருச்சிகம்:** குடும்பத்தில் மகிழ்ச்சிதரும் சம்பவங்கள் இடம்பெறலாம், உள்ளம் மகிழும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**துலாம்:** உள்ளன்போடு பழகியவர்கள் எண்ணிக்கை கூடும், புதிய பொறுப்புக்களும் சுமைகளும் அதிகரிக்கும், மன அமைதிக்காக ஆலயத்தை நோக்கிச் செல்லும் எண்ணம் உருவாகும்.

**கன்னி:** நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உடல் நலனில் கவனம் தேவை, வரவுக்கேற்ப செலவுகள் உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.



யாழ். வேலணை மத்திய கல்லூரியின் இவ்வாண்டுக்கான ஒளிவிழா பாடசாலையின் அதிபர் எஸ்.கிருபாகரன் தலைமையில் இடம் பெற்றது. பாடசாலை பிரதான மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் என். விந்தன் கனகரட்ணம் ,ச றப்பு விருந்தினர்களாக சாட்டி பங்குத்தந்தை அருட்பணி. அ.பி.லொசிங்ரன் அடிகளார், வேலணை மேலதிக பிரதேச செயலாளர் திருமதி என்.கமலராஜன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

# அரசியல் குழப்பநிலையால் எதிர்காலச் சந்ததிக்கு ஆபத்து

## ஜனாதிபதிக்கும், சர்வதேச கல்வியகத்திற்கும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அவசர மடல்

(யாழ்ப்பாணம்)

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பநிலை காரணமாக எமது நாட்டின் எதிர்காலச் சந்ததியினரான பாடசாலைக் குழந்தைகளின் வாழ்க்கை ஆபத்தான கட்டத்தில் உள்ளது.

2019ஆம் ஆண்டு பாடசாலை கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாவதற்கு முன்னோடியான செயற்பாடுகள் சிலவற்றில் இப்போதே குழப்பம் ஏற்பட்டுவிட்டது.

மாணவர்களுக்கு சீருடை வழங்குதல், இலவச பாடப்புத்தகம் வழங்குதல், இலவச உணவு விநியோகம், பாடசாலைகளுக்கான நிதி ஒதுக்கீடு செய்தல், புதிய ஆளணியினரின் நியமனம் போன்ற பல விடயங்கள் முடங்கும் அபாய நிலை உள்ளது.

எத்தனையோ ஆயிரக் கணக்கான மாணவர்கள் அணிந்த உடைக்கு மாற்றுடை இல்லாமல் இருக்கின்றனர். ஒரு வேளைக்கே உணவு இல்லாமல் வாழுகின்றனர். அப்பியாசப் புத்தகம் வாங்குவதற்கு வழியில்லாமல் தவிக்கின்றனர். ஆகையால்,தற்போதைய குழப்பமான சூழ்நிலைக்கு விரைவில் தீர்வு காணாவிட்டால் எமது எதிர்காலச் சந்ததியினரின் வாழ்க்கை கேள்விக்குறியாகிவிடும்.

எனவே விரைந்து நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் அசாதாரண சூழலை வழமைக்கு கொண்டுவருமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்விடயம் தொடர்பில் நாம் அங்கம் வகிக்கும் சர்வதேச கல்வியகத்தின் கவனத்திற்கும் கொண்டு செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.

இவ்வாறு குறிப்பட்ட கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பி அதன் பிரதியை சர்வதேச கல்வியகத்தின் பொதுச் செயலாளருக்கும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அனுப்பி வைத்துள்ளது. (இ-7)



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நாவலர் குருபூஜை நிகழ்வுகள் உப அதிபர் த. கோபாலகிருஷ்ணன் தலைமையில் அண்மையில் நடைபெற்றன. இதில் விரிவுரையாளர் த.ஜானகி ம்லர்மாலை அணிவிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.



கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட 2018 ஆம் ஆண்டிற்கான சங்கீத, நடனப் போட்டி நிகழ்வுகளில் யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. (படங்கள்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)




**CACPD** இதம் நிறுவனத்தால் முதற்கட்டமாக காரைநகர் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமை மற்றும் மாற்றுத்திறனாளி குடும்பங்களை சேர்ந்த பயனாளிகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்பாக மீன்பிடி வலைகள் காரைநகர் சமூகசேவை உத்தியோகத்தர் **CACPD** இணைப்பாளர், கிராமஉத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர்களால் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன. (படங்கள்:-பொ.சோபிகா)



வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை பாடசாலையின் அதிபர் வை.விஜயகுமாரன் தலைமையில் இடம் பெற்றது. (படங்கள்:- வரணி செய்தியாளர்)



வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தின் 2018ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழா பாடசாலையின் அதிபர் தலைமையில் கடந்த 29 ஆம் திகதி இடம் பெற்றது. இந்த விழாவுக்கு பிரதம விருந்தினராக வேலணை பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி வைத்தியர் ஜெ.தனேஸ்குமார், சிறப்பு விருந்தினராக தீவகம் வலய ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் அருணகிரிநாதன், கௌரவ விருந்தினராக வேலணை விடிவெள்ளி அமைப்பின் கல்விப்பகுதி இணைப்பாளரும் சமூகசேவையாளருமான இ.சிவநாதன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



சாவகச்சேரி மகளிர் கல்லூரி சேவையாளர் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடலும் சுற்றுலாவும் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. கந்தரோடை தொல்பொருள் களம், மாவிட்டபுரம் கந்தசுவாமி, கீரிமலை நகுலேஸ்வரம், ஜம்புகோளப்பட்டினம் சங்கமித்தை துறை, பொன்னாலை வரதராசப் பெருமாள் ஆலயம் என்பவற்றை தரிசித்த சுற்றுலாக் குழு, வருடாந்த ஒன்றுகூடலை காரைநகர் 'ஹமன் ஹீல் விருந்தினர் விடுதியில் நடத்தியது.அதன்பின்னர் படகுப்பயணம் மேற்கொண்டு மேலும் சில வரலாற்று பிரசித்தி பெற்ற இடங்களை பார்வையிட்டனர். (படங்கள்:- பொ.சோபிகா)

# எயார்லைன்ஸ் மோசடிகள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் காலம் நீடிப்பு

(கொழும்பு)

மிஹின் லங்கா விமான சேவை மற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவை, வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் நிறுவனம் ஆகியவற்றில் இடம்பெற்ற மோசடிகள் குறித்து ஜனாதிபதி ஆணைக்குழுவின் அதிகார காலம் பெப்ரவரி 15 ஆம் திகதி வரை நீடிக்கவுள்ளது.

அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டு ஜனாதிபதி குறித்த கால நீடிப்பை வழங்கியுள்ளார்.

கடந்த ஜுலை மாதம் 31 ஆம் திகதி நிறைவடையவிருந்த காலம் 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில எதிர் வரும் 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி 15 ஆம் திகதி வரை மீண்டும் இவ்வாறு நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## உரிமையாளரால் உரிமை கோரப்படாத மோட்டார் சைக்கிள்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் உரிமை கோரப்படாது காணப்படும் மோட்டார் சைக்கிளை அதற்குரிய உரிமையாளர் யாராவது இருப்பின் உரிய நடவடிக்கையை மேற்கொண்டு பெற்றுக்கொள்ளுமாறும் தவறின் 02 மாதங்களுக்குப் பின்னர் அரசுடைமையாக்கப்படும். மோட்டார் சைக்கிள் இல NPXC 2856 என பதிவாளர் அறிவித்துள்ளார். (இ)

# மழலைகளின் கலைவிழா

(யாழ்ப்பாணம்)

'சரஸ்வதி முன்பள்ளி மழலைகளின் கலைவிழா இன்று பிற்பகல் ஒரு மணிக்கு முன்பள்ளிமண்டபத்தில் சரஸ்வதி முன்பள்ளி முகாமைத்துவக் குழுத் தலைவர் சு.வைகுந்தநாதன்' தலைமையில் இடம்பெறும்

இதில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலாளர் திருமதி. சுபாஜினி மதியழகன் கலந்து கொள்வார். (இ-7)

# நிதி ஒதுக்கீடு இன்மையால் பொலிஸ் வைத்தியசாலையில் மருந்துப்பொருள் தட்டுப்பாடு

(கொழும்பு)

மருந்துப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதி ஒதுக்கீடு இன்மையால் பொலிஸ் வைத்தியசாலை பாரிய நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி மற்றும் கடமையிலுள்ள பொலிஸார் ஆகியோரும் அவர்களது குடும்ப அங்கத்தினரும் பாரிய அசௌகரியங்களுக்குட்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்த மருந்துப் பொருட்கள் தட்டுப்பாட்டினால் பாரிய நோய்களுக்குட்பட்ட பொலிஸார் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வாகன இலக்கத்தகடுகள்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் போக்கு வரத்து தலைமை அலுவலகத்திலிருந்து 2018.11.29 ஆம் திகதி யாழ்.அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல் யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து அலுவலகத்திலும் பொது மக்களின் பார்வைக்காக அறிவிப்பு பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் மாவட்டச் செயலக இணையத்தளத்திலும் பார்வையிடலாம். என யாழ்ப்பாணம் பிரதி ஆணையாளர் அறிவித்துள்ளார். (இ)



இலங்கை கல்வி அமைச்சினால் மாகாணங்களுக்கிடையில் நடத்தப்பட்ட சமஸ்தலங்கா குறவன் குறத்தி போட்டியில் யாழ்.மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவன் கி.கபிநாத் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று வெற்றியீட்டியுள்ளார். (படங்கள்:-பொற்பதி செய்தியாளர்)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 R.C<br>நட்சத்திரம்: மகம்<br>உயரம்: 5' 11"<br>தகைமை/தொழில்: பட்டதாரி, B.B.A, அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: A/L<br>தொ.இ:B/9042 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>உயரம்: 5' 4"<br>தகைமை/தொழில்:A/L, IT, AccountsAssis, தனியார்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு, படித்தவர்<br>தொ.இ: G/9078 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>கி.பா: 24<br>உயரம்: 5' 9"<br>தகைமை/தொழில்: A/L, தனியார், கனடா<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ:B/9043 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: Biomedical phy sics Lauren,A.T,Toronto, தனியார்<br>எதிர்பார்ப்பு: Doctor,Engineer, Accountant, வெளிநாடு<br>தொ.இ: G/9080 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 3<br>கி.பா: செவ் 12 இல்<br>தகைமை/தொழில்:A/L, தனியார்<br>எதிர்பார்ப்பு: A/L<br>தொ.இ:B/9045 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 2<br>கி.பா: 65 செவ் 7 இல்<br>உயரம்: 5' 8"<br>தகைமை/தொழில்:B.Sc Computer science (Final Year)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி,அரசதொழில்<br>தொ.இ: G/9083 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 51 செவ் 1 இல்<br>உயரம்: 5' 6"<br>தகைமை/தொழில்: B.A (Hons), அபிவிருத்தி உத்தியோகத்தர், அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ:B/9047 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>கி.பா: 57 சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5' 3"<br>தகைமை/தொழில்:B.Sc,(Agriculture)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி,அரசதொழில்<br>தொ.இ: G/9089 |


கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# நினைவுத்தூபி திறந்து வைக்கப்பட்டு

# ஒதியமலை படுகொலையின் நினைவேந்தல் அனுஷ்டிப்பு









(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட எல்லைக் கிராமமான ஒதியமலையில்1984 ஆம்ஆண்டு இலங்கை இராணுவத்தால் ஈவிரக்கமின்றி சுட்டுக்கொல்லப்பட்ட 32 பொதுமக்களின் 34 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் நினைவுத் தூபி திறந்துவைக்கும் நிகழ்வும் நேற்றுக்காலை 9 மணிக்கு இடம்பெற்றது.

ஒதியமலையில் 1984 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தால் அதிகாலை வேளையில் கலந்துரையாடலுக்கென அழைத்து சென்று ஒதியமலை கிராம அபிவிருத்தி சங்க கட்டடத்தில் வைத்து ஈவிரக்கமின்றி சுட்டுக்கொல்லப்பட்ட 32 பொதுமக்களின் 34 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜாவின் 2 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் குறித்த 32 பொதுமக்களின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபியின் திறப்புவிழா' நிகழ்வும் ஒதியமலை பிள்ளையார் ஆலய வளாகத்தில் 32 பொதுமக்களின் நினைவாக அமைக்கப்பட்ட அன்னதான மண்டப திறப்புவிழாவும் இடம்பெற்றது.

முன்னாள் கிராம அபிவிருத்திச்சங்க தலைவர் கந்தசாமியின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், ஜி.ரி. லிங்கநாதன், து.ரவிகரன், ஒட்டுசுட்டான் பிரதேச சபை உறுப்பினர் சத்தியசீலன், நெடுங்கேணி பிரதேச சபை உறுப்பினர்களான ஜெயசுதாகர் செந்தூரன், கரைதுரைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன், முன்னாள் ஒதியமலை கிராம அலுவலர் வி.அருளானந்தம்,ஒதியமலை கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் இ.கிரிதரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

நிகழ்வின் வரிசையில் முதலில் 32 பொதுமக்களின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவு தூபியை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா திறந்து வைத்தார்.

தொடர்ந்து குறித்த சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்ட ஒதியமலை கிராமத்தை சேர்ந்த க.சிவபாதம் ,கி.இராசலிங்கம்,பொ.தேவராசா,வீ.தில்லைநடராசா,த.சதாசிவம் இ:பரமலிங்கம், கா.கணபதிப்பிள்ளை த.வேலுப்பிள்ளை த.சிவஞானம்,த.சுப்பிரமணியம்,கோ.கணபதிப்பிள்ளை, க.பொன்னம்பலம்,த.காசிப்பிள்ளை, ச.சண்முகசுந்தரம், க.கனகையா, அ.ஜெகநாதன், நா.சின்னையா, சி.இராசேந்திரம், வே.சிதம்பரபிள்ளை; வே.சந்திரன், ச.மோகநாதன், க.சிவசிதம்பரம், ச.சபாரத்தினம், ந.நவரத்தினம், க.சின்னையா, நா.கேதீஸ்வரன், சி.இராசையா, ச.ரவீந்திரன், க.தர்மலிங்கம், க.செல்வராஜா, அ.கெங்காதரன், ச.நடராசா ஆகிய 32 பேரினுடைய உறவினர்கள் வருகை தந்து நினைவுத்தூபிகளுக்கு மாலை அணிவித்து விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினர்.

நினைவுரைகளைத் தொடர்ந்து ஒதியமலை பிள்ளையார் ஆலயத்தில் விசேட ஆத்ம சாந்தி பிரார்த்தனைகள் இடம்பெற்று பின்னர் ஒதிய மலை பிள்ளையார் ஆலய வளாகத்தில் 32 பொதுமக்களின் நினைவாக அமைக்கப்பட்ட அன்னதான மண்டபம்திறந்து வைக்கப்பட்டு மக்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது. (2-281)




# சேமமடு கிராமத்தின் உட்கட்டுமான வசதிகள் தொடர்பில் அரச அதிபருடன் கலந்துரையாடல்

## மின்சாரவேலி அமைத்துத்தருவதாக தெரிவிப்பு



(பனிக்கன்குளம்)

சேமமடுகிராமத்தின் உட்கட்டுமான வசதிகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் எம்.கனீபா தலைமையில் நடைபெற்றது.

கிராம மக்கள் மற்றும் கிராமத்தின் பொது அமைப்புக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த கலந்துரையாடலில் பிரதானமாக சேமமடு கிராமத்தில் காட்டுயானைகளால் மக்களுக்கு ஏற்படும் ஆபத்துகள் தொடர்பாகவும், விவசாய அழிவுகள் தொடர்பாகவும் அரசாங்க அதிபருடன் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் சேமமடு வீதிகள் புனரமைப்பு, குளத்தைப் புனரமைத்தல், மக்களுக்கான வீட்டுத்திட்டம் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் மாவட்ட அரச அதிபரிடம் சுட்டிகாட்டப்பட்டிருந்தது.

அதன் அடிப்படையில் காட்டு யானைக்கான மின்சார வேலியை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்பதாக செய்து தருவதாகவும் மற்றும் புனரமைப்பு வேலைகளை படிப்படியாக செய்து தருவதாகவும் அரசாங்க அதிபரால் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சேமமடுவில் காட்டு யானைகளின் தொல்லைகள் அடிக்கடி ஏற்பட்டு வருவதுடன் அண்மையில் ஒருவர் யானை தாக்குதலிற்கு இலக்காகி பலியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், நகரசபை உறுப்பினர் சந்திரகுலசிங்கம் மோகன், மேலதிக அரசஅதிபர் தி.திரேஸ்குமார், பிரதேச செயலாளர் கா.உதயராசா , ஓய்வு பெற்ற கிராமசேவகர் முத்துராஜா, முன்னாள் பிரதேசசபை தலைவர் சிவலிங்கம், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

# பூநகரி வைத்தியசாலைக்குரிய

# நோயாளர் காவுவண்டியை விரைவில் திருத்தக் கோரிக்கை

(பூநகரி)

பூநகரி பொது வைத்தியசாலையில் சேவையில் ஈடுபடும் நோயாளர் காவு வண்டி சென்றவாரம் திருத்த வேலையின் நிமித்தம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளமையால் கடந்த 25 ஆம் திகதி தொடக்கம் நேற்றுவரை வைத்தியசாலைக்கு வருகின்ற அவசர சிகிச்சை பெற வேண்டிய நோயாளர்களை உடனடியாக வேறு வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்க முடியாத அவல நிலை காணப்படுவதாகவும் முழங்காவில் வைத்தியசாலையில் இருந்து நோயாளர் காவுவண்டியை வரவழைத்து நோயாளர்களை வெளி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பூநகரி பகுதியில் விபத்துக்கள் ஏற்படும் நிலையில் உடனடியாக அவசர சிகிச்சைக்கு வெளி மாவட்ட வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்க முடியாத நிலை இருப்பதால் உடனடியாக உரிய அதிகாரிகள் கூடிய கவனமெடுத்து பூநகரி வைத்திய சாலையிலிருந்து வெளிமாவட்டங்களுக்கு நோயாளர் காவு வண்டிச் சேவையை உடனடியாக ஏற்படுத்த வேண்டுமென பொது அமைப்புக்கள், நோயாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(2-84)



வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வவுனியா பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய கலாசார விழாவும், கலைஞர் கௌரவிப்பு நிகழ்வும் பிரதேச செயலாளர் க.உதயராசா தலைமையில் நேற்று முன்தினம் வவுனியா கிடாச்சூரி கருவேப்பங்குளம் அ.த.க.பாடசாலையில் நடைபெற்றது. நிகழ்வில் வவுனியா பிரதேச செயலகத்தினால் "வவுனியம்" எனும் நூல் வெளியீடு செய்து வைக்கப்பட்டது. (படங்கள்: குருமன்காடு செய்தியாளர்)

## முல்லைத்தீவில் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் மாபெரும் கவனயீர்ப்பு

### அனைவரையும் அணிதிரளுமாறு அழைப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை முல்லை.மாவட்ட செயலகம் முன்பாக பாரிய கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாகவும் அன்றைய தினம் தமது போராட்டத்திற்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவு வழங்கி தங்கள் பிள்ளைகளைத் தேடிக் கண்டறிய அணிதிரளுமாறு அவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமலாக்கப்பட்டவர்களது உறவினர்கள் தமது பிள்ளைகளைத் தேடி கடந்த வருடம் மார்ச் மாதம் எட்டாம் திகதி ஆரம்பித்த தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் இன்று 365 ஆவது நாளாகவும் முல்லைத்தீவில் தொடர்கிறது.

இந்நிலையில் எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை தமது பிள்ளைகளுக்கு நீதி வேண்டி மாபெரும் போராட்டம் ஒன்றை முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக நடத்தவுள்ளனர். அன்றையதினம் அனைத்துத் தரப்பினரையும் தமது போராட்டத்துக்கு ஆதரவு வழங்கி தங்கள் பிள்ளைகளைத் தேடி கண்டறிய அணிதிரளுமாறு கோரியுள்ளனர். (2-281)

## கிளிநொச்சியில் 6 ஆயிரத்து 18 மாணவர்கள் க.பொ.த.(சா/த) பரீட்சைக்கு தோற்றுகின்றனர்

### வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் 2018 க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்கு 6 ஆயிரத்து 18 மாணவர்கள் தோற்றுகின்றனர் என கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

2018 மாணவர்களில் 3 ஆயிரத்து 842 பேர் பாடசாலை பரீட்சாத்திகள் எனவும் இவர்களில் 2 ஆயிரத்து 176 மாணவர்கள் வெளிவாரியாகவும் தோற்றுகின்றனர். 42 பரீட்சை நிலையங்கள், 10 இணைப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன எனவும் பரீட்சைக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்திச் செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை நாடளாவிய ரீதியில் ஆறு இலட்சத்து 56 ஆயிரத்து 641 பரீட்சாத்திகளில் பாடசாலை பரீட்சாத்திகள் 4 இலட்சத்து 22 ஆயிரத்து 850 பேர் பரீட்சைக்கு தோற்றுகின்றனர். இதற்காக 4 ஆயிரத்து 661 பரீட்சை நிலையங்களும் 541 இணைப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன என இலங்கை பிரதி பரீட்சைகள் ஆணையாளர் எஸ்.பிரணவதாசன் தெரிவித்துள்ளார். (2-312)




### அடம்பன் பிரதேச வைத்தியசாலையில்

# கடமையாற்றுகின்ற வைத்தியர்கள் இருவரும் கடமைக்கு உரிய நேரத்திற்கு சமுகமளிப்பதில்லை

### பாதிக்கப்பட்ட கிராம மக்கள், நோயாளர்கள் விசனம்




(மன்னார்)

மன்னார் அடம்பன் பிரதேச வைத்தியசாலையில், உரிய நேரத்தில் வைத்தியர்கள் கடமைக்கு சமுகமளிக்காமையினால் குறித்த பிரதேச மக்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருவதாக அப்பகுதி மக்கள், பாதிக்கப்பட்ட நோயாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த வைத்தியசாலையில் வைத்தியர்களுக்கான விடுதியும் காணப்படுகின்றது.

கடந்த காலங்களில்வைத்தியசாலையில் ஏற்கனவே தென் பகுதியைச் சேர்ந்த சிங்கள வைத்தியர் ஒருவர் கடமையாற்றி வந்துள்ளார்.

இந்தக் காலப் பகுதியில் மக்கள் எவ்வித சிரமங்களும்இன்றி வைத்திய தேவைகளைப் பெற்று வந்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் குறித்த வைத்தியர் திடீர் என இடமாற்றம் பெற்றுச் சென்ற நிலையில் அடம்பன் பிரதேச வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் தேவை என்ற காரணத்தினால் மன்னாரைச் சேர்ந்த குறித்த வைத்தியர்கள் அடம்பன் வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டனர்.

எனினும் குறித்த இருவரும் நியமிக்கப்பட்ட காலத்தில் இருந்து தற்போது வரை வைத்தியசாலைக்கு உரிய நேரத்தில் சமுகமளிப்பது இல்லை எனவும் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் அதிகளவான நோயாளர்கள் வந்த பின் கடமையாற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் வைத்தியருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்திய பின்பே குறித்த வைத்தியர் வருகை தந்து நோயாளர்களை பார்வையிடுவதாகவும் விசனம் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சியாக அடம்பன் பிரதேச வைத்தியசாலைக்கு வைத்தியர்கள் உரிய நேரத்திற்கு கடமைக்கு வருவதில்லை எனவும் இதனால் அப்பிரதேச மக்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருவதாக அடம்பன் பிரதேச வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

தொடர்ச்சியாக குறித்த பிரச்சினை தொடர்பில் அடம்பன் பிரதேச வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழு மற்றும் கிராம மக்கள் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் முறைப்பாடு செய்தும் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

எனவே அடம்பன் பிரதேச மக்கள் மற்றும் பொது அமைப்புக்களை இணைத்து அடம்பன் பிரதேச வைத்தியசாலையின் வைத்தியர்களை இடமாற்றக் கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக அக் கிராம மக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (2-285)





கிளி/ கிளாலி றோ.க.த.க. பாடசாலையில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் 1.5 மில்லியன் ரூபா நிதியில் அமைக்கப்பட்ட சுற்றுமதில் திறப்பு விழாவும் மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் அதிபர் அ.கஜேந்திரன் தலைமையில் கடந்த 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் திருமதி ஜெயராணி பரமோதயன், பாராளுமன்ற உறுப்பினர் சார்பில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சு.சுரேன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.தர்மலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

# அபிவிருத்தித் திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிச் செல்லும் நிலையில் உள்ளது

### மாந்தை கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச சபையில் நிதியை செலவு செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாக தவிசாளர் தயானந்தன் தெரிவித்துள்ளார்.

மாந்தை கிழக்கு பிரதேச சபையில் அண்மையில் விசேட பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு மக்களுக்கான அபிவிருத்தி வேலைகளில் உள்ள இடர்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

அபிவிருத்தி நிதிகள் மத்திய அமைச்சுக்களில் இருந்து நிதிகள் பெறப்பட்டு வந்து பிரதேச சபை உறுப்பினர்கள் ஊடாக அபிவிருத்தியை மேற்கொண்டு வந்துள்ளோம்.

அதில் ஒன்றாக வீதி அபிவிருத்தித் திட்டம் 14 வீதிகளுக்கும் கைத்தொழில் வணிக அமைச்சர் றிசாத் பதியுதீன் ஊடாக 28 மில்லியன் ரூபாவும் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் ஊடாக 2 மில்லியன் ரூபாவும் பொதுக் கிணறுகளுக்கு மீள் குடியேற்ற அமைச்சின் ஊடாக 0.5 மில்லியன் ரூபாவும், பொதுக் கிணறு ஆழமாக்கலுக்கு 0.8 மில்லியன் ரூபாவும், மலசலகூடங்கள் அமைப்பதற்கு அமைச்சர் றிசாத் பதியுதீன் ஊடாக 55 மில்லியன் ரூபாவும், தபால் நிலைய வீதி அபிவிருத்திக்கு நல்லிணக்க அமைச்சின் ஊடாக 0.8 மில்லியன் ரூபாவும்,செல்வபுரம் வீதி வீதி அபிவிருத்தி திணைக்களம் ஊடாக 15 மில்லியன் ரூபாவும்,சிவபுரம் 03 ஆம் வாய்க்கால் பிரதான வீதிக்கு 10 மில்லியன் ரூபாவும்கிடைக்கப்பெற்றுள்ளது.

அதேவேளை பிரதேச செயலகம் ஊடாகவும், விவசாய திணைக்களம் ஊடாகவும் மத்திய அமைச்சர் ஊடாக பிரதேச சபைக்கு கொண்டுவந்த நிதிகளுக்கும் இடர்பாடு ஏற்பட்டுள்ளது.

அந்த இடர்பாட்டை நீக்கும் முகமாக இந்த விசேட பொதுக்கூட்டம் நடத்தியுள்ளோம். பிரதேச சபைக்கு தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் இரண்டு பேர் நியமிக்க முடியும். ஒருவரே இருக்கின்ற காரணத்தாலும் அவர் வேறு மாவட்டத்தில் இருந்து வருகின்றபடியால் தன்னால் இவ்வளவு வேலைகளை செய்ய முடியாது என்று எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால் வேலைகள் தொடர்பான மதிப்பீடுகள் கிடைப்பதற்கு நாட்கள் செல்கின்றன.

சபையில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு இன்னுமொரு தொழில் நுட்ப உதவியாளர் தருமாறு உள்ளூராட்சிஉதவி ஆணையாளர் ஊடாக மாகாண உள்ளூராட்சி மன்றத்திற்கு கடிதம் ஒன்றினை அனுப்பியுள்ளோம்.

இதுவரை இந்த பிரதேசத்திற்கு இவ்வாறான நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கவில்லை. தவிசாளர் என்ற வகையில்என்னால்கொண்டுவரப்பட்ட 15கோடிக்கு மேற்பட்ட பணத்தினை இங்கு அபிவிருத்திக்கு நடைமுறைப்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. பிரதேச சபை மூலம் பொது மலசலகூடம் அமைப்பதற்கான கணக்கறிக்கை கூட இன்னும் கிடைக்கவில்லை.

மக்களின் வரிப்பணத்தில் பெறப்பட்ட வாகனங்கள் மழையில் நனைகின்றன. கடந்தாண்டு எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு இதுவரை கணக்கு அறிக்கை கூட கிடைக்கவில்லை.

இதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுக்கவேண்டும்.இல்லையேல் சபையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளார்கள். டிசெம்பர் மாத கூட்டத்தினை புறக்கணித்து மக்கள் மத்தியில் இதனை அறிவித்து சபையில் இருந்து வெளியேறுவதாக அனைத்து உறுப்பினர்களும் முடிவெடுத்துள்ளார்கள்.

மின்விளக்கு கிடைத்தும் பொருத்த முடியாமல் காணப்படுகின்றது.

அனைத்து அபிவிருத்தித் திட்டங்களும் கொண்டுவரப்பட்டு அவை அனைத்தும் திரும்பிப்போகும் நிலையில் இங்குள்ள அதிகாரிகள் ஒவ்வொரு காரணங்களும் சொல்லி இடர்பாடுகளை சொல்லி வருகின்றார்கள்.

வீதிகள் எடுத்த ஒப்பந்தகாரர்களும் சிக்கலால் அவர்கள் அந்த வேலையை செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. இன்னும் ஓரிரு நாட்களுக்குள் பதில் கடமை செய்யக்கூடிய தொழில்நுட்ப உத்தியோகத்தர் இல்லாத பட்சத்தில் இந்த மக்களுக்கான அபிவிருத்திகளை செய்ய முடியாத நிலைகாணப்படும்.

சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத் திற்கு அமைவாக சபையை ஆணையாளரிடம் ஒப்படைத்து மக்கள் மத்தியில் வெறுமையாக செல்ல வேண்டும் என்று தீர்மானம் எடுத்துள்ளார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுக்காத விடத்து இது நடைமுறைக்கு வரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (2-281)

# ரணில் ஆட்சியில் போதித்து வந்த பயங்கரவாதத்தின் விளைவே இரண்டு பொலிஸார் படுகொலை



## மகிந்த அணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

**மட்டக்களப்பு வவுணதீவு பிரதேசத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை சாதாரண படுகொலையாக கருதக்கூடாது என்று தெரிவித்திருக்கும் மகிந்த அணியினர், ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் கடந்த மூன்றரை ஆண்டுகால ஆட்சியில் மீண்டும் போதித்துவந்த பயங்கரவாதத்தின் விளைவே இந்தப் படுகொலை என்றும் குற்றம் சுமத்தியுள்ளது.**

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும, கொழும்பு பிளவர் வீதியிலுள்ள பிரதமர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு இந்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்ககடந்த மூன்று ஆண்டுகள் எட்டு மாத கால ஆட்சியில் நாட்டில் மீண்டும் பிரிவினைவாத சக்திகளுக்கு தலைதூக்குவதற்கான சூழலை ஏற்படுத்திக்கொடுத்துள்ளார்.

அதேவேளை தடைசெய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் துணை அமைப்புக்கள் பலவற்றுக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கிய ரணில் அரசாங்கம், சர்வதேச ரீதியில் அவற்றுக்கான அங்கீகாரத்தையும் பெற்றுக்கொடுக்கவும் துணை போயிருந்ததாகவும் டளஸ் சாடினார்.

இத்துடன் நின்றுவிடாது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழிப்பதற்கு முக்கிய பங்கு வகித்திருந்த புலனாய்வுத் துறைகளைச் சேர்ந்த தளபதிகள் மற்றும் புலனாய்வாளர்கள் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களை சுமத்தி அவர்களை கைதுசெய்து சிறையில் அடைத்து நாட்டின் புலனாய்வுத்துறையை முழுமையாக செயலிழக்கச் செய்துவிட்டதாகவும் டளஸ் குற்றம்சாட்டினார்.

இந்தப்பின்னணியில்தான் மட்டக்களப்பு வவுணதீவு பாலத்திற்கு அருகில் அமைந்துள்ள பொலிஸ் சோதனைச் சாவடியில்கடமையிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரை நவம்பர் 30 ஆம் திகதி அதிகாலை மிகக் கொடூரமாக படுகொலை செய்த சம்பவத்தை வெறுமனே ஒரு படுகொலை சம்பவமாக கருதி செயற்பட முடியாது என்று தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பில் எழுந்துள்ள மிகவும் மோசமான ஆபத்தாக கருதி அனைத்து மட்டங்களிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

### போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக

## யாழ்.பல்கலை.மாணவர்களால் வேரூன்றி நிதியம் அங்குரார்ப்பணம்



(யாழ்ப்பாணம்)

போரால் பாதிக்கப்பட்டு நலிவுற்றுள்ள மற்றும் வறுமைக்கோட்டுக்குட்பட்டுள்ள குடும்பங்களின் எதிர்காலத்தை வளப்படுத்தும் நோக்கில், யாழ். பல்கலைக்கழகத்தின் 32 ஆம் அணி மாணவர்களால் வேரூன்றி என்ற நிதியம் நேற்று முன்தினம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த அங்குரார்ப்பண நிகழ்வு கொக்குவில் செல்வாபலஸ் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன் ஆரம்ப கட்ட செயற்பாடாக வடமராட்சி ஆழியவளையை சேர்ந்த போரால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றுக்கு குழாய்க் கிணறு அமைப்பதற்கு நிதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த நிதியத்துக்கான செயற்குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் 6 பேர், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, மலையகம், திருகோணமலை மாவட்டங்களை சேர்ந்த தலா 3 பேரும், மட்டக்களப்பு அம்பாறையை சேர்ந்த 3 பேரும் என செயற்குழு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. (இ-9)

## தேர்தலைக்கோரி ஆர்ப்பாட்டம்



(அம்பாறை)

பாராளுமன்றத் தேர்தலை உடனடியாக நடத்துமாறு கோரி நேற்று முன்தினம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

அம்பாறை - ஹிகுரான, மெனிக்கின்ன, அவிசாவளை, தெவுந்தர, பிலியந்தலை மற்றும் ஹொரவபொத்தான ஆகிய பகுதிகளில் இந்த ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன. (இ-7)

## வீதியை ஆக்கிரமித்த கடல்நீர் அச்சத்துடன் பயணிக்கும் மக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி தொண்டைமானாறையும், அச்சுவேலி இடைக்காட்டையும் இணைக்கும் வீதியை மூடி கடல் நீர் தேங்கி நிற்பதால் பயணிகள் ஆபத்தான நிலையில் பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர்.



மழைகாலத்தில் கடல் நீர் பெருக்கெடுப்பதனால் இந்த நிலை தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது. குறித்த வீதியில் மின்விளக்கு மற்றும் எச்சரிக்கை சமிக்ஞைகள் எதுவும் காணப்படாததால் குறித்த வீதியால் பயணிப்போர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, பொதுமக்களின் நன்மை கருதி பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இதைக் கவனத்தில் எடுத்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-9)

### ஐ.தே.கவின் கோரிக்கையை கடவுள் கூட ஏற்கமாட்டார்

## அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் சீரான முறையில் இடம்பெறுகின்றன



### அமைச்சர் சுசில் கூறுகிறார்

(மஹரகம)


அரச நிறுவனங்களின் செயற்பாடுகள் சீரான முறையில் இடம் பெற்றுவருவதாக அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த தெரிவித்தார்.

தேசிய சுதந்திர முன்னணி மஹரகமவில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் அமைச்சர் இவ்வாறு உரையாற்றினார்.

தற்போதைய அரசாங்கத்தின் கீழ் மூன்றாவது தடவையாக எரிபொருளின் விலை குறைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய தேசியக்கட்சியினர் கதிர்காமம் வரை பாதயாத்திரை செல்வதாக தெரிவித்துள்ளனர்.

அவர்களின் கோரிக்கையை கடவுள் கூட ஏற்றுக் கொள்ளமாட்டார் என்றும் அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த தெரிவித்தார். (இ-7)



## விளையாடுவதை நிறுத்திவிட்டு

# அரசியல் நெருக்கடி நிலையை திருத்தியமைக்க வேண்டும்

## ஜனாதிபதியிடம் ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா வலியுறுத்து

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் நெருக்கடி நிலையை அவரே திருத்தியமைக்க வேண்டும் என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

ஜே.வி.பியின் தலைமை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய போதே அக்கட்சியின் பிரதம செயலாளர் ரில்வின் சில்வா, இதனைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பானது சர்வதேச சமூகத்தின் பொழுதுபோக்காக மாறிவிட்டது. குறிப்பாக அவர்களை எவரும் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்நிலையில் நாடாளுமன்றத்திற்கு வருகை தந்து விளையாடிக்கொண்டிருக்கின்றார்கள்.

அவர்கள் நாடாளுமன்றத்திற்கு வருகை தந்து உணவருந்திவிட்டு அங்கு அறை ஒன்றினுள் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பின்னர் பின்கதவால் நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறு கின்றனர்.

இது எந்தவொரு நாடாளுமன்றத்திலும் நடக்காத செயற்பாடு என கூறிய அவர், இவை அனைத்தும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நிகழ்ந்தது என்றும் அதற்கு அவரே பொறுப்புக் கூறவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# மீள ஜனாதிபதியாகும் ஆசை காரணமாகவே மூர்க்கத்தனமாகச் செயற்படுகிறார் மைத்திரி



## சரத் பொன்சேகா கடும் தாக்கு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஒருவரே ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்படுவாரென அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே ஜனாதிபதி மைத்திரிபால. சிறிசேன மூர்க்கத்தனமான செயற்பாடுகளில் ஈடுபடுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பு- வத்தளை பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"ஜனாதிபதி சிந்திக்காமல் ஒவ்வொரு நேரத்துக்கும் ஒவ்வொரு விதமாக பேசுகின்றார். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை மறந்து ஜனநாயகத்துக்கு விரோதமான செயற்பாடுகளையே தொடர்ந்தும் செய்து வருகிறார்.

இதற்குக் காரணம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியிலுள்ள ஒருவரை பொது வேட்பாளராக நிறுத்துவோமென அறிவிக்கப்பட்ட நாள் முதல் ஜனாதிபதி, ஐ.தே.கவுக்கு எதிரான செயற்பாடுகளை மேற்கொள்ள ஆரம்பித்தார்.

அந்தவகையில் தற்போது அதன் விளைவு அரசியலில் பாரிய நெருக்கடியைக் தோற்றுவித்து நாட்டிலும் அமைதியின்மையை ஏற்படுத்தியுள்ளது. இதேவேளை ஜனாதிபதியைக் கொலை செய்யும் சதித்திட்டத்தில் எனக்கும் தொடர்புள்ளதாக கூறப்பட்டு வருகின்றமையை வன்மையாக கண்டிக்கின்றேன்" எனவும் சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார். (இ-7)

## புதிய பிரதமரை நியமிக்கத் தயார்

# ஐ.தே.கட்சியின் கனவு ஒருபோதும் நனவாகாது



## சந்திம வீரக்கொடி உறுதி

(கொழும்பு)

புதிய பிரதமர் ஒருவரை நியமிப்பதற்கான பிரேரணை சபையில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்டால் புதிய பிரதமரை நியமிக்க தயாராகவுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி, ரணில் விக்கிரமசிங்கவை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிரதமராக நியமிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார். மேலும் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமராக நியமிக்கப்படுவார் என்ற ஐக்கிய தேசிய கட்சியின் கனவு ஒருபோதும் நிறைவேறப்போவதில்லை.

அத்தோடு நாட்டில் தொடரும் நெருக்கடி நிலைமைக்கு விரைவில் பொதுத் தேர்தல் ஒன்றுக்கு செல்வதன் மூலமே தீர்வு காண முடியும். எனினும் தேர்தலுக்கு முகங்கொடுப்பதற்கான தைரியம் ஐ.தே. கவுக்கு இல்லை. அதனாலேயே இவ்வாறு நேரத்தை வீணடிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

## ஆசிகளும் வாழ்த்துக்களும்

(யாழ்ப்பாணம்)

இன்று ஆரம்பமாகும் க.பொ.த. (சா/த) பரீட்சையில் தோற்றும் மாணவச் செல்வங்கள் அனைவரும் பரீட்சையில் சித்தி பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் சார்பாக வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் கூறிக்கொள்கின்றோம் என அந்த அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (இ)

# வவுணதீவில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரின் உடல் நல்லடக்கம்









(நீலாவணை)

மட்டக்களப்பு வவுணதீவில் கடந்த 30 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் கணேஸ் தினேஸின் இறுதிச்சடங்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை கிழக்கு மாகாண ஆளுநரின் பிரசன்னத்துடனும் ஜனாதிபதி, பொலிஸ் மா அதிபர் ஆகியோரின் இரங்கலுரையுடனும் பொலிஸ் மரியாதையுடனும் அவரது சொந்த ஊரான பெரிய நீலாவணை பொது மயானத்தில் இடம்பெற்றது.

குறித்த இறுதிச்சடங்கில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்ட உடலை பொது மயான த்திற்கருகில் வைத்து பொலிஸார் பொறுப்பேற்றுக்கொண்டு பூரண பொலிஸ் மரியாதையுடன் 39 துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இறுதிச் சடங்கிற்கு கிழக்கு மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் கப்பில ஜயசேகர, அம்பாறை மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நுவன் வெதசிங்ஹ, அம்பாறை பொலிஸ் அத்தியட்சகர் சாமந்த விஜேசேகர உட்பட உயர் பொலிஸ் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினதும் பொலிஸ்மா அதிபரினதும் இரங்கலுரைகள் வாசிக்கப்பட்டன. (இ-7)

பாரதம்

# ஸ்டெர்லைட் ஆய்வுக்குழுவுக்கு ஆலையை மீண்டும் திறக்கும் அதிகாரம் இல்லை

## -கடம்பூர் ராஜு தெரிவிப்பு-



(தூத்துக்குடி)

தூத்துக்குடி, ஸ்டெர்லைட் ஆலையை மீண்டும் திறக்கும் அதிகாரம் மாநில அரசாங்கத்துக்குத்தான் இருக்கிறது என்று தமிழக அமைச்சர் கடம்பூர் ராஜு தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் வைத்து நேற்றையதினம் செய்தியாளர்களை சந்தித்த அவர்,

"தமிழக அரசாங்கம் எப்போதும் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டே செயற்படும். ஸ்டெர்லைட் ஆலையின் பிரச்சினை என்ன, அதன் தன்மை என்ன என்பது குறித்து மட்டும்தான் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி தருண் அகர்வால் தலைமையிலான குழு ஆய்வு செய்ய அனுப்பப்பட்டது.

மேலும் அந்த ஆய்வறிக்கை தற்போது தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதில், ஆலையைத் திறக்க வேண்டும், மூட வேண்டும் என கருத்துக் கூறுவதற்கு அந்தக் குழுவுக்கு எந்த அதிகாரமும் கிடையாது.

ஆய்வறிக்கையில் கருத்து தெரிவித்தாலும், பசுமைத் தீர்ப்பாயம் என்ன நிலைப்பாடு எடுத்தாலும் சரி, அந்த ஆலை இயங்க மாநில அரசின் சுற்றுச்சூழல் வாரியத்தின் உரிமம் இருந்தால் மட்டுமே இயங்க முடியும்.

ஸ்டெர்லைட் ஆலை மீண்டும் இயங்காது என்பதில் தமிழக அரசு தெளிவாக உள்ளது. தவறான கருத்துகள் பொதுமக்களிடையே பரப்பப்பட்ட காரணத்தினால்தான் 13 உயிர்கள் பறிபோய்விட்டன.

எனவே, இதுபோன்ற மக்களைத் தூண்டி விட வேண்டாம். இதை அரசியலாக்கிப் பார்க்க வேண்டாம்" என்று அவர் கூறினார். (7)

# டீசல் விலை உயர்வுக்கு எதிர்ப்பு; பிரான்சில் மக்கள் போராட்டம்

## பொலிஸார் கண்ணீர்ப்புகை குண்டு வீச்சு



(பாரிஸ்)

பிரான்சில் டீசல் விலை உயர்வை எதிர்த்து நடைபெறும் போராட்டம் வன்முறையாக வெடித்த நிலையில் வன்முறைக்கு அடிபணிய மாட்டேன் என ஜனாதிபதி இமானுவேல் மேக்ரான் தெரிவித்துள்ளார்.

டீசல் விலை உயர்வை எதிர்த்து பிரான்சில் கடந்த 3 வாரங்களாக பொதுமக்கள் மஞ்சள் நிறத்தில் மேலாடைகளை அணிந்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

பாதுகாப்பு கருதி தலைநகர் பாரிசில் உள்ள புகழ்பெற்ற சுற்றுலாத்தலமான சாம்ஸ் எலிசீசை பொலிஸார் நேற்று மூடினர். மேலும் அங்குவந்த பொதுமக்களை சோதனை செய்தனர்.

இதனால் பொலிஸாருக்கும், போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இதை முன்கூட்டியே எதிர்பார்த்து பல கடைகள், வங்கிகள் மற்றும் ஹோட்டல்கள் மூடப்பட்டன.


இதற்கிடையே பொலிஸார் மீது போராட்டக்காரர்கள் மஞ்சள் நிற பெயிண்டை வீசினர். அதனால் வன்முறை வெடித்தது. எனவே அவர்களை கலைக்க பொலிஸார்கண்ணீர்புகை குண்டுகளை வீசி னார்கள்.

இதேபோல், பிரான்ஸ் முழுவதும் 1,600 இடங்களில் போராட்டம் வெடித்தது. அதில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். சில இடங்களில் போராட்டக்காரர்கள் வன்முறையிலும் ஈடுபட்டு பொது சொத்துகளை நாசப்படுத்தினர். சில போராட்டக்காரர்கள் முகமூடிகளை அணிந்து கொண்டு பொலிஸாரின் தடுப்புகளை உடைத்தனர். இதனால் அங்கு பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது.

இந்நிலையில், ஜி-20 உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக ஆர்ஜென்டீனா நாட்டுக்கு சென்றுள்ள பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மேக்ரான், வன்முறைக்கு நான் அடிபணிய மாட்டேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக, பியுனஸ் அய்ரஸ் நகரில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அவர், பேச்சுவார்த்தை மற்றும் விவாதம் மூலமாக எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண அரசு தயாராக உள்ளது. வன்முறையை நான் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளமாட்டேன் என தெரிவித்தார். (7)

# காட்டுப்பகுதியில் விசித்திர உயிரினம்



(டில்லி)

ஏலியன் போன்ற உருவம் கொண்ட விசித்திர உயிரினம் ஒன்று காட்டுப்பகுதியில் சுற்றித் திரிந்ததால், அது தொடர்பான புகைப்படம் தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

தற்போது இருக்கும் உலகில் வானில் விசித்திரமாக ஏதேனும் பறந்தால், அது ஏலியனாகத்தான் இருக்கும் என்று தகவல்கள் வெளியாகின்றன.

இந்தியாவில் இருக்கும் ஆந்திரா மாநிலத்தில் விசித்திரமான உயிரினம் காட்டுப்பகுதியில் சுற்றித் திரிந்துள்ளது.

அதன் தலையை பார்க்கும் போது ஏலியன் போன்று இருக்கிறது. ஆனால் அதன் உடலமைப்பை பார்த்தால் விலங்கு போன்று இருக்கிறது. (7)

# சிரியா-அமெரிக்கா கூ

## 30 பேர் உயிரிழப்பு



(டமாஸ்கஸ்)

சிரியா நாட்டில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினர் நடத்திய வான்வழி தாக்குதலில் 30 பேர் கொல்லப்பட்டனர்.

சிரியாவில் அரசுக்கு எதிராக உள்ளூர் கிளர்ச்சியாளர்கள் வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர். ஐ.எஸ். குழுவினரும் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்கி உள்ளனர். இவர்களை கட்டுக்குள் கொண்டுவர இராணுவம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

சிரியாவுக்கு ஆதரவாக அமெரிக்கா தலைமையிலான கூட்டணி படை மற்றும் ரஷ்ய ஆதரவு பெற்ற அரசு படைகள் ஆகியவையும் போரில் இறங்கி உள்ளன. சிரியாவில் இதுவரை குழந்தைகள், பெண்கள் உட்பட இலட்சக்கணக்கான பொதுமக்கள் குண்டுகளுக்கு இரையாகி உள்ளனர்.

இந்நிலையில், ஈராக் எல்லை அருகே டெயிர் அல் சோர் மாகாணத்தில் வசித்து வந்தவர்கள் மீது அமெரிக்க கூட்டுப் படையினர் நேற்று வான்வழி தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் பெண்கள்

# 12 ஆண்டுகளுக்கு இந்தியா,ரஷ்யா,சீனா முத்தரப்பு பேச்சுவ



(பியூனஸ் அய்ரெஸ்)

ஆர்ஜென்டீனா நாட்டில் இந்தியா, ரஷ்யா, சீனா இடையே 12 ஆண்டுகளுக்கு பின்னர் நடைபெற்ற முத்தரப்பு பேச்சுவார்த்தையில் பிரதமர் மோடி பங்கேற்றார்.

ஆர்ஜென்டீனா நாட்டின் தலைநகர் பியூனஸ் அய்ரெஸ் நகரில் நடைபெற்று வரும் ஜி-20 உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக இங்கு வந்துள்ள பிரதமர் நரேந்திர மோடி, சவுதி அரேபியா பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் உள்ளிட்ட உலக தலைவர்களை சந்தித்து ஆலோசனை நடத்தினார்.

பின்னர், ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே மற்றும் அமெரிக்க

# அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி இந்தியப் பிரதமர் மோடி



(வோஷிங்டன்)

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் எச்.டபிள்யூ புஷ் மறைவுக்கு பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி

# வெளிநாடு

## கூட்டுப்படை தாக்குதல்

## ப்பு; பலர் படுகாயம்



மற்றும் குழந்தைகள் உட்பட 30 பேர் பலியாகினர். மேலும், பலர் படுகாயம் அடைந்துள்ளனர்.

தகவலறிந்து அங்கு மீட்புப் படையினர் விரைந்து சென்றனர். அவர்கள் காயம் அடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலைகளில் சிகிச்சை அளித்து வருகின்றனர்.

காயம் அடைந்தவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை உயரலாம் என மீட்புக்குழுவினர் தெரிவித்துள்ளனர். (7)

## இந்தோனேசியா சிறையில் இருந்து தப்பிச் சென்ற 36 கைதிகள் கைது

### -77 பேருக்கு வலை வீச்சு-

(ஜகார்த்தா)

இந்தோனேசியா நாட்டின் சிறையில் இருந்து தப்பிச் சென்றவர்களில் 36 கைதிகளை பொலிஸார் கைது செய்தனர். தலைமறைவாக இருக்கும் மேலும் 77 பேரை தேடி வருகின்றனர்.

இந்தோனேசியா நாட்டின் அசே மாகாணத்தில் உள்ள பன்டா அசே பகுதியில் உள்ள மத்திய சிறையில் இருந்து கடந்த மாதம் 29ஆம் திகதி மாலை 113 கைதிகள் தப்பியோடி விட்டனர்.

இங்கு அடைத்து வைக்கப்பட்டுள்ள 726 கைதிகள் கூட்டுத் தொழுகைக்காக திறந்து விடப்பட்டபோது, இந்த சந்தர்ப்பத்தை சாதகமாக்கி, சிறையின் கம்பி வேலியை வெட்டி அவர்கள் தப்பிச் சென்றதாக ஊடகங்கள் தெரிவித்திருந்தன.

தப்பியோடிய கைதிகளை பிடிப்பதற்காக நாடு முழுவதும் பொலிஸார் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், தப்பிச் சென்ற கைதிகளில் இதுவரை 36 பேரை பொலிஸார் கைது செய்தனர். தலைமறைவாக இருக்கும் மேலும் 77 பேரை தேடி வருகின்றனர். அவர்களும் விரைவில் பிடிபடுவார்கள் என அசே மாகாண பொலிஸ் செய்தி தொடர்பாளர் எரி அப்ரியோனோ நம்பிக்கை தெரிவித்துள்ளார். (7)

## புடினுடன் ட்ரம்ப் பேசியதாக வெள்ளை மாளிகை அறிவிப்பு

(வோஷிங்டன்)

ஆர்ஜென்டீனா நாட்டில் ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் ட்ரம்ப் பேசியதாக அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

உக்ரேய்ன் நாட்டைச் சேர்ந்த 3 கடற்படை கப்பல்களை அண்மையில் கிரிமியா அருகே ரஷ்ய இராணுவம் தாக்குதல் நடத்தி கைப்பற்றியதில் இருந்து மீண்டும் போர்ப்பதற்றம் உருவாகி உள்ளது.

இதனால் ஆர்ஜென்டீனாவில் நடைபெற்ற ஜி-20 மாநாட்டில் ரஷ்ய ஜனாதிபதி



புடினை சந்திக்க திட்டமிட்டிருந்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் இந்த சந்திப்பை கடைசி நேரத்தில் ரத்து செய்து விட்டார்.

இந்நிலையில், ஜி-20 மாநாட்டின் நிறைவுநாளான நேற்று நடைபெற்ற விருந்து நிகழ்ச்சியின்போது ட்ரம்ப்பும் புடினும் 'சம்பிரதாயமாக' பேசிக் கொண்டதாக அமெரிக்க ஜனாதிபதி வெள்ளை மாளிகை நேற்று அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

அவர்களுக்கு பக்கத்தில் அமர்ந்திருந்த புடினுடன் ட்ரம்ப் சிறிது நேரம் சம்பிரதாயமாக பேசினார் என வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் சாரா சான்டர்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்த விருந்தின் போது உக்ரேய்ன் விவகாரம் தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதியின் கேள்விகளுக்கு புடின் விளக்கம் அளித்ததாக ரஷ்ய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (7)

## கு பின்னர் ா இடையே வார்த்தை



ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆகியோருடன் முத்தரப்பு ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனை தொடர்பாக கருத்து வெளியிட்ட பிரதமர் மோடி, ஜப்பான், அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளின் பெயர்களில் உள்ள முதல் எழுத்துகளை குறிப்பிட்டு "JAI" என்றால் ஹிந்தியில் வெற்றி என்று அர்த்தம் என தெரிவித்திருந்தார்.

இந்த ஆலோசனைக்கு பிறகு சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் மற்றும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஆகியோருடன் மற்றொரு முத்தரப்பு பேச்சுவார்த்'தையில் மோடி பங்கேற்றார்.

RIC என்றழைக்கப்படும் ரஷ்யா, இந்தியா, சீனா நாட்டின் இந்த கூட்டமைப்பின் சார்பில் கடந்த 12 ஆண்டுகளுக்கு முன்னர் முதல் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அதன் பின்னர் மூன்று நாட்டு தலைவர்களும் முத்தரப்பு பேச்சுவார்த்தையில் பங்கேற்று ஆலோசிக்காத நிலையில், 12 ஆண்டுகளுக்கு பின்னர் தற்போது நடந்துள்ள இந்த பேச்சுவார்த்தை முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. (7)

## திபதி மறைவுக்கு ாடி இரங்கல்!

ஜோர்ஜ் எச்.டபிள்யூ புஷ் மறைவுக்கு பிரதமர் நரேந்திரமோடி இரங்கல் தெரிவித்து உள்ளார். மறைந்த முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் இந்தியாவுடன் நெருங்கிய நட்புறவுடன் இருந்தார் என கூறியுள்ளார்.

இதுதொடர்பாக பிரதமர் மோடி தனது டுவிட்டர் பக்கத்தில், "ஜோர்ஜ் பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கும் அமெரிக்க மக்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கின்றேன். உலகத்தில் முக்கியமான காலகட்டத்தில் அவர் சிறந்த தலைவராக செயற்பட்டார்" என்று கூறியுள்ளார். (7)

## உக்ரேய்ன் ஆட்சியாளர்கள் பதவியில் இருக்கும்வரை போர் நிலை தொடரும்

### -ரஷ்ய ஜனாதிபதி திட்டவட்டம்-



(பியுனஸ் அய்ரெஸ்)

உக்ரேய்ன் நாட்டின் பிரச்சினையை தீர்ப்பதில் அக்கறை காட்டாத ஆட்சியாளர்கள் பதவியில் இருக்கும்வரை போர் தொடரும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

உக்ரேய்ன் நாட்டுக்கு சொந்தமான கிரிமியா பகுதியை கடந்த 2014 இல் ரஷ்யா தன்னுடன் இணைத்ததில் இருந்து இரு நாடுகளுக்குமிடையே பதற்றமான சூழல் நிலவி வருகிறது.

உக்ரேய்ன் நாட்டைச் சேர்ந்த 3 கடற்படை கப்பல்களை அண்மையயில் கிரிமியா அருகே ரஷ்ய இராணுவம் தாக்குதல் நடத்தி கைப்பற்றியதில் இருந்து இருநாடுகளுக்கு இடையே மீண்டும் போர்க் பதற்றம் உருவாகி உள்ளது.

இந்த பனிப்போரை மேலும் தீவிரப்படுத்தும் வகையில் ரஷ்யாவை சேர்ந்த 16-60 வயதுக்குட்பட்ட ஆண்கள் தங்கள் நாட்டுக்குள் நுழைய உக்ரேய்ன் அரசு சமீபத்தில் தடை விதித்துள்ளது. உக்ரேய்னின் இந்த அதிரடி நடவடிக்கைக்கு பதிலடியாக இதே போன்ற தடையை விதிக்கும் எண்ணம் ஏதுமில்லை என ரஷ்யா தெரிவித்தது.

இந்நிலையில், உக்ரேய்ன் நாட்டின் பிரச்சினையை தீர்ப்பதில் அக்கறை காட்டாத ஆட்சியாளர்கள் பதவியில் இருக்கும் வரை போர் தொடரும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தற்போது திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

ஆர்ஜென்டீனா தலைநகர் பியுனஸ் அய்ரெஸ் நகரில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த புடின், "ரஷ்யா-உகரேய்ன் இடையில் நீண்டு வரும் பிரச்சினைக்கு அமைதியான முறையில் தீர்வு காண்பதில் அந்நாட்டின் தலைமை பொறுப்பில் உள்ளவர்களுக்கு அக்கறை இல்லை. எனவே, தற்போதுள்ள ஆட்சியாளர்கள் பதவியில் இருக்கும்வரை இருநாடுகளுக்கும் இடையிலான போர் தொடரும்' என்று தெரிவித்தார். (7)

## 16-60 வயதிற்குட்பட்ட ரஷ்ய ஆண்களுக்கு உக்ரேய்ன் நாட்டுக்குள் நுழையத் தடை

(கீவ்)

பனிப்போரை மேலும் தீவிரப்படுத்தும் வகையில் ரஷ்'யாவை சேர்ந்த 16-60 வயதுக்குட்பட்ட ஆண்கள் தங்கள் நாட்டுக்குள் நுழைய உக்ரேய்ன் அரசு நேற்று தடை விதித்துள்ளது.

உக்ரேய்ன் நாட்டுக்கு சொந்தமான கிரிமியா பகுதியை கட்ந்த 2014 இல் ரஷ்யா தன்னுடன் இணைத்ததில் இருந்து இரு நாடுகளுக்குமிடையே பதற்றமான சூழல்நிலவி வருகிறது.

உக்ரேய்ன் நாட்டைச் சேர்ந்த 3 கடற்படை கப்பல்களை சமீபத்தில் கிரிமியா அருகே ரஷ்ய ராணுவம் தாக்குதல் நடத்தி கைப்பற்றியதில் இருந்து இருநாடுகளுக்கு இடையே மீண்டும் போர்ப்பதற்றம் உருவாகி உள்ளது.

இந்நிலையில், இந்த பனிப்போரை மேலும் தீவிரப்படுத்தும் வகையில் ரஷ்யாவை சேர்ந்த 16-60 வயதுக்குட்பட்ட ஆண்கள் தங்கள் நாட்டுக்குள் நுழைய உகரேய்ன் அரசு தடை விதித்துள்ளது. உக்ரேய்னின் இந்த அதிரடி நடவடிக்கைக்கு பதிலடியாக இதே போன்ற தடையை விதிக்கும் எண்ணம் ஏதுமில்லை என ரஷ்யா தெரிவித்துள்ளது. (7)

# பெப்ரவரி 4 ஆம் திகதிக்குள் சமஷ்டி தீர்வு-வீரவன்ச தகவல்

(கொழும்பு)

சமஷ்டி தீர்வை பெப்ரவரி 4 ஆம் திகதிக்குள் வழங்க வேண்டும் என ஐ.தே.கவுக்குக் கூட்டமைப்பு நிபந்தனை விதித்துள்ளது என்று மகிந்த அணியைச் சேர்ந்த அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

“பிரதான எதிர்க்கட்சி பதவியைக் கைப்பற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த காலங்களில் அரசாங்கத்தின் பங்காளிக்கட்சி போலவே செயற்பட்டது. ஆனால், அதை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளவில்லை. எனினும் தற்போது ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியமைப்பதற்கு ஆதரவளிக்கப்படும் என ஜனாதிபதிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடிதம் அனுப்பியுள்ளது. இதன் மூலம் ஐ.தே.கவுக்கும் கூட்டமைப்புக்குமிடையிலான உறவு அம்பலமாகியுள்ளது.


ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியில் இருந்தால் மட்டுமே சமஷ்டி தீர்வைப் பெற முடியும். பெப்ரவரி 4 ஆம் திகதிக்குள் அதை வழங்க வேண்டும் என கூட்டமைப்பு நிபந்தனை விதித்துள்ளது.



கூட்டமைப்பின் அனுமதியின்றி வடக்கு, கிழக்கில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கக் கூடாது எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. தனிஈழத்தை அடைவதற்கான வழிமுறையே இது. எனவே, மக்கள் சிந்திக்க வேண்டும்” என மேலும் தெரிவித்தார். (இ-7)

## எரிபொருள் கொடுப்பனவாக மாதாந்தம் 95,000

# தம்பர அமில தேரருக்கு எதிராக FCIDயில் முறைப்பாடு



(கொழும்பு)

லிட்ரோ எரிவாயு நிறுவனத்திடமிருந்து தம்பர அமில தேரர் பெற்றுக்கொண்டுள்ள 95 ஆயிரம் ரூபாய் மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு தொடர்பில் பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக மாகல்கந்த சுதந்த தேரர் தெரிவித்துள்ளார்.

தம்பர அமில தேரருக்கு மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ள வவுச்சர் ஒன்று கொழும்பு மேல் நீதிமன்றத்தால் அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லிட்ரோ எரிவாயு நிறுவனத்திற்குச் சொந்தமான 500 பில்லியன் ரூபாவை முறைகேடாகப் பயன்படுத்தியுள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஜனாதிபதி பணிக்குழுவின் முன்னாள் பிரதானி காமினி செனரத் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு, விசாரணைக்கு எடுத்துக்கொண்ட போதே இந்த விடயம் தெரியவந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மகிந்த-அத்துரலிய ரத்ன தேரர் சந்திப்பு

(கொழும்பு)


பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ராஜகிரிய பௌத்த மத்திய நிலையத்துக்கு விஜயம் செய்து பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரரை சந்தித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவருடன் பிரதமர் 20 நிமிடம் கலந்துரையாடியுள்ளதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைத்து பின்னர் தேர்தலுக்குச் செல்வது அத்துரலிய ரத்ன தேரரின் கருத்தாகக் காணப்படுகின்றது.

தற்பொழுது பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லையெனத் தீர்மானமான பின்னர் மகிந்த ராஜபக்ஷவின் பதவி பறிபோகப் போகின்றது என்பது உறுதியாகியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கியுள்ளமையை ஏற்றுக்கொள்ள முடியாத தென்னிலங்கை தீவிர அரசியல் சக்திகள் தற்பொழுது இடைக்கால அரசாங்க யோசனையை



வலியுறுத்தி வருகின்றன.

இதேவேளை மகிந்த ராஜபக்ஷவுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் தனிப்பட்ட ரீதியில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஜனநாயகத்தை பாதுகாக்க பதவியையே கைவிட்டேன்

## வடிவேல் சுரேஷ் கூறுகிறார்

(கொழும்பு)

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகத் தான் இராஜாங்க அமைச்சர் பதவியைக் கைவிட்டதாக நாடாளுமன்ற உறுப்பின் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகம் ஆபத்தில் தள்ளப்படுமாயின் பதவிகளால் பயனில்லை எனவும் அவர் தெரிவித்தார். மலையக சிறுபான்மை மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு அமைச்சர் பதவி கிடைப்பது நல்லது.

ராஜபக்ஷ அரசாங்கத்தில் கிடைத்த அமைச்சர் பதவிக்குப் பதிலாக ஐக்கிய தேசியக் கட்சியை வலுப்படுத்த அதன் ஊடாகக் கிடைக்கும் பதவியைக் கொண்டு மக்களுக்குச் சேவை செய்வது சிறந்தது.

இறுதியில் கோடிக்கணக்கில் பணத்தைக் கொடுக்கவும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவியை வழங்குவதாகவும் கூறி, மகிந்த தரப்பினர் தனக்கு அழைப்பு விடுத்தனர் என்றும் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார். (இ-7)



# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஞாபகசக்தி

நேற்று வரைக்கும் நம்முடனே இருந்திருப்பான். இன்றைக்கு அவனுக்கு திடீர் என்று பணம்–பதவி–புகழ் இது மூன்றில் ஏதாவது ஒன்று கிடைத்திருக்கும். நாளைக்கு அவன் முன்னாள் போய் நில்லுங்கள்! “யார் நீங்கள்! உங்களை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கே!” என்று சொல்லுவான். பொதுவாகப் பலபேரிடம் இருக்கும் இயல்பு இது.

ஞாபக மறதியையும் பெரிய மனிதனுக்கு ஒரு அடையாளமாகச் சொல்கிறது வழக்கமாகப் போய்விட்டது! சில பேரிடம் அது இயல்பாகவே இருக்கும். அதை நாங்கள் குறையாகச் சொல்வதும் தவறு. அபாரமான ஞாபக சக்தியுள்ள அறிஞர்களும் உண்டு. கவிஞர்களும் உண்டு.

கவிஞர் பைரன் இருந்தார் அல்லவா! எவ்வளவோ கவிதைகள் எழுதினார். அதில் எதை வேண்டுமானாலும் எந்தச் சமயத்தில் கேட்டாலும் ஒரு சின்னத் தவறு கூட இல்லாமல் ஒப்பித்து விடுவாராம்.

ஆனால்... வால்டர் ஸ்காட் என்னும் கவிஞர் அதற்கு நேர் விரோதம். ஒரு சமயம், பைரன் எழுதிய கவிதை என்று நினைத்து விட்டு அவருடைய சொந்தக் கவிதையையே ரொம்பப் புகழ்ந்து பாராட்டிப் பேசிக்கொண்டிருந்தாராம். அந்த அளவுக்கு ஞாபகமறதி!

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தாரே தியோடர் ரூஸ்வெல்ட். அவருக்கு ஞாபகசக்தி ரொம்பவும் அதிகம். பல பேரைச் சந்திக்க வேண்டும், பேச வேண்டும் என்று ஆர்வம் உடையவர் அவர். அவர் யாரைச் சந்தித்தாலும் சரி... அவருடைய பழக்கவழக்கம், அடையாளம் இதையெல்லாம் நல்லா கவனித்து மனதில் பதிய வைத்துக்கொள்வாராம். இது அரசியலில் அவருக்கு ரொம்ப உதவியாக இருந்திருக்கிறது. இரண்டாவது தடவை அவர் யாரையாவது சந்திக்கும்போது... ரொம்ப வேண்டப்பட்டவரைக் கூப்பிடுவது மாதிரிப் பேர் சொல்லிக் கூப்பிடுவாராம். கூப்பிடப்பட்டவர்களுக்கு உச்சி குளிர்ந்து போய் விடும்.

ஒரு சமயம் ஜப்பானிய வங்கி அதிபர் ஒருத்தரை பார்த்திருக்கிறார். 15 வருடத்திற்கு முன்னாள் அவர்கள் பேசிக் கொண்டிருந்த விடயத்தைத் தொடர்ந்து பேசினாராம் ரூஸ்வெல்ட். அதிபர் அசந்து போய் விட்டாராம்.

அவருக்கு எப்படி அந்த ஞாபகசக்தி வந்தது? அவர் மனதை ஒருநிலைப்படுத்துவதற்கு நல்லாப் பழகி இருந்தார். ஒரு தடவை பிரேஸிலுக்குப் போயிருந்தார். ஒரு மரத்தடியில் இருந்து இப்பன் எழுதிய ‘ரோம் சாம்ராஜ்ஜியத்தின் வீழ்ச்சி என்னும் நூலைப் படித்துக் கொண்டிருந்தார். அதிலேயே லயித்துப் போய் விட்டார். கொஞ்ச நேரத்தில் மழை பெய்ய ஆரம்பித்து விட்டது. அது கூடத் தெரியாமல் இவர் சொட்டச் சொட்ட நனைந்துகொண்டே படித்துக்கொண்டிருந்தாராம். மனதை அந்த அளவுக்கு ஒருமுகப்படுத்தக் கூடியவர் அவர். அதுதான் அவரது ஞாபக சக்திக்குக் காரணம்.

சர்பிரான்சிஸ் பேகன் எப்படித் தெரியுமா? தன்னுடைய பிரபலமான புத்தகங்களில் ஒன்றை ஞாபகத்தில் இருந்து சொல்லியே எழுத வைத்தாராம். நகைச்சுவை நடிகர் சார்லி சாப்ளின் இருந்தாரே! அவருக்கு மறதி அதிகம்! கார்லைல் ராபின்ஸன் என்பவர் அவரிடம் தனிப்பட்ட வேலையாளாய் ஏழு வருடகாலம் வேலை பார்த்தார். எப்பவும் சார்லி சாப்ளின் கூடவே இருந்தவர் அவர். அப்படி இருந்தும் அவருடைய முழுப்பெயரும் கடைசியில் சார்ளி சாப்ளினுக்கு ஞாபகம் இல்லையாம்.

எது எப்படி இருந்தாலும் நம்மைப் பொறுத்த வரைக்கும் நாங்கள் ஞாபக சக்தியை வளர்த்துக் கொள்வதுதான் நல்லது. மனதை ஒருமுகப்படுத்தப் பழகிக் கொள்வதுதான் அதற்குச் சிறந்தவழி.

# எனது தந்தை தமிழர் என்பது குறித்து பெருமைப்படுகிறேன்

## மகிந்த தரப்பை மிரட்டும் சிங்கள அதிகாரி



(கொழும்பு)

எனது தந்தை தமிழர் என்பது குறித்து நான் பெருமைப்படுகின்றேன் என குற்ற விசாரணை திணைக்கள பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

தனது பூர்வீகம் தொடர்பில் கேள்வி எழுப்பும் வகையில் மகிந்த ராஜபக்ஷவின் பொது ஜன பெரமுன கட்சியின் உறுப்பினரும் ஓய்வு பெற்ற மேஜர் அஜித் பிரசன்ன கருத்து வெளியிட்டார். அதற்கு பதிலளிக்கும் வகையில் நிஷாந்த டி சில்வா இதனைத் தெரிவித்தார்.

"எனது தந்தை, எனது தாத்தா என எனது பரம்பரையே இந்த நாட்டில் வாழ்ந்து இந்த நாட்டிற்காக சேவை செய்தவர்களாவர். அவர்கள் அனைவர் குறித்து நான் பெருமைப்படுகின்றேன்.

அத்துடன் நான் மனித தன்மையை மதிக்கிறேனே தவிர நபர் ஒருவரின் இனத்திற்கு அல்ல. எனது கடமையின்போது கட்சி, நிறம், இனம், மதம் பேதங்கள் இல்லை. அனைவரும் மனிதர்கள் என்ற அடிப்படையிலேயே நான் சேவை செய்கின்றேன்.

எனது பிறப்பு சான்றிதழில் எனக்கு சிங்களவர் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் நான் மனித இனத்திற்கே உரிமையாகின்றேன். சிங்களம், தமிழ், முஸ்லிமாக இருப்பதற்கு முன்னர் அனைவரும் மனிதனாக இருப்போம்.


அத்துடன் நான் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மனச்சாட்சிக்கு உண்மையாகவும், நாட்டின் சட்டத்திற்கமையவும் செயற்படுகிறேன். இனிமேலும் அப்படி தான் செயற்படுவேன்.

எனது கடமை தொடர்பில் பலர் கோபமடைகின்றார்கள். அது குறித்து நான் அதிர்ச்சியடைவதில்லை" என நிஷாந்த டி சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சிறந்த கல்விச் சேவையாளன் அமரர் சின்னையா இராஜநாயகம்

## (ஓய்வுநிலை வடமாநிலக் கல்வித்திணைக்களக் கல்வி அதிகாரி)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் மூத்ததம்பி வீதி, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட அமரர்.க.இராஜநாயகம் புங்குடுதீவை பிறப்பிடமாகக் கொண்ட தலைமை ஆசிரியர் சின்னையாவுக்கும் நெடுந்தீவைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆசிரியர் முத்துப்பிள்ளைக்கும் தலைமகனாக 03.09.1924 இல் பிறந்தார்.



ஆரம்பக்கல்வியை நெடுந்தீவு சைவ வித்தியாசாலையிலும் உயர்கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் பெற்றார். விஞ்ஞானப் பட்டத்துடன் கல்வி டிப்ளோமா கல்வி நிர்வாக சேவை ஆகிய பரீட்சைகளிலும் சித்தி பெற்றவர்.

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களை கற்றிருந்ததுடன் இவரையே தமது குருவாகவும் கொண்டிருந்தார். ஆசிரியராகச் சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் அதிபராக முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி, வேலணை மத்திய கல்லூரி, புங்குடுதீவுக் கொத்தணியாகியவற்றிலும் நற்பணியாற்றி பதவியில் உயர்வு பெற்று சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆகிய வட்டாரங்களில் வட்டாரக் கல்வி அதிகாரியாகச் செயற்திறன் மிக்க சேவையாற்றி வடமாநிலக் கல்வித்திணைக்களத்தில் கல்வி அதிகாரி பதவியில் உயர்வு பெற்றுக் கடமையாற்றி ஓய்வு பெற்றார். ஒன்பது ஆண்டுகள் தொடர்ச்சியாக சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரியாக வினைத்திறன் மிக்க சேவையாற்றி முன்மாதிரிக் கல்வி வட்டாரமாக்கினார்.

மானிடத்தின் மகிமை அறிந்த இவர் "எப்படியும் வாழலாம் என்றல்லாது இப்படித்தான் வாழ வேண்டும்" என்ற இலட்சியத்தின் சின்னமாக வாழ்ந்தவர். தமது கடமைக்கு இருப்பிடத்தில் இருந்து காலை 7 மணிக்குப் புறப்பட்டால் பிற்பகல் 5 மணிக்குத்தான் வீடு வந்து சேருவார். தமது நேரத்தின் பெரும் பகுதியைக் கல்விச் சேவையில் ஈடுபடுத்தினார். அதிபர்கள் கூட்டத்தில் அடிக்கடி அதிபர், ஆசிரியர்கள் கடமையாற்றும் நேர ஒழுங்கையும் பாடசாலையின் முதல்நிலை முகாமையாளராக அதிபர்கள் இருந்து தெளிவு, துணிவு, அர்ப்பணிப்புடன் கடமையாற்றி பாடசாலையை முன்னேற்ற வேண்டும். நல்ல அதிபர்கள், ஆசிரியர்களைச் சமூகம் என்றும் மதிக்கும். பாடசாலை, ஆலயம் ஆகியவற்றின் மணி யோசை மிகப்புனிதமானது. இவ்வோசைகளுக்கு மதிப்புக் கொடுத்து எமது சேவையை தெய்வீகப் பணியாக்குவோமாக என்று அறிவுரை பகர்வார்.

இவரும் பாரியாரும் தமது மகள், பேரப்பிள்ளைகளைப் பார்க்கும் நோக்கத்துடன் இவ்வாண்டும் கனடா சென்ற சமயம் எதிர்பாராத வகையில் 25.08.2017 இல் படுக்கையில் இராது இயற்கை எய்தினார்.

### மறைந்தார் மாண்பு

இராஜநாயகம் ஐயாவின் கல்வி, சமூகச் சேவைகள் அளப்பரியன. இவைகள் எம்மை நெறிப்படுத்த பெரிதும் உதவுகின்ற நற்கொடைகளாகும்.

**க.பேரம்பலம்**
**தென்மராட்சிக் கல்விக் கோட்டத்தின் ஓய்வுநிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர்.**

# தமிழினத்தின் பெருமைகளை தக்க வைக்க பெறுபேறுகள் உறுதுணையாக வேண்டும்

## மாணவர்களுக்கு வாசுதேவக்குருக்கள் வாழ்த்து

(யாழ்ப்பாணம்)

தமிழினத்தின் பெருமைகளை தக்கவைப்பதற்கு உறுதுணையாக இருக்கும் மாணவர்களுக்கு சண்டிலிப்பாய வீணாகான குருபீட குரு முதல்வர் சிவசிறீ சபா.வாசுதேவக்குருக்கள் நல்லாசிகளும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

இன்று ஆரம்பமாகும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தயாராகும் மாணவச்செல்வங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் முதற்கண் தெரிவித்துக் கொள்கின்றேன். ஸ்ரீ சரஸ்வதி அம்பாளின் அற்புதமான திருவருள் உங்கள் அனைவருக்கும் துணை நிற்க பிரார்த்திக்கின்றேன்.

கடந்த கால யுத்தம் ஈழத் தமிழர்களின் பல இருப்பை அழிந்துவிட்டது. பொருளாதாரம், உறவுகள், கலை கலாசார நல்லொழுக்க விழுமியங்கள் பூர்வீகமான நிலப்பரப்புக்கள் என பலவற்றினை அழித்துவிட்டது. இருந்தும் கூட தமிழர் தம் அழியாச் சொத்தாக இன்றும் காணப்படுவது கல்வி ஒன்றுதான். அதனையும் இல்லாது அழித்தொழிக்க பல யுத்திகளை கையாண்டு வருவதைக் காண முடிகின்றது. கையடக்க தொலைபேசிகள், இணையத்தளங்கள், போதைப்பாவனைகள் வாள்வெட்டு சம்பவங்கள் என பல வடிவில் இன்று எமது கல்விப் பாரம்பரியத்தினை அழித்து வருகின்றார்கள். இவற்றுக்கெல்லாம் சவாலாக அமையும் வகையில் உங்கள் பெறுபேறுகள் சிறப்பாக அமைந்திட வேண்டும்.

உங்கள் ஆசிரியப்பெருமக்களின் ஆலோசனைகளின் படி பரீட்சையினை எழுதி வெற்றிபெறவேண்டும். உங்களுடைய சாதனைகளை அனைவரும் ஆவலுடன் எதிர்பார்க்கின்றார்கள். சிலமாணவர்கள் பெற்றோர்களையும் ஆசிரியப் பெருமக்களையும் கவலையடையச் செய்துள்ளார்கள். நன்றாக கல்விகற்று வந்தவர்கள் பரீட்சைக்கு தயாராகும்வேளையில் விளையாடித்திரிவதாகவும், படிப்பதை உதாசீனப்படுத்துவதாகவும் அதிகமான நேரம் தூங்குவதாகவும் நண்பர்களுடன் ஒன்று கூடி வீண் பொழுதாக்குவதாகவும் என பல பெற்றோர்கள் மனவேதனையுடன் கூறுகின்றார்கள். மாணவச் செல்வங்களே உங்கள் பொறுப்பினை நீங்கள் மறந்துவிடாதீர்கள்.

எந்தச் சந்தர்ப்பதிலும் உங்களுடைய நல்வாழ்விற் கான கனவுடன் வாழும் அன்பிற்குரியவர்களது மனத்தினை கவலையடையச்செய்து விடாதீர்கள். இன்று நீங்கள் செய்யும் தவறு உங்களது வாழ்வின் பெரும் பின்னடைவை மாத்திரமல்லாது உங்களுக்கு பிற்காலத்தில் மனவேதனையையும் ஏற்படுத்தும். அப்பொது கண்கெட்டபின் சூரிய நமஸ்காரமாகிவிடும்.


இப்பரீட்சை பெறுபேறு தான் எச்சந்தர்ப்பத்திற்கும் தேவைப்படுகின்ற அடிப்படைச் சான்றாகும். எனவே தவறிழைத்துவிடாமல் சரியான முறையில் முழு மனத்துடன் நம்பிக்கையுடன் தேர்வினை எழுதுங்கள். உங்களால் முடியும்.

நீங்கள் பெற்றுக்கொள்ளும் உயர்புள்ளிகளால் பெற்றோர்கள், ஆசிரியர்கள் கல்விச்சமூகத்தினர்கள், சகநண்பர்கள், உறவினர்கள் என பலர் மகிழ்வடைகின்றார்கள். நீங்கள் பெறும் உயர்புள்ளிகளால் உங்களுக்கு கற்பித்த ஆசிரியர்கள், கல்வி கற்ற பாடசாலை, தனியார் கல்வி நிறுவனம் என பலருக்கு பெரும் புகழை ஈட்டிக் கொடுக்கின்றீர்கள். அதுமாத்திரமல்லாது தமிழினத்தின் பெருமைகளை தக்கவைப்பதற்கு உறுதுணையாக அமைகின்றீர்கள்.

உங்களது தேர்வுக்கு ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் என்றும் துணையாக இருக்கின்றாள். போர்வீரன் போர்களம் செல்லும்போது தற்பாதுகாப்பு கவசத்தினை அணிந்து செல்கின்றான். அது அவனை பாதுகாக்கின்றது.

அது போல் உங்கள் கைகளில் அணியப்படும் தெய்வீகமான காப்பு உங்களுக்கு திருவருட்கவசமாக பாதுகாத்தருளும். ஞாபகசக்தி, மனச்சோர்வின்மை, உடல் உள ஊக்கம் என அனைத்தையும் அந்த இறையருள் உங்களுக்கு தரவேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

எனவே அன்பிற்குரிய மாணவர்களே என்னால் முடியும், வெற்றி எனக்கே என்னும் மனத்துணிவுடன் பரீட்சை எழுதுங்கள் என வாழ்த்தி ஆசிர்வதிக்கின்றேன் எனத் தெரிவித்துள்ளார். (இ-9)



**யாழ்.இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் இரத்ததான முகாமின் 12 ஆவது குருதி கொடை முகாம் நேற்று முன்தினம் கலைமகள் படிப்பகத்தில் இடம்பெற்றது. இதன்போது தெல்லிப்பழை குருதி வங்கி பொறுப்பு வைத்திய அதிகாரி ம.பிரதீபன் பரிசோதனை செய்வதையும் குருதிக் கொடையாளர்கள் குருதி வழங்குதையும் படங்களில் காணலாம்.**



**யாழ்.கரவெட்டி கமநலசேவை நிலையத்தில் வடக்கின் துரித விவசாய மீளெழுச்சி திட்டத்தை விவசாய பிரதியமைச்சர் அங்கஜன் இராமநாதன் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்தார். இதன்போது பொதுமக்களுக்கு பயன்தரும் மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. (படங்கள்:-மகாலிங்கம்)**

# மாற்று ஆற்றலுடையோரின் ஆற்றல்களும் — அவர்களுக்கான ஏற்பாடுகளும் —

இன்றைய நவீன யுகத்திலே விஞ்ஞான கண்டுபிடிப்புக்கள், தொழில்நுட்ப சாதனங்களின் வளர்ச்சி அதிகமாக காணப்பட்ட போதிலும் மாற்று ஆற்றல் உடையோரின் தோற்றமும் எண்ணிக்கையும் அதிகமாகவே உள்ளன. இதற்கு பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. முக்கியமாக பிறப்பிற்கு முன்னர், பிறப்பின் போது, பிறப்பின் பின்னர் என விசேட தேவையுடைய பிள்ளைகள் உருவாகின்றனர். இவர்களை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு பணியாற்றக் கூடிய மனப்பாங்கு ஆசிரியர்கள் அனைவருக்கும் அவசியமாகும். இவர்களிடம் உள்ள ஆற்றல் வியக்கத்தக்கது. ஏதோ ஒரு புலன் குறைபாடு காணப்பட்டாலும் ஏனைய புலன்கள் மிகச் சிறப்பாக இங்கும் அவ்வாறானவர்களுக்கு வழங்கப்படும் கல்வி முறையே விசேட கல்வியாகும்.

### விசேட கல்வி

விசேட கல்வி என்பது உடல், உள, சமூக மனவெழுச்சி பாதிப்புக்குள்ளான மாணவர்கள் சாதாரண மாணவர்களை விட பல சிக்கலான நடத்தைகளைக் காட்டுகின்றனர். அத்துடன் அவர்கள் தேர்ச்சி மட்டத்தை அடைய முடியாது தத்தளிக்கின்றனர். அவ்வாறான மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வியே விசேட கல்வி எனப்படும்.

மாணவர்கள் ஒவ்வொருவரும் தனியாள் வேறுபாடுகளைக் கொண்டவர்களாவர். அதாவது நாம் ஒவ்வொருவரும் பல்வகைமை உடையவர்களாகக் காணப்படுகின்றோம். அதற்கான அடிப்படை ஒவ்வொருவரும் கொண்டுள்ள நுண்மதி ஆற்றலுக்கேற்ப வேறுபடுகின்றோம்.

ஒருவருடைய நுண்மதியானது பின்வரும் முறைகளில் மதிப்பீடு செய்யப்படுகின்றது. நுண்மதி ஈவின் தன்மைக்கேற்ப மாணவர்கள் பல்வகைமை மதிப்பிடப்படும்.

நுண்மதி ஈவு= $\frac{\text{உளவயது}}{\text{காலவயது}} \times 100$

| நுண்ணறிவு ஈவு பரவல் | தரம் |
|---|---|
| 70- கீழ் | மன வளர்ச்சி குன்றியோர் |
| 70-90 | மெதுவாகக் கற்போர் |
| 90-110 | சராசரி நுண்ணறிவு பெற்றோர் |
| 110-130 | மீத்திறன் வாய்ந்தோர் |
| 130-மேல் | மேதைகள் |

விசேட கல்வி வரலாற்று கால கட்டங்களை நோக்குகின்ற போது மிக நீண்ட வரலாற்றைக் கொண்டிருந்த போதிலும் நிறுவனமயப்படுத்தப்பட்ட காலப் பகுதியாக 1912 ஆம் ஆண்டு கண்பார்வை இழந்தவர்களுக்காக முதன்முதலில் இரத்மலானையில் விசேட பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 2012 ஆம் ஆண்டு நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டதில் இருந்து நாம் அனைவரும் பெருமை கொள்ளக் கூடிய அளவிற்கு மிகவும் சிறப்பாகவுள்ளது.

### விசேட கல்வி வரலாற்றுக் கால கட்டங்கள்

1. நிறுவனமயப்படுத்தல்
2. உதவி பெறும் விசேட பாடசாலைகள்
3. ஒன்றிணைத்தல்
4. விசேட கல்வி அலகுகள்
5. உட்படுத்தற்கல்வி

### நிறுவனமயப்படுத்தல்

ஐரோப்பியருடைய ஆட்சிக் காலத்தில் ஊனமுடையோர் நிறுவனமயப்படுத்திப் பராமரிக்கப்பட்டனர்.

போர்த்துக்கேயர் காலம் 1505-1656

ஒல்லாந்தர் காலம் 1656-1796

பிரித்தானியர்காலம் 1796-1948

போர்த்துக்கீசருடைய ஆட்சிக் காலத்தில் அநாதைக் குழந்தைகளுக்கு கல்வி வழங்கவும் தொழிலுக்கு வழிகாட்டவும் முகத்துவாரத்தில் ஒரு அநாதைப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

ஒல்லாந்தர் காலத்தில் அநாதைப் பிள்ளைகளுக்காக விஸ்கமிர் எனும் மடங்களையும் வறிய குடும்பங்களிலுள்ள பிள்ளைகளுக்காக அறிமென்ஹஸ் எனும் இல்லங்களும் ஆரம்பிக்கப்பட்டன.

பிரித்தானியர் காலத்தில் இருந்த விசேட தேவையுடையோருக்கான பாடசாலைகள் புனரமைப்புச் செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டன.

### உதவி பெறும் விசேட பாடசாலைகள்

❖ 1912 ஆம் ஆண்டு கண் பார்வை இழந்தவர்களுக்கான பாடசாலைகள் இரத்மலானை Blind School நிறுவப்பட்டது.

❖ 1935 கேட்டல் குறைபாடுடைய மாணவர்களுக்காக மஹாவெவ Deaf School ஆரம்பிக்கப்பட்டது.

❖ 1956 கேட்டல், பார்வை குறைபாடுடையவர்களுக்காக கைதடியில் Deaf, Blind School தமிழ் மொழி மூலம் உருவாக்கப்பட்டது.

❖ தற்போது பதிவு செய்யப்பட்ட 125 இற்கு அதிகமான விசேட கல்வி பாடசாலைகள் இயங்கி வருகின்றன.

### ஒன்றிணைத்தல்

❖ 1966 ஆம் ஆண்டு ஜீன் கென்மோர் அறிக்கைக்கு அமைவாக 1969 ஆம் ஆண்டு காலப் பகுதி யில் கல்வியமைச்சராக இருந்த IMRA ஈரியகொலவின் பரிந்துரைக்கு அமைவாக அமைச்சரவைத் தீர்மானத்தின்படி கட்புலனற்ற மாணவர்கள் ஒன்றிணைப்புச் செய்யப்பட்டனர்.

❖ ஒன்றிணைத்தலானது பௌதீக ரீதியான ஒன்றிணைத் தல், செயல் சார்பான ஒன்றிணைத்தல், பாடசாலைச் சமூகத்துடன் ஒன்றிணைத்தல், சமூக ஒன்றிணைப்பு எனக் காணப்பட்டது.

### விசேட கல்வி அலகுகள்

❖ விசேட கல்வி அலகுகள் என்பது விசேட தேவையுடைய பிள்ளைகளின் இயலாமையினை இனங்கண்டு அவற்றை இயன்றளவு சீர்செய்து அவர்களைச் சாதாரண வகுப்பறையில் உட்படுத்துவதற்கும் பின்னர் மீண்டும் உதவி எப்போது தேவைப்படுகின்றதோ அப்போது அவர்களை விசேட கல்வி அலகுக்கு அழைத்து மீண்டும் உதவுதலாகும்.

❖ தற்போது பாடசாலை முறைமையிலே விசேட கல்வியானது அரச பாடசாலைகளில் சுமார் 850 அதிகமான விசேட கல்வி அலகுகள் இயங்கி வருகின்றன.

❖ 1975 ஆம் ஆண்டு வித்யோதய பல்கலைக்கழகத்தில் பூரணமான பார்வையிழந்தவர்களுக்காக பாடநெறி ஆரம்பிக்கப்பட்டது.

❖ 1975 ஆம் ஆண்டு செவிப்புலன் குறைபாடுகளுடையவர்களுக்கு மாத்திரம் விசேட கல்விய லகு ஆரம்பிக்கப்பட்டது.

## சர்வதேச மாற்று ஆற்றல் உள்ளோர் தினம் இன்று



❖ 1985 ஆம் ஆண்டு நுண்மதிக் குறைபாடு, மந்த புத்திக் குறைபாடு, பார்வைக் குறைபாடு, உடல் ஊனமுற்றோருக்கான விசேட கல்விவள நிலையம் உருவாக்கப்பட்டது.

❖ 1985 ஆம் ஆண்டு ஹற்றன் விசேட கல்வி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது.

### உட்படுத்தற்கல்வி

உட்படுத்தற் கல்வி என்பது சகல பிள்ளைகளதும் கற்றலை உறுதிப்படுத்துகின்ற பொதுவான பணியை ஆற்றுகின்ற பல்வகைப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காண்கின்ற ஓர் இடமே உட்படுத்தற்கல்வி பாடசாலையாகும். அதாவது ஒரு விசேட தேவையுடைய பிள்ளையொன்று தான் வாழும் சூழலில் தனக்கு அண்மையில் உள்ள சாதாரண பாடசாலையிலே சாதாரண வகுப்பறையில் எல்லா மாணவர்களுடனும் வேறுபாடுகள் இன்றிக் கற்பதற்கான சூழல் காணப்படுவதே உட்படுத்தற்கல்வி சித்தாந்தமாகும்.

❖ உட்படுத்தற் கல்விக்கான அடிப்படைகள் 1990 ஆம் ஆண்டு சிறுவர் உரிமைகள் சாசனத்திலே 18 வயதிற்கு உட்பட்டவர்கள் அனைவரும் பிள்ளைகள் என்றும் அவர்கள் அனைவரும் எல்லா உரிமைகளையும் பெற உரித்துடையவர்கள்.

❖ மனித உரிமைகள் சாசனம் நடைமுறைப்படுத்தப்பட்டமை.

❖ 1961 ஆம் ஆண்டு தேசிய கல்வி ஆணைக்குழுவினால் தனது அறிக்கையிலேயே 5- 14 வயதுக் குட்பட்ட சகலரும் பாடசாலைக்கு உள்ளீர்ப்பு செய்யப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டது. ஆனால் தற்போது 16 வயதிற்கு உட்பட்ட அனைவருக்கும் கட்டாயக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

### விசேட தேவையுடைய பிள்ளைகள் தோன்றுவதற்கான காரணங்கள்

1. பிறப்பிற்கு முன்னரான காரணிகள்
2. பிறப்பின் போதான காரணிகள்
3. பிறப்பிற்குப் பின்னரான காரணிகள்

### பிறப்பிற் முன்னரான காரணிகள்

1. ஜீன் கோளாறுகள்
2. தாயின் வயதெல்லை
3. தாயின் ஆரோக்கியம்
4. கருவுற்ற காலத்தில் ஏற்படும் நோய்கள்
5. கருவுற்ற தாய் உட்கொள்ளும் மாத்திரைகள் கதிர்வீச்சு
6. கருவுற்ற தாயின் போஷாக்கு
7. இரத்த உரித்து திருமணபந்தம்
8. மரபணுக்களில் உள்ள குரோமோசோம்களின் எண்ணிக்கை 23 இற்கு மேல் அல்லது குறைவாக இருத்தல்

### பிறப்பின் போது

1. குறைப்பிரசவம்
2. சிசுவின் பிறப்பு எடை குறைவாகக் காணப்படல்
3. பிறந்தவுடன் சிசுவின் சுவாசம் தடைப்படல்.
4. கருப்பையில் சிசுவின் அமைப்பு புறநடையாக்க் காணப்படல்.
5. கருப்பையில் தொப்புள் கொடி சிசுவின் கழுத்தைச் சுற்றியிருத்தல்.
6. ஆயுதப்பிறப்பினால் அல்லது பிற காரணங்களால் சிசுவின் தலையில் இரத்தக் கசிவு.
7. தாய்க்கு அளிக்கப்படும் மயக்க மருந்து அல்லது வலி நிவாரணங்கள்.
8. தாயின் இடுப்பு எலும்பு குறுகியிருத்தல்.

### பிறப்பிற்குப் பின்னர்

1. தொற்று நோய்கள் ஏற்படுத்தல்.
2. தொடர்ந்து குழந்தைகளுக்கு ஏற்படும் மூளைக்காயங்கள்.
3. சத்துணவுக்குறைபாடு

### மாற்று ஆற்றல் உள்ளோருக்கான சிறுவர் உரிமைகள்

சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயமானது 1989 ஆண்டு நவம்பர் 20 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு 1990 செப்டெம்பர் 2 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இவ்வமைப்பில் இலங்கை 1991 ஆண்டு இணைந்து கொண்டது.

சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் 54 உறுப்புரைகளைக் கொண்டது. இவற்றில் 40 உறுப்புரைகள் சிறுவர்கள் பற்றியும் ஏனையவை நடைமுறைப்படுத்தும் போது கடைப்பிடிக்க வேண்டிய நடை முறைகள் பற்றியதாகவும் காணப்படுகின்றது. இவ் உரிமைகள் உயிர் வாழ்தல், பங்கு கொள்ளல் மேம் பாடு, பாதுகாப்பு எனும் நான்கு பிரிவினுள் அடங்குகின்றது.

சிறுவர் உரிமைகள் சாசனத்திலே மாற்று ஆற்றல் உடையோருக்கான உறுப்புரைகள் பின்வருமாறு அமைகின்றது.

உறுப்புரை-1 பிள்ளை என்பதன் வரையறை 18 வயதிற்குட்பட்ட ஒவ்வொருவரும் பிள்ளைகளாவர். சமவாயத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் எல்லா உரிமைகளையும் ஒவ்வொரு பிள்ளையும் அனுபவித்தல் வேண்டும்.

உறுப்புரை- 23 ஊனமுற்ற பிள்ளைகள் பற்றியது உள அல்லது உடல் ஊனம் உடைய பிள்ளை அதன் கௌரவத்தை உறுதிப்படுத்தும் சுய நலத்தை ஊக்குவிப்பதும் சமுதாயத்திலே தீவிரமாகப் பங்குகொள்ளக் கூடியதுமான நிலைமைகளில் முழுமையான கண்ணியமான வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும் என்பதை அரச தரப்பினர் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஊனமுற்ற பிள்ளை விசேட பராமரிப்பும் பொறுப்பும் பெறுவதற்கு உரிமையுள்ளதென்பதை அரச தரப்பினர் அங்கீகரிப்பதுடன் தகுதியுடைய பிள்ளைக்கும் அதன் பராமரிப்புக்குப் பொறுப்பாயிருப்பவர்களுக்கும் விண்ணப்பிக்கப்படும் உதவி கைவசமுள்ள மூல வளங்களுக்கு அமைய வழங்கப் படுவதை ஊக்குவித்து உறுதிப்ப டுத்த வேண்டும்.

ஊனமுற்ற பிள்ளைக்கு விசேட தேவைகள் உண்டென்பதை ஏற்றுக் கொண்டு தற்போதைய உறுப்புரை 2 ஆம் பந்தியில் குறிப்பிட்வாறான உதவியை முடியுமான போதெல்லாம் இலவசமாக வழங்குதல் வேண்டும்.

இவ்விடயத்தில் பெற்றோர் அல்லது பராமரிப்பாளரது நிதி நிலையை கவனத்தில் கொள்ளவேண்டும். பிள்ளையின் கலாசாரத்தின் மேம்பாடு அடங்கலாக முழுமையான சமூக ஒருமைப்பாட்டையும் அடைவதற்கு ஏற்றதான கல்விப் பயிற்சி, சுகாதார பராமரிப்புச்சேவைகள், புனர்வாழ்வுச் சேவைகள் ஆகியவற்றைச் சிறப்பான முறையில் பெறுவதை உறுதிப்படுத்தும் பாங்கில் அவ்வுதவி அமைத்தல் வேண்டும். ஊனமுற்ற பிள்ளையின் நோய்த்தடுப்பு, பராமரிப்பு, வைத்திய, உளவியல் மற்றும் நடைமுறைச் சிகிச்சை ஆகிய துறைகளில் பொருத்தமான தகவல் பரிமாற்றம் நடைபெறுவதைச் சர்வதேச ஒத்துழைப்பு மனப்பான்மையுடன் அரச தரப்பினர் ஊக்குவித்தல் வேண்டும். (நாளை தொடரும்)


த.சிவகுமார்,
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

110



இதன் காரணமாக ஏற்கனவே நிர்வாக சேவையில் அனுபவம் வாய்ந்த முதலியார்களையும் விதானைமார்களையும் தமது நிர்வாக அமைப்பினுள் சேர்த்துக் கொண்டார்கள். இவ் உள்ளூர் அதிகாரிகள் கிராம, நகர மட்டத்திலுள்ள நிதி, நிர்வாகக் கடமைகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவர்களாகக் காணப்பட்டனர்.

இவ் உள்ளூர் சிவில் நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு மிகக் குறைந்த ஊதியமே வழங்கப்பட்டது. பதினெட்டாம் நூற்றாண்டில் ஒரு வருடத்திற்குச் சராசரி 6 இலட்சம் கில்டர்கள் (Guilders) டச்சுக்காரருக்கான சம்பளமாகச் செலவிடப்பட்டது.

இது இலங்கைக்கான வருடாந்த மொத்தச் செலவுத் தொகையில் 50 வீதமாகக் காணப்படுகின்றது. இவை தவிர இலவச நுகர்வுப் பொருட்களை மேற்படி நிர்வாகத்தினருக்கு வழங்குவதற்கு வருடமொன்றுக்கு இரண்டு இலட்சம் கில்டர்கள் மேலதிகமாகச் செலவு செய்யப்பட்டது.

இதேவேளை உள்நாட்டு உத்தியோகத்தர்களுக்காகச் செலவிடப்பட்டது வருடமொன்றுக்குச் சராசரியாக 50 ஆயிரம் கில்டர்களாக மட்டுமே காணப்படுகின்றது.

ஆனால் 3 ஆயிரத்திற்கும் அதிகமான டச்சு உத்தியோகத்தர்கள் கடமையில் அமர்த்தப்பட்டிருக்கின்றார்கள்.

எத்தனை உள்ளூர் அலுவலர்கள் பதவியில் அமர்த்தப்பட்டிருந்தனர் என்ற விபரத்தைப் பெறமுடியவில்லை. எது எவ்வாறிருப்பினும் உள்ளூர் அதிகாரிகளை மிகவும் குறைந்த சம்பளத்திலேயே வேலைக்கு அமர்த்திய டச்சுக்காரர் அவர்களை நிச்சயம் பொருளாதார ரீதியில் சுரண்டியுள்ளார்கள் என்பதனை அவர்களின் ஆவணங்களிலிருந்து அறிய முடிகிறது.

இறுதியாக டச்சுக்காரர் ஆட்சிக்காலத்தில் தமிழர் பிரதேசங்களில் எவ்வாறான பொருளாதார நடவடிக்கைகள் இருந்தன என்பது பற்றியும் எவ்வாறு தமிழர் பிரதேசங்கள் டச்சுக்காரர்களினால் சுரண்டப்பட்டன என்பது பற்றியும் ஆராய வேண்டியுள்ளது.

> “டச்சுக்காரரின் ஆசியப் பயணத்துக்கான முக்கிய நோக்கம் வர்த்தக பொருளாதார நடவடிக்கைகளும் அவற்றினூடாக பெருமளவு செல்வத்தைக் குவிப்பதுமேயாகும்.இந்த இலக்கை அவர்கள் அடைவதற்கு முதலில் அவர்கள் செய்தது இலங்கையின் வர்த்தகத்தில் ஏகபோக உரிமை கொண்டவர்கள் தாமேயெனப் பிரகடனப்படுத்தியமையேயாகும்”

## டச்சுக்காரர் ஆக்கிரமிப்பும் தமிழர் பிரதேசங்களை சுரண்டியமையும் (கி.பி. 1658-கி.பி. 1796)

டச்சுக்காரரின் ஆசியப் பயணத்துக்கான முக்கிய நோக்கம் வர்த்தக பொருளாதார நடவடிக்கைகளும் அவற்றினூடாக பெருமளவு செல்வத்தைக் குவிப்பதுமேயாகும் என ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இலக்கை அவர்கள் அடைவதற்கு முதலில் அவர்கள் செய்தது இலங்கையின் வர்த்தகத்தில் ஏகபோக உரிமை கொண்டவர்கள் தாமேயெனப் பிரகடனப்படுத்தியமையேயாகும்.

இதன் விளைவாக உள்ளூர், வெளியூர் வர்த்தகக் கம்பனிகளோ தனியார் வர்த்தகர்களோ இறக்குமதி, ஏற்றுமதி வியாபாரத்தில் ஈடுபட முடியாமல் போயிற்று. அடுத்த முக்கிய நிகழ்வு, தமிழ்ப் பிரதேசங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு அதிகவரி அறவிட்டு வந்த டச்சுக்காரர் தமது வருமானத்தை மேலும் பெருக்குவதற்காக உள்ளூர் உத்தியோகத்தர்களின் உதவியுடன் மிகவும் வரன்முறையாகத் தோம்பு புதுப்பிக்கப்பட்டு பல்வேறு உற்பத்திப் பொருட்களுக்கும் வரியிறுக்கும் முறையை அமுல்படுத்தியமையாகும்.

அதேபோன்று ஆட்களுக்கும் அவர்கள் செய்யும் தொழில்களுக்கும் தலைவரி, தொழில் வரி என்பன விதிக்கப்பட்டமையாகும். மேலும் இத்தோம்பின் உதவியுடன் தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள அடிமை, குடிமைகள் பற்றிப் பெறப்பட்ட விபரங்களினூடாக ஊழியம் என்னும் இலவச சேவைகளைப் பெற்று அரச கட்டடங்கள், கோட்டைகள் போன்றவற்றைக் கட்டுவதற்கும் அரச காணிகளில் உற்பத்தி முயற்சிகளை மேற்கொள்வதற்குமான கொள்கைத் திட்டங்களை டச்சுக்காரர் வகுத்தனர்.

ஒட்டுமொத்தமாக அவர்களின் பொருளாதாரக் கொள்கை தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள பொருளாதார மனித வளங்களை முற்றுமுழுதாக துடைத்தெடுப்பதற்காகவும் தமிழ் மக்களின் இரத்தத்தை உறிஞ்சும் ஒரு திட்டமாகவும் நடைமுறையாகவும் காணப்பட்டது.

டச்சுக்காரர் இலங்கையின் தென்பகுதியிலுள்ள கறுவா, ஏலம், கராம்பு போன்ற வாசனைத் திரவியங்களுக்கு ஐரோப்பியச் சந்தையில் நல்ல கிராக்கி இருப்பதனையும் முஸ்லிம் வர்த்தகர்கள் அதனூடாக அதிக வருமர்னம் பெற்றதனையும் அறிந்திருந்தனர்.

எனவே மேற்படி வாசனைத் திரவியப் பொருட்களின் வர்த்தக ஏகபோக உரிமையைப் பெற வேண்டும் என்பதுதான் அவர்களுடைய முதன்மையான இலக்காக இருந்தது.

அதில் அவர்கள் வெற்றியும் கண்டார்கள். அவை பற்றிய விளக்கங்கள் இந்த ஆய்வின் தலைப்புக்கு அப்பாற்பட்டன என்பதனால் அவை இங்கு தவிர்க்கப்படுகின்றன.

அதேவேளையில் தமிழ்ப் பிரதேசங்களை டச்சுக்காரர் கைப்பற்றியதன் விளைவாக அப்பிரதேசங்களிலே மேற்கொள்ளப்பட்ட யானை வர்த்தகம், முத்து வர்த்தகம் என்பன அவர்களை வெகுவாகக் கவர்ந்தன.

அத்துடன் திருகோணமலை, மட்டக்களப்பு, வன்னிப் பிரதேசங்களில் உற்பத்தி செய்யப்படும் நெல், புகையிலை, பருத்தி, பாக்கு என்பனவும் பனம்பொருள் உற்பத்திகள் மேற்படி பிரதேசங்களில் இயற்கையாகக் கிடைக்கப் பெறும் உபயோகமிக்க பல்வேறு மரங்கள் என்பன்வும் அவர்களை ஈர்த்திருந்தன.

யானை வர்த்தகத்தில் டச்சுக்காரர் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள் என்பது பற்றியும் அதிலிருந்து எவ்வளவு வருமானத்தைப் பெற்றார்கள் என்பது பற்றியும் அறிவது முக்கியமானது.

(தொடரும்)

# பேருந்து மீது கல் வீசித் தாக்குதல்! பொலிஸ் உத்தியோகத்தர் படுகாயம்



(சாவகச்சேரி)

பேருந்து மீது நடத்தப்பட்ட கல் வீச்சுத் தாக்குதலில் பொலிஸார் ஒருவர் படு காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனும திக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்த னர்.


அநுராதபுரத்திலிருந்து யாழ்ப் பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த இ.போ.சபைக்கு சொந்த மான பேருந்து மீது நேற்று ஞாயிற் றுக்கிழமை காலை 8.00 மணிய ளவில் சாவ கச்சேரி நுணாவில் பகுதி யில் கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதில் பேருந்து சேதம டைந்த துடன் சாவகச்சேரி பொலிஸ் நிலை யத்திற்கு திரும்பிக் கொண்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ரட்நாய க்கா (வயது-30) கல் வீச்சுத் தாக்குதலில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத் திய சாலையில் சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டார்.

இது தொடர்பில் சாவ கச்சேரி பொலிஸார் மேல திக விசாரணை மேற்கொ ண்டுள்ளனர். (இ-30-60)

# விக்னேஸ்வரனின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்

## ஜனாதிபதியிடம் சுரேஸ் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முன் னாள் முதலமைச்சரின் பாதுகாப்பை முற்றுமுழு தாக அகற்றியமை தமிழ் மக்களுக்கு எதிரானதுடன் தமிழ்த் தலைமைகளுக்கு எதிராக எடுக்கக் கூடிய செய ற்பாடு என ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

வடக்கு மாகாண முன் னாள் முதலமைச்சர் சி.வி.விக் னேஸ்வரனின் பாதுகாப்பு முழுமையாக எடுக்கப்பட்டி ருக்கின்றது. அவர் முன்னர் உயர் நீதிமன்ற நீதியரசராக இருந்தவர். ஆகவே அப்படி யான ஒருவருக்கு தொடர்ச் சியான பாதுகாப்பு இருக்க வேண்டியது அவசியமா னது. அதற்குப் பிற்பாடு அவர் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சராக வும் இருந்திருக்கின்றார். அது மாத்திரமல்லாமல் அவருடைய பாதுகாப்பிற்கு பிரச்சினைகள் இருக்கிறது என்று சி.ஐ.டியினரும் அறி க்கை கொடுத்திருக்கின்றா ர்கள்.

இவ்வாறானதொரு சூழ் நிலையில் புதிதாக வந்திருக் கக் கூடிய மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் பாதுகாப்பை முற்று முழுதாக அகற்றியது கண்டிக்கப்படக் கூடிய விட யம்.

ஜனாதிபதி மற்றும் பிர தமருக்கு நூற்றுக்கணக்கா னவர்கள் பாதுகாப்பாக இரு க்கக் கூடிய சூழ்நிலையில் நீதியரசராக, முதலமைச்ச ராக இருந்தவர் என்ற அடி ப்படையில் பாதுகாப்புப் பிரச் சினைகள் இருக்கின்றதால் அவருக்கான பாதுகாப்பை முற்றுமுழுதாக அகற்றியமை தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கை. தமிழ்த் தலை மைகளுக்கு எதிராக எடு க்கக் கூடிய செயற்பாடா கும்.

எனவே விக்னேஸ்வர னுக்கான பாதுகாப்பு உத்தர வாதம் செய்யப்பட வேண் டும். பாதுகாப்பு என்ற விடய த்தில் சமரசம் என்ற விடயம் இருக்கக் கூடாது. மீண்டு மொரு தடவை தமிழ் மக் கள் சார்பாக முதலமைச்ச ருடைய பாதுகாப்பு உறுதிப்ப டுத்தப்பட்டு அவருக்கான பாதுகாப்பு அதிகாரங்கள் உடனடியாக வழங்கப்பட வேண்டுமென ஜனாதிபதியி டம் நாங்கள் கேட்டுக்கொள் கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# மகிந்தவின் கீர்த்தியை மழுங்கடிக்கும் செயல்

## அனைத்திற்கும் மைத்திரியே பொறுப்புக் கூற வேண்டும்

(கொழும்பு)

நாட்டில் பெரும்பான்மை மக்களின் அபிப்பிராயத் தினை வென்ற முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக் ஷவின் கீர்த்தியை மழுங் கடிக்கும் செயற்பாடாகவே தற்போதைய அரசியல் நெருக்கடி காணப்படுவதாக தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல் கம, இவை அனைத்திற் கும் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவே பொறுப்புக் கூற வேண்டும் எனவும் தெரிவித்தார்.

ஆட்சி மாற்றத்தினை தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியினர் தங்களின் பெரும் பான்மை பலத்தினை நான்கு முறை பாராளுமன்றத்தில் நிரூபித்து விட்டனர். பெரு ம்பான்மை பலம் இல்லா மல் ஆட்சியினை முன்னெ டுத்து செல்ல முடியாது என்று நான் பலமுறை மகிந்த ராஜபக்ஷ உட்பட அவரது தற் போதைய நெருங்கிய சகாக் களுக்கு எடுத்துரைத்தேன்.

ஆனால் நிழல் அமைச் சரவை அமைச்சர்கள் தங் களுக்கு கிடைக்கப் பெற்ற அமைச்சுக்களை தக்க வைத் துக் கொள்ள முயற்சிக்கி ன்றனரே தவிர அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வை காண முன்வருவதில்லை. அதற்காக அவர்கள் பல மாறுபட்ட தர்க்கங்களை முன்வைக்கின்றனர். அத ற்கும் சட்ட விளக்கம் அளி க்க ஒரு தரப்பினர் எந்நேரமும் ஆயத்தமாக உள்ளனர்.

தேசிய அரசாங்கம் என்ற கூட்டரசாங்கத்தில் இடம் பெற்ற பிரச்சினைகளை அவர்களே தீர்த்துக் கொண் டிருக்க வேண்டும். இவ்விட யத்தில் எதிர்த் தரப்பினராக செயற்பட்ட எம்மை இணை த்து விட்டமை பாரிய தவ றாகும் எனவும் அவர் தெரி வித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1575

### அம்புஜா


ஆண் இல்லாமல் ஒரு பெண்ணால் வாழமுடியும். ஏனெனில் ஒரு பெண்ணுக்கு தன்னம்பிக்கை அதிகம்



பெண் இல்லாமல் ஆண் வாழவே முடியாது. ஏனெனில் ஆணின் தன்னம்பிக்கையே பெண்தான்


### நிதர்சன்

எதிர்காலத்தைப் பற்றி கவலைப்படாதீர்கள். எவ்வளவு கவலைப்பட்டாலும் நடப்பது தானாக நடந்து கொண்டுதான் இருக்கும்



### கண்ணன்

கடன் கொடுத்து பார் நீ எவ்வளவு முட்டாள் என்று தெரியும்... கடன் கேட்டுப்பார் அடுத்தவன் எவ்வளவு புத்திசாலி என்று



### ராஜினி

மனசு முழுக்க வலியோடு இருந்தாலும் எதுவுமே நடக்காதது போல



சிரித்து சமாளிக்கும் குணம் கொண்டவர்கள் தான் பெண்கள்

### பிரபு

நேர்மை என்பது மிக அரிதான பொக்கிஷம். அதை கீழ்த்தரமான மனிதர்களிடம் எதிர்பார்க்காதீர்கள்... ஏமாந்து போவீர்கள்



### வசந்தி

தொலைத்தலில் இல்லை தேடலில் உள்ளது வாழ்க்கை



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இனப்பிரச்சினைக்கு ஆயுதக் கலாசாரத்தால் எந்தத் தீர்வும் கிடைக்கப்போவதில்லை

## அமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவிப்பு

(காத்தான்குடி)

**வடக்கு- கிழக்கு இனப்பிரச்சினைக்கு ஆயுதக் கலாசாரத்தால் எந்தத் தீர்வும் கிடைக்கப்போவதில்லை என்பதுடன், அரசியல் ரீதியாக சகல தரப்பும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வொன்றினை அரசு விரைவில் முன்வைக்கும் என நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார்.**



காத்தான்குடி மத்திய கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா மற்றும் சாதனையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில், கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் வவுணதீவு பிரதேசத்தில் இரு பொலிஸார் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் யுத்தம் நிறைவடைந்து 9 வருடங்களுக்கு பின்னர் மட்டு.மாவட்டத்தில் பொலிஸார் மீது மேற்கொள்ளப்பட்ட மோசமான தாக்குதலாகும்.

இவ்வாறான செயற்பாடுகளை நாங்கள் ஒருபோதும் அனுமதிப்பதில்லை. ஒத்துழைப்பு வழங்குவதுமில்லை.

ஆயுத கலாசாரம் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது. அதனால் மீண்டும் இனங்களுக்கிடையில் மோதல் நிலையும், யுத்த சூழ்நிலையுமே ஏற்படும்.

நாட்டில் குழப்பமான அரசியல் சூழ்நிலையில் நாம் இருக்கின்றோம். அரசியல் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய தேவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஏற்பட்டது.

அரசையும், நாட்டையும், அரச வளங்களையும் பாதுகாத்து, பொருளாதாரத்தை கட்டியெழுப்பி நாட்டு மக்களுக்கு சுபீட்சமான அரசொன்றை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில் ஜனாதிபதி எடுத்த தீர்மானத்தினாலேயே இப்பிரச்சினை ஏற்பட்டது. அரசியல் நெருக்கடி நிலையை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி முன்னெடுத்துள்ளார்.

எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் இந்த அரசியல் நிலைமாற்றமடைந்து இரண்டு ஆண்டுகளுக்கு கட்டியெழுப்பக் கூடிய ஸ்திரமான அரசை உருவாக்குவது தொடர்பில் நாங்கள் தீர்மானித்துள்ளோம்.

அத்துடன், நாட்டை பொருளாதார ரீதியாக கட்டியெழுப்ப வேண்டும். நாட்டு மக்கள் அதற்கான ஒத்துழைப்பு எமக்கு வழங்க வேண்டும்.

அவ்வாறு ஒத்துழைப்பு வழங்குகின்ற போது சகல இன மக்களும் சமாதானமாக வாழக்கூடிய நிலை உருவாகும். 2009ஆம் ஆண்டு நாட்டில் யுத்தம் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டது. அதன் பின்னர் சகல இன மக்களும் அமைதியான - சமாதானமான சூழலிலே வாழ்ந்து வருகின்றோம்.

இந்நிலையில், சகல இன மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் வடக்கு- கிழக்கு இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும்.

அவ்வாறான தீர்வொன்றை மிகவிரைவில் முன்வைத்து அத்தீர்வு சகல இன மக்களினதும் ஒத்துழைப்போடு நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் ஜனாதிபதி மிகவும் கவனமாக உள்ளார். அதற்கு நாங்கள் சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார். (இ-7)



யாழ்.ஆழியவளை,சி.சி.த.க, பாடசாலை மாணவர்களுக்கு கடந்த 30 ஆம்திகதி கொடுக்குளாய் மகாத்மா படிப்பகத்தினால் அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன. (படங்கள்:-பொற்பதி செய்தியாளர்)

## மாத்தறை மல்லி கைது

(பன்னிப்பிட்டி)

பன்னிப்பிட்டி பகுதியில் மாணிக்கக்கற்கள் மற்றும் வைரக்கல் ஒன்றை கொள்ளையிட்ட சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவரை நேற்று அதிகாலை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த நபர் இரத்மலானையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் 38 வயதுடைய மாத்தறை மல்லி என்பவர் எனவும், அவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-7)

## வயல் வெளியிலிருந்து ஆணின் சடலம் மீட்பு

(வெயாங்கொட )

வெயாங்கொட கொடவெல பகுதியில் வயல் வெளியிலிருந்து ஆண் ஒருவரது சடலத்தை நேற்று முன்தினம் மீட்டுள்ளதாக வெயாங்கொட பொலிஸார் தெரிவித்துள்ளனர். 63 வயதான ஆண் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்நிலையில் சம்பவ இடத்துக்குச் சென்ற அத்தனகல்ல மேலதிக நீதவான் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ள நிலையில் சடலம் பிரேத பரிசோதனைக்காக கம்பஹா வைத்தியசாலைக்குக்கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்நிலையில் குறித்த பகுதியிலிருந்து குறித்த நபரின் கைப்பையும் தொலைபேசி ஒன்றையும் மீட்டுள்ள பொலிஸார் சடலம் தொடர்பான மேலதிக விசாரணணகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 120 | 130 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 100 | 100 | 90 | 120 |
| பச்சைமிளகாய் | 600 | 500 | 500 | 360 | 400 |
| தக்காளி | 300 | 200 | 300 | 300 | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 | 30 | 40 |
| கோவா | 100 | 100 | 100 | 140 | 120 |
| கரட் | 200 | 250 | 240 | 220 | 320 |
| பூசணி | 80 | 50 | 50 | 40 | 80 |
| புடோல் | 120 | 120 | 120 | 150 | 100 |
| வாழைக்காய் | 80 | 50 | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 140 | 140 | 160 | 110 | 140 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 100 | 90 | 120 |
| பாகற்காய் | 300 | 300 | 280 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 140 | 120 | 120 | 300 | 200 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 50 | 60 | 60 |
| பயற்றங்காய் | 300 | 300 | 240 | 200 | 160 |
| லீக்ஸ் | 200 | 120 | 240 | 190 | 240 |
| பீற்றூட் | 160 | 100 | 200 | 60 | 200 |
| கறிமிளகாய் | 300 | 200 | 280 | 220 | 280 |
| முருங்கைக்காய் | 600 | — | — | 300 | 400 |
| போஞ்சி | 150 | 300 | 140 | 130 | 140 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | — | 110 | 100 |
| கீரை - 1பிடி | 60 | 40 | 50 | 30 | 80 |
| தேசிக்காய் | 400 | 300 | 350 | 450 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 50 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 300 | 180 | 200 | 300 | 200 |
| வெங்காயப்பூ | — | — | — | — | — |
| முள்ளங்கி | 100 | 100 | — | 30 | 100 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 50 | 20 | 50 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 15 | 20 |
| ஈரப்பலா | 70 | 50 | 50 | 130 | 100 |

# செய்தித்துளிகள்

## ஆசீர்வாதம் வழங்கும் நிகழ்வு

(ஈச்சமோட்டை)

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு ஆசீர்வாதம் வழங்கும் நிகழ்வு இன்று காலை 6 மணிக்கு பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இடம்பெறும்.(இ-105)

## யானைக்குட்டி கொலை தொடர்பில் இரு தரப்பினர் விசாரணையில்

(கொழும்பு)

உடவளவை நீர்த்தேக்கத்திற்கு அருகில் யானை ஒன்று சுட்டுக் கொல்லப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் வன விலங்கு பாதுகாப்பு திணைக்களமும், பொலிஸாரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். 7 வயது யானைக் குட்டியே நேற்று முன்தினம் அதிகாலை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யானைக் குட்டியின் உடலை பரிசோதனைக்குட்படுத்திய உடவளவை மிருக வைத்தியர் யானைக் குட்டியின் செவி மற்றும் தலைப்பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (இ-7)

## மோட்டார் சைக்கிள் சில்லில் சேலை சிக்கியதால் பெண் பலி!

(கொழும்பு)

மோட்டார் சைக்கிளில் பயணஞ்செய்த பெண்ணொருவரின் சேலையின் பகுதியானது. குறித்த மோட்டார் சைக்கிளின் சில்லில் சிக்கி விபத்துக்குள்ளானதில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

மொரவக்க - நெளும் வீதியில் களுபோவிட்டியன பிரதேசத்துக்கு அருகில் குறித்த விபத்து நேர்ந்துள்ளது. விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் குறித்த பெண் கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து. சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மோட்டார் சைக்கிளில் பயணஞ்செய்யும் பொழுது. அப்பெண் அணிந்திருந்த சேலையின் பகுதியானது. மோட்டார் வாகனத்தின் பின் பக்க சில்லில் சிக்கிக்கொண்டமையால் இந்த விபத்து சம்பவித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

## சம்பளத்துக்கு பாதிப்பு இல்லை



(கொழும்பு)

பாராளுமன்றத்தில்நிறைவேற்றப்பட்ட பிரேரணையால் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் மற்றும் அரச உதவிகள் என்பன துண்டிக்கப்பட மாட்டாது என ஐக்கிய தேசிய முன்னணி அறிவித்துள்ளது.

அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியைப் பயன்படுத்துவதற்கு தடை விதித்து நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. இதனால், அரச நிதியை அமைச்சுக்கள் பயன்படுத்துவது தடை செய்யப்படுகின்றது எனவும் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார். பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார். (இ-7)

## போலி நாணயத்தாள்களுடன் ஒருவர் கைது


(கொழும்பு)

போலி நாணயத்தாள்களை வைத்திருந்த நபர் ஒருவர் கந்துருவெல பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கந்துருவெல நகரத்தில் லொத்தர் விற்பனை நிலையம் ஒன்றுக்கு போலி நாணயத்தாளை வழங்கி லொத்தர் ஒன்றை பெற்றுக் கொள்ள சந்தேகநபர் முயற்சித்துள்ளார்.

இதன்போது அது போலி நாணயத்தாள் என்று அறிந்து கொண்ட லொத்தர் விற்பனை நிலைய உரிமையாளர் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார். இதனையடுத்து போலி 500 ரூபா நாணயத்தாள்கள் மூன்றையும், அச்சு இயந்திரம் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (இ-7)




# ஓவியத்தின் விலை



கபாலிபுரம் என்ற மாநகரில் கபிலன் என்ற ஓவியன் இருந்தான். ஓவியம் வரைவதில் மிகுந்த திறமை உடையவன். யாரைப் பார்த்தாலும் அவர்களை அப்படியே ஓவியம் வரைந்து விடுவான். ஓவியத்திற்கும் அந்த ஆளுக்கும் சிறு வேறுபாடு கண்டுபிடிக்க முடியாது. அவ்வளவு.பொருத்தமாக ஓவியம் வரைவான். பணக்காரர்களை ஓவியமாக வரைந்து கொடுப்பான். அந்த ஓவியத்தை நல்ல விலை கொடுத்து வாங்குவர். அதைத் தங்கள் வீட்டில் அழகாக மாட்டி வைப்பர்.

அந்த ஊரில் ராஜன் என்ற செல்வன் இருந்தான். யாருக்கும் எதையும் தராத கருமி அவன். அவனுடைய பிறந்த நாள் விழா வந்தது. நிறைய உறவினர்கள் விழாவிற்கு வந்திருந்தனர். ராஜனின் இயல்பை அறியாத கபிலன் அந்த விழாவிற்குச் சென்றான்.

ராஜனை வணங்கிய அவன், "ஐயா! நான் சிறந்த ஓவியன். உங்களை அப்படியே ஓவியமாக வரைந்து தருகிறேன். உங்களையே நேரில் பார்ப்பது போல இருக்கும். அதை வரவேற்பு அறையில் அழகாக மாட்டி வைக்கலாம். அந்த ஓவியத்திற்கு எவ்வளவு பணம் தருவீர்கள்?" என்று கேட்டான்.

"உறவினர்கள் தன்னைப் பெருமையாக நினைக்க வேண்டும். பிறகு பணம் தராமல் இவனை ஏமாற்றலாம்" என்று நினைத்தான் ராஜன்.

"நீ வரையும் ஓவியம் என்னைப் போலவே இருக்க வேண்டும். அப்படி இருந்தால் ஆயிரம் பணம் தருகிறேன். இல்லாவிட்டால் பணம் எதுவும் தரமாட்டேன்" என்றான்.

"உங்களைப் போலவே ஓவியம் வரைந்து ஒரு வாரத்தில் தருகிறேன். குறை ஏதும் இருந்தால் பணம் தர வேண்டாம்" என்றான் ஓவியன்.

ராஜனைப் போலவே ஓவியம் வரைந்து எடுத்து வந்தான். அந்த ஓவியத்தை மேலும் கீழும் பார்த்தான் ராஜன்.

"இந்த ஓவியம் என்னைப் போலவா இருக்கிறது? நீயே பார். இவ்வளவு நரையா என் தலையில் உள்ளது? என்னைக் கிழவனாக்கிவிட்டாயே... நான் இருப்பது போல இளமையாக ஓவியத்தை வரைந்து கொண்டு வா" என்றான்.

அந்த ஓவியத்தை எடுத்துச் சென்றான் கபிலன். அதில் சில மாற்றங்கள் செய்தான். அந்த ஓவியத்தை மீண்டும் ராஜனிடம் கொண்டு வந்தான்.

"என்னைத் தானே ஓவியம் வரையச் சொன்னேன். நீ எவனோ ஓர் இளைஞனை வரைந்து உள்ளாயே... இளமையும் முதுமையும் கலந்தது போல உன்னால் வரைய முடியாதா?" என்று கேட்டான். அந்த ஓவியத்தில் மேலும் சில மாற்றங்களைச் செய்தான் கபிலன்.

"இந்த ஓவியமும் என்னைப் போல இல்லை. வேறு ஓவியம் வரைந்து கொண்டு வா" என்றான் ராஜன். "எப்படி வரைந்தாலும் இவன் ஓவியத்தை வாங்கப் போவது இல்லை. ஏதேனும் குறை சொல்லித் திருப்பி அனுப்பப் போகிறான். என்ன செய்வது?" என்று சிந்தித்தான் கபிலன்.

பீர்பாலிடம் வந்து நடந்ததை சொன்னான், "அந்தச் செல்வன் ஓவியம் வாங்காமல் என்னை ஏமாற்றுகிறான். என் உழைப்பிற்கு நீங்கள்தான் ஊதியம் வாங்கித் தர வேண்டும்" என்று வேண்டினான். ராஜனை வரவழைத்தார் பீர்பால்.

"ஏன் இந்த ஓவியனை ஏமாற்ற நினைக்கிறீர். பலமுறை திருத்தம் செய்தும் ஓவியத்தை வாங்க மறுக்கிறீராமே?" என்று கேட்டார்.

"அமைச்சரே! நான் யாரையும் ஏமாற்றவில்லை. என்னைப் போல ஓவியம் வரைந்து தா ஆயிரம் பண்ம் தருகிறேன் என்று இவனிடம் சொன்னேன். இவன் வரைந்த ஓவியம் என்னைப் போல இல்லை. அதனால் தான் பணம் தரவில்லை. என்னைப் போலவே ஓவியம் வரைந்து தரச் சொல்லுங்கள். ஆயிரம் பணத்திற்குப் பதில் இரண்டாயிரமே தருகிறேன்" என்றான் ராஜன்.

"ஓவியம் என்றாலே சிறு சிறு குறைகள் இருக்கத்தானே செய்யும். இது உங்களுக்குத் தெரியாதா?" என்று கேட்டார் பீர்பால்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. என்னைப் போலவே ஓவியம் வரைந்து தரச் சொல்லுங்கள். இரண்டு பங்கு பணம் தருகிறேன். குறை இருந்தால் ஒரு பணமும் தரமாட்டேன்" என்று அடாவடியாகப் பேசினான் அவன்.

"ஒரு வாரம் சென்று வாருங்கள். உங்களைப் போலவே ஓவியம் இங்கு இருக்கும். அதில் குறை இருந்தால் பணம் தர வேண்டாம்" என்றார் பீர்பால். "அந்த ஓவியத்திலும் எப்படியும் குறை கண்டுபிடித்து பணம் தராமல் தப்பிக்கலாம்" என்று புறப்பட்டான் ராஜன்.

"நீ ஓவியம் ஏதும் வரைய வேண்டாம். அடுத்த வாரம் இங்கு வா. பணத்துடன் செல்லலாம்" என்றார்.

ஒரு வாரம் சென்றது.

பீர்பாலின் மாளிகைக்கு ஓவியன் முதலில் வந்தான். பிறகு ராஜன் வந்தான்.

"உங்களைப் போலவே வரையப்பட்ட ஓவியம் இது. திரைச் சீலையால் மூடப்பட்டுள்ளது. சீலையை விலக்கிப் பாருங்கள். சிறு குறையும் உங்களால் கண்டுபிடிக்க முடியாது" என்றார்.

"எப்படியும் வரைந்து இருக்கட்டும். குறை கண்டுபிடித்து விடலாம்" என்று திரையை விலக்கினான் அவன். அங்கே அவனைப் போலவே ஓவியம் இருந்தது. ஆனால், அந்த ஓவியம் அசைந்தது. கண்களை இமைத்தது. "அது ஓவியம் அல்ல. எதிரே உள்ளவர் வடிவத்தை அப்படியே காட்டும் நிலைக்கண்ணாடி. அதில் தன் வடிவம் தெரிகிறது" என்பது அவனுக்குப் புரிந்தது.

"அமைச்சரே! இது ஓவியம் அல்ல. முகம் பார்க்கும் கண்ணாடி" என்றான் அவன்.

"கண்ணாடியில்தான் நம் வடிவம் அப்படியே தெரியும். குறை எதுவும் காணமுடியாது. ஓவியம் என்றால் குறைகள் இருக்கத்தான் செய்யும். இந்தக் கண்ணாடியை எடுத்துச் செல்லுங்கள். ஓவியனுக்கு இரண்டாயிரம் பணம் தாருங்கள்" என்றார் பீர்பால்.

"அமைச்சரே! இது நியாயம் அல்ல!" என்றான் அவன்.

"நியாயத்தைப் பற்றி நீங்கள் பேசாதீர்கள். குறையே இல்லாமல்யாராலும்ஓவியம்வரைய முடியாது.

இதை அறிந்த நீங்கள் என்ன செய்தீர்கள்? இந்த ஓவியங்களை எத்தனை முறை வரையச் சொன்னீர்கள்?

"நம் வடிவம் கண்ணாடியில் தான் குறை இன்றித் தெரியும். இரண்டாயிரம் பணம் தந்து இதை வாங்கிச் செல்லுங்கள். இல்லையேல் ஏமாற்ற முயன்றதற்குக் கடுமையான தண்டனை கிடைக்கும்" என்றார் பீர்பால்.

"ஆயிரம் பணம் கொடுத்து அந்த ஓவியத்தையே வாங்கி இருக்கலாம். வீட்டில் அழகாக மாட்டி வைத்து இருக்கலாம். எல்லாரும் பார்த்து மகிழ்ந்து இருப்பர். பத்துப் பணம் பெறாத கண்ணாடி இது. இதற்கு இரண்டாயிரம் பணம் தர வேண்டி வந்ததே" என்று தன்னையே நொந்து கொண்டான் அவன். ஓவியனிடம் இரண்டாயிரம் பணம் தந்தான். அந்தக் கண்ணாடியை எடுத்துக் கொண்டு வருத்தத்துடன் சென்றான் பணக்காரன்.

# விடுகதைகள்

• என்னிடம் நாடு உண்டு.ஆனால் வீடு இல்லை. கடல் உண்டு. ஆனால் மீன் இல்லை. மலை உண்டு. ஆனால் பறவைகள் இல்லை. காடு உண்டு. ஆனால் மரம் இல்லை. நான் யார்?

பூகோளப்படம்

• நூல் நூற்கும் நெசவாளிக்குக் கட்டிக் கொள்ளத் துணியில்லை. அது என்ன?

சிலந்தி

• இரண்டு நண்பர்கள் எப்பொழுதும் சேர்ந்தே இருப்பார்கள். ஒருவன் முன்னால் போனால் மற்றவன் பின்னால் போவான். அவர்கள் யார்?

கால்கள்

• அம்மா படுத்திருப்பாள். மகள் ஓடிக்கொண்டிருப்பாள். அவர்கள் யார்?

அம்மி, குழவி

• அனல் மேலே கறுப்புக் குதிரை. அதன் மேலே மாறி மாறிக் குதிக்கிறான் வெள்ளையன். அவர்கள் யார்?

தோசைக்கல், தோசை

# நம்பிக்கை காகம்



காகம் ஒன்று காட்டிலே
தாகத்தாலே தவித்ததாம்
அங்குமிங்கும் தேடியே
வீடு நோக்கிச் சென்றதாம்
அங்கு சிறிய ஜாடியில்
கொஞ்சம் தண்ணீர் இருந்ததாம்
எட்டி எட்டி பார்த்ததாம்
எட்டாமல் போனதாம்
சிறிய சிறிய கற்களை
பொறுக்கிக் கொண்டு போட்டதாம்
தண்ணீர் மேலே வந்ததாம்
தாகம் தீர குடித்ததாம்
நம்பிக்கையுடைய காக்கா தான்
சந்தோஷமாய் பறந்ததாம்

உன்னை யோக்கியனாக மாற்றிக் கொள்வதில் ஒரு நன்மை ஏற்படும். அதாவது உலகில் ஒரு அயோக்கியன் குறைகிறான். ~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## குழம்பினத்தோட குழம்பட்டும் சம்பந்தரைப் பிரதமராக்குவம்

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியில் இருந்து நீக்கி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கிய ஜனாதிபதியின் கைங்கரியத்தோடு நாடு குழம்பிப் போய்க் கிடக்கிறது.

பாராளுமன்றத்தைக் கூட்டுவது என்றால், தற்போதைய ஆளுந்தரப்பு பாராளுமன்றம் வர மறுக்கிறது.

2019ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை சபையில் சமர்ப்பிக்கின்ற காரியமெல்லாம் தடைப்பட்டு விட்டது.

இதற்கு மேலாக அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டுக்கு பாராளுமன்றம் அனுமதிக்காத நிலையில் எல்லாம் தம்பிட்டுப் போயுள்ளன.

ஒட்டுமொத்தத்தில் அரச இயந்திரம் இயங்க முடியாத ஒரு நிலைமை ஏற்படும்போது அரச அமைப்புக்களில் அதிகாரத் துஷ்பிரயோகங்களும் கடமைப் புறக்கணிப்புக்களும் நடக்கக் கூடிய வாய்ப்புக்கள் உண்டு.

எதுவாயினும் இப்போதிருக்கின்ற சூழ்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியில் இருக்கக்கூடிய ஒருவரைப் பிரதமராக்குவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தயாராக இருக்கின்ற போதிலும் அது ரணில் விக்கிரமசிங்கவாக இருக்க முடியாது என்பதிலும் ஜனாதிபதி மிகவும் உறுதியாக இருக்கின்றார்.

ஆக, ரணில் விக்கிரமசிங்கவை விடுத்து சஜித் பிரேமதாசவை அல்லது கரு ஜெயசூரியவைப் பிரதமராக்குங்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதிக்குப் பரிந்துரை செய்யுமாயின் அடுத்த கணமே அதனை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி மைத்திரி தயாராக இருக்கின்றார்.

ஆக, இப்போது மகிந்த ராஜபக்ஷ பிரதமர் என்பது பிரச்சினையல்ல. மாறாக ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக நியமிக்க மாட்டேன் என்ற ஜனாதிபதி மைத்திரியின் நிலைப்பாடும்

ரணில் விக்கிரமசிங்க தவிர்ந்த வேறு எவரையும் பிரதமராக நியமிக்க ஐக்கிய தேசியக் கட்சி முன்மொழியாது என்ற அந்தக் கட்சியின் விடாப்பிடியுமே இலங்கை அரசியலில் சர்ச்சையாக உள்ளது.

இதை நாம் கூறும்போது, அட இலங்கையில் ஜனநாயகத்தைப் பாதுகாக்கின்ற பெரும் பணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈடுபட்டுள்ளதாக எங்கோ வாசித்த ஞாபகம். நம்மை தட்டிக் கொள்கிறது.

இவ்வாறு ஜனநாயகத்தை பாதுகாக்கின்ற பெரும் பணியில் ஈடுபடுகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியமான அங்கத்துவக் கட்சி போல செயற்படுவதால், நாட்டின் குழப்பமான அரசியலைச் சுமுகமாக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரை பிரதமராக்கினால் என்ன என்பது நம் சிற்றறிவின் சிந்தனை.

இரா.சம்பந்தரைப் பிரதமராக நியமிப்பதாக அதி உத்தம ஜனாதிபதி மைத்திரி அறிவித்தால் அதனை ஐக்கிய தேசியக் கட்சியும் ஆதரிக்கும் என நம்பலாம்.

ஏனெனில் கூட்டமைப்பு ஜனநாயகத்தைப் பாதுகாக்கின்ற பெரும் பணியைச் செய்கிறதல்லவா.

ஆகவே இரா.சம்பந்தரைப் பிரதமராக்கினால், ரணில் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும் மைத்திரி தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஆதரிக்கும் என்ற எடுகோளின் அடிப்படையில்;

நடந்த பெருங்குழப்பங்களோடு இதுவும் ஒரு குழப்பமாக இருக்க, சம்பந்தரைப் பிரதமராக நியமியுங்கள் பார்க்கலாம்.

## பாரிய கவனயீர்ப்புப் போராட்டத்துக்கு காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகள் அழைப்பு

(கொழும்பு)

காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுகள் எதிர்வரும் 10ஆம் திகதி கவனயீர்ப்பு போராட்டமொன்றை நடத்தவுள்ளதாகவும் அதற்கு அனைத்து தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டுமெனவும் கோரியுள்ளனர்.

முல்லைத்தீவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுகள் தங்களது பிள்ளைகளை தேடித்தருமாறு கோரி கடந்த வருடம் மார்ச் 8ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கவனயீர்ப்பு போராட்டம் 364 ஆவது நாளாக தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

ஆனாலும் அவர்களின் பிரச்சினைக்கு அரசாங்கமோ அல்லது ஏனைய தரப்பினரோ தீர்மானங்களை முன்வைக்காத நிலையில் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டி எதிர்வரும் 10ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக பாரிய போராட்டமொன்றை நடத்துவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு)

## பொதுத் தேர்தலை நடத்தக்கோரி கையெழுத்து வேட்டை

நாடாளுமன்றத்தைக் கலைத்து உடனடியாக பொதுத் தேர்தலை நடத்தக் கோரி ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் ஏற்பாட்டில் கையெழுத்து வேட்டை நடத்தப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் 50 இலட்சம் கையொப்பம் பெறும் நிகழ்வின் மற்றொரு கட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை புத்தளம், மதுரங்குளி நகரில் இடம்பெற்றது.

இதன்போது பொதுத் தேர்தலை நடத்தக் கோரும் துண்டுபிரசுரங்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினர்களினால் விநியோகிக்கப்பட்டதுடன், ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் இதன்போது தமது கையொப்பங்களை இட்டிருந்தனர்.

அங்கு பெறப்பட்ட கையொப்பங்கள் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் தேசிய தேர்தல் ஆணைக்குழுவிற்கு அனுப்பவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (மு)

## சபாநாயகருக்கு எதிராக நேற்றும் ஆர்ப்பாட்டங்கள்

சபாநாயகரின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என வலியுறுத்தியும் நேற்றும் நாட்டின் சில பிரதேசங்களில் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

பலாங்கொடை, ஹிரியால, மாத்தறை, அநுராதபுரம், ஹிங்குரக்கொடை, குருவிட்ட, கொத்மலை மற்றும் குருநாகல் ஆகிய பிரதேசங்களில் இவ்வாறு ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன், யாழ்ப்பாணம், நீர்கொழும்பு மற்றும் திரப்பனை ஆகிய பிரதேசங்களிலும் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தி போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. (மு)

## பேருந்து கட்டண குறைப்பு தொடர்பில் பேச்சுவார்த்தை

பேருந்து கட்டணங்களைக் குறைப்பது தொடர்பில் இன்று தீர்மானிக்க உள்ளதாக அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுடன் இன்று நடைபெற உள்ள கலந்துரையாடலின் பின்னர் தீர்மானம் ஒன்று மேற்கொள்ளப்பட உள்ளதாக குறித்த சங்கத்தின் செயலாளர் அஞ்சன பிரியன்ஜித் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் டீசலின் விலை 7 ரூபாயால் குறைக்கப்பட்ட நிலையில், மீண்டும் கடந்த 15ஆம் திகதி டீசலின் விலை 5 ரூபாயால் குறைக்கப்பட்டது.

இதனடிப்படையில், ஒரு மாதத்திற்குள் டீசலின் விலை 17 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது. (மு)

## பொலிஸ் உத்தியோகத்தர் பூதவுடலுக்கு ஜனாதிபதி இறுதி மரியாதை

(காலி)

மட்டக்களப்பு வவுணதீவு பொலிஸ் சோதனைச் சாவடியில் கடமையிலிருந்த வேளையில் கொலை செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் நிரோஷன் இந்திக்க பிரசன்னவின் பூதவுடலுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இறுதி மரியாதை செலுத்தினார்.

பூதவுடல் வைக்கப்பட்டுள்ள காலி உடுகம பிரதேசத்திலுள்ள அவரது வீட்டிற்கு நேற்று முற்பகல் சென்ற ஜனாதிபதி, பூதவுடலுக்கு இறுதி மரியாதை செலுத்தியதுடன், பொலிஸ் உத்தியோகத்தரின் மனைவி உட்பட குடும்ப உறவினர்களுக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தார். (மு)

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
16
2018
யாழ். சமூக செயற்பாட்டு மையம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
அனைத்து வேலைத் தளங்களிலும் பெண்களுக்கெதிரான வன்முறைகளைத் தடுப்பதும், இல்லாதொழிப்பதும் நம் எல்லோருடைய கடமையும் பொறுப்புமாகும்.
JSAC

## இயற்கையை ரசிக்க...

- இயற்கையை ரசிக்கப் பழகுங்கள். இன்பமாய் வாழ்க்கையை வாழுங்கள்.
- இயற்கை நமக்கு நிறையப் போதிக்கி றது. மனக் கவலைகளைத் தவிர்க்கவும மனச் சோர்வை விலக்கவும் இயற்கை பெரிதும் உதவுகிறது. அருவியிலிருந்து குதிக்கும் தண்ணீர், புல் வெளி மேல் தங்கும் பனித்துளிகள், ஆறுகளில் தவழ்ந்து வரும் படகு, கடற்கரை மணற் பரப்பைத் தொடும் அலைகள், அடர்ந்த சோலைக்குள் அரண்மனை, மலைகளை தொட்டுப்போகும் மேகங்கள், மழை நின்ற பின்னால் இலைகள்சிந்தும் நீர்த்துளிகள், பூக்களை வருடும் தென்றல் காற்று, தாமரை இலைகளின் மேல் உருண்டு ஓடும் தண்ணீர் முத்துக்கள், கிளிகளின் கீ...கீ...., குயில்களின் கூக்கு.....கூக்கு ...., மயில்களின் தோகை விரிப்பில் நடனம், யானைகளின் பிளிறல், குதிரைகளின் குளம்படி ஓசை, செவிகளை வருடும் மெல்லிசை, மனதை மயக்கும் பூக்களின் வாசனை, நல்ல ஆரோக்கியத்தைப் பேணிக் காக்கும் மூலிகை போன்ற இயற்கையை ரசித்து மகிழுங்கள் வாழ்வில் இனிமையாய் வாழ்ந்திடுங்கள்.

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### அறிவறிந்தோர் ஞாபகம்



ஒரு காலியான பாத்திரத்தை நிமிர்த்தித் தண்ணீருக்குள் அழுத்த அதில் நீர் நிறைந்து விடும். பின்னர் அதை விட்டு விட்டால், அது நீரில் முழுகி மறைந்து போகும். அதுபோலவே பார்த்தல், கேட்டல், முகர்தல், ஊறு உணர்தல், சுவைத்தல் ஆகிய ஐயுணர்வுகளில் செயலாற்றப் பழகி விட்ட அறிவானது உணர்ச்சி நிலை எய்தி, உணர்ச்சி மயமாகி, தன் உண்மை நிலையினை இழந்து விடுகிறது.

அதே பாத்திரத்தைத் தலைகீழாய்த் தண்ணீருக்குள் அழுத்திப் பிடித்தால், அதில் நிறைந்திருக்கும் காற்றானது வெளியே போகாமல் நிலைத்து நிற்பதால், அப்பாத்திரத்தினுள் நீர் நுழையாது. அப்பாத்திரம் தலைகீழான நிலையில், நீர் நுழைய இடம் தராமல், மிதந்து கொண்டே இருக்கும்.

அதே போல் தன் ஆதிநிலையறிந்து அகண்டாகாரத்தில் விழிப்புடன் இருக்கும் அறிவு, புலன்களின் மூலம் செயலாற்றிய போதிலும் அகண்ட ஞாபக வேகத்துடன் இருப்பதல்லாமல் புலனியக்க வேலை முடிந்தவுடன் தன்னிலைக்கு, விரிந்த எல்லைக்கு, வந்து நிலைத்திருக்கும்.

# ஷாவுக்குப் பதிலாக சர்மாவை இறக்கலாம்




அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில், பிரித்வி ஷாவுக்குப் பதிலாக ரோஹித் ஷர்மாவைக் களமிறக்கலாம் என இங்கிலாந்து முன்னாள் தலைவர் மைக்கேல் வாகன் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

இந்தியக் கிரிக்கெட் அணி தற்போது அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. அவுஸ்திரேலியா லெவனுக்கு எதிரான பயிற்சி டெஸ்ட் ஆட்டத்தில், காயம் காரணமாகப் பிரித்வி ஷா பாதியில் வெளியேறினார். அவருக்குக் கணுக்காலில் தசைநார் கிழிந்ததால், எதிர்வரும் 6 ஆம் திகதி தொடங்கும் அடிலெய்ட் டெஸ்டில் பிரித்வி ஷா இடம்பெற மாட்டார் என பி.சி.சி.ஐ. தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மைக்கேல் வாகன், அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்டில் பிரித்வி ஷாவுக்குப் பதிலாக ரோஹித் ஷர்மாவை களமிறக்கலாம் என ஆலோசனை கூறியுள்ளார்.

இதுதொடர்பாக தனது டுவிட்டர் பக்கத்தில் அவர் கூறுகையில், 'பிரித்வி ஷா இல்லாத நிலையில், அந்த இடத்துக்கு ரோஹித் ஷர்மாவை களமிறக்கலாம். இது எனது ஆலோசனை மற்றும் விருப்பமாகும். துடிப்பான இளம் வீரர், பிரித்வி ஷா ஆட முடியாதது வேதனை தருகிறது' எனத் தெரிவித்துள்ளார். (க)

# சொந்த மண்ணில் அவுஸ்திரேலியாவை வீழ்த்துவது எளிதான விடயமல்ல




இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் அவுஸ்திரேலியாவுடனான முந்தைய தொடர்கள் குறித்து தனது அனுபவத்தை பகிர்ந்துள்ளார்.

இந்தியா-அவுஸ்திரேலியா அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி, எதிர்வரும் 6 ஆம் திகதி அடிலெய்டில் நடைபெற உள்ளது. இதற்கு முன்பாக 4 நாட்கள் கொண்ட பயிற்சி ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், 3 ஆம் நாள் பயிற்சி ஆட்டம் முடிந்த பின்னர் இந்திய சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் பேட்டியளித்தார். அப்போது அவர் கூறுகையில்,

'அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் நாம் பந்துவீச்சிலும் கூட நெருக்கமான கூட்டணி அமைத்து செயற்பட வேண்டியது முக்கியமானதாகும். பந்துவீச்சில் நல்ல கூட்டணியை உருவாக்குவதுடன், விக்கெட்டுகளையும் வீழ்த்த வேண்டும்.

எல்லா நேரங்களிலும் எதிரணியின் விக்கெட்டை எளிதில் வீழ்த்தி விட முடியாது. இருப்பினும் பந்துவீச்சில் நாம் தொடர்ந்து முன்னிலையில் இருக்க வேண்டியது அவசியமானதாகும்.

அவுஸ்திரேலிய ஆடுகளங்கள் துடுப்பாட்டத்திற்கு சாதகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கிறேன். எனவே பந்துவீச்சாளர்கள் தொடர் முழுவதும் புத்திசாலித்தனமாக செயற்பட வேண்டும்.

சுழற்பந்து வீச்சாளர் என்ற முறையில் நான் முதல் இன்னிங்சில் விக்கெட் வீழ்த்துவது முக்கியமானதாகும். கடந்த முறை இங்கு நடந்த தொடரில் நான் சிறப்பாகச் செயற்பட்டேன். அது எனது கிரிக்கெட் வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்தது.

அவுஸ்திரேலியாவை அதன் சொந்த மண்ணில் வீழ்த்தி, தொடரை வெல்வது எளிதான காரியம் அல்ல. என்னை பொறுத்த வரையில், இப்போதைக்கு அவுஸ்திரேலியா தான் வெற்றி வாய்ப்புள்ள அணியாகத் தெரிகிறது' எனத் தெரிவித்துள்ளார். (க)

# மோசமான ஆட்டம் வாழ்வைப் பாதிக்கவில்லை

## யுவராஜ் நம்பிக்கையுடன்



இந்திய கிரிக்கெட் வீரர் யுவராஜ்சிங், ரஞ்சிக் கிண்ண போட்டியில் தனது மோசமான ஆட்டம் திருமண நாள் கொண்டாட்டத்தை பாதிக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

2018-19 ஆண்டுக்கான ரஞ்சி கிண்ண கிரிக்கெட் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில், யுவராஜ் சிங் பஞ்சாப் அணிக்காக விளையாடி வருகிறார்.

கடந்த நவம்பர் 28 ஆம் திகதி பஞ்சாப்-டில்லி அணிகளுக்கு இடையிலான போட்டி தொடங்கியது.

இந்தப் போட்டியில் பஞ்சாப் அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆனால் யுவராஜ் சிங்கின் ஆட்டம் மோசமானதாக இருந்தது. அதாவது தான் எதிர்கொண்ட 28 ஆவது பந்தில் தான் யுவராஜ் சிங் முதல் ஓட்டங்களை எடுத்தார். பின்னர் தொடர்ந்து ஆடிய அவர், 88 பந்துகளில் 4 பவுண்டரிகளுடன் 24 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து அவுட் ஆனார்.

யுவராஜின் இந்த ஆட்டம் விமர்சனத்திற்குள்ளானது. இந்நிலையில், தனது இரண்டாம் ஆண்டு திருமண நாளை யுவராஜ் சிங் கொண்டாடியுள்ளார். தனது மனைவி ஹேசல் கீச் உடன் இருக்கும் புகைப்படத்தை, யுவராஜ் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அதில் வாழ்வின் சிறந்த மற்றும் மோசமான என அனைத்து தருணங்களிலும் தனது மனைவி துணை நிற்பதாகவும் இந்த பந்தம் தொடர வேண்டும் என்றும் குறிப்பிட்டு தனது மனைவிக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் டில்லி அணிக்கு எதிரான மோசமான ஆட்டம், தனது இரண்டாம் ஆண்டு திருமண நாள் கொண்டாட்டத்தை பாதிக்கவில்லை என்பதை யுவ்ராஜ் சிங் குறிப்பிட்டுள்ளார்.

36 வயதாகும் யுவராஜ் சிங் 304 ஒருநாள் போட்டிகளிலும் 40 டெஸ்ட் மற்றும் 58 இருபது-20 போட்டிகளிலும் விளையாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)



2018 ஆம் ஆண்டிற்கான ஆசிரியர்களுக்கான தேசிய ரீதியிலான கராத்தே சுற்றுப்போட்டி கடந்த 25 ஆம் திகதி கொழும்பு டொறிங்ரன் உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இதில் யாழ்ப்பாணம் மாதகலைச் சேர்ந்த சென்சே S.செல்வச்சந்திரன் குமித்தே போட்டியில் வெள்ளிப்பதக்கம் பெற்றதோடு அதே போட்டியில் இவரது ஆசிரியரும் S.S.K.A. கராத்தே கழகத்தின் பிரதம ஆசிரியருமான சென்சே S.விஜயராஜ் காட்டா, குமித்தே போட்டிகளில் இரண்டு தங்கப்பதக்கங்கள் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# அடுத்த உலகக்கோப்பை வரை இந்திய அணிக்கு டோனி வேண்டும்




இந்திய அணியின் முன்னாள் தலைவர் டோனி. இரண்டு உலகக் கோப்பையை (2007 இருபது ஓவர், 2011 ஒருநாள் போட்டி) பெற்றுக்கொடுத்து அவர் நாட்டுக்குப் பெருமை சேர்த்தார்.

37 வயதான டோனி 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் டெஸ்டில் இருந்து ஓய்வு பெற்றார். இதைத்தொடர்ந்து ஒருநாள் போட்டி மற்றும் 20 ஓவர் தலைவர் பதவியில் இருந்து விலகினார். அந்த இரு நிலைகளிலும் விளையாடி வந்தார். இதற்கிடையே மேற்கிந்தியத்தீவு அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 20 ஓவர் போட்டியில் இருந்து டோனி நீக்கப்பட்டார்.

இதனால் அவரது எதிர்காலம் குறித்த கேள்வி எழுப்பப்பட்டது. 20 ஓவர் போட்டியை பொறுத்தவரை டோனி இனி இடம் பெறுவது கேள்விக்குறியே. ஒருநாள் போட்டிகளில் ஆட்டத்திறனை பொறுத்து அவரது எதிர்காலம் இருக்கிறது.

இந்த நிலையில் டோனி வலிமையானவர், 2019 உலக கோப்பை போட்டிக்கான அணிக்கு அவர் தேவையானவர் என்று நியூசிலாந்து முன்னாள் தலைவரும் சென்னை சுப்பர் கிங்ஸ் பயிற்சியாளருமான ஸ்டீபன் பிளமிங் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில்,

டோனி இந்திய அணியில் இடம்பெற நிறைய வாய்ப்புகள் இருக்கிறன. ஏனென்றால் அவரது வலிமையை கணிக்க இயலாது.

கடந்த ஐ.பி.எல். போட்டியில் டோனியின் துடுப்பாட்டத்தைப் பார்த்தால் இது தெரியும்.

ஒருநாள் போட்டிகளில் போன்று டோனி நம்பிக்கையுடன் ஆட வேண்டும்.

அவர் மிகப்பெரிய கட்டத்தை எதிர்நோக்கி இருப்பதாக நினைக்கிறேன். இவ்வாறு பிளமிங் கூறினார். (க)

அன்பு வாசகர்களே!
உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 எனும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.
உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## க.பொ.த சா/த...

க்கு முன்னர் பரீட்சை நிலையங்களுக்கும் பரீட்சார்த்திகள் வர வேண்டும் என பரீட்சைகள் ஆணையாளர் சனத் பி பூஜித அறிவித்துள்ளார்.

பரீட்சை மண்டபங்கள் மற்றும் பரீட்சை வினாத்தாள்கள்- விடைத்தாள்களை எடுத்துச் செல்லும் போதான பாதுகாப்புக்கு நாடு முழுவதும் 15 ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் நிறைவடைந்துள்ளன. இம்முறை பரீட்சை நிலையங்களுக்கு மேலதிக நிலையப் பொறுப்பதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பரீட்சை மண்டபத்தில் ஏதாவது முறையற்ற செயற்பாடுகள் இடம்பெற்றதாக தகவல் கிடைத்தால் உடனடியாக பரீட்சைகள் திணைக்களத்துக்கு அறிவிக்கவேண்டும்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் 0112 784208 அல்லது 0112 784537, 0113 188350 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும்.

பரீட்சை நடைபெறும் போது பரீட்சை செயற்பாடுகளுக்கு குந்தகம் விளைவிக்கும் விதமாக யாராவது செயற்பட்டால் பரீட்சைகள் திணைக்களத்துக்கோ அல்லது அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கோ அறிவிக்குமாறு பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் சனத் பி பூஜித தெரிவித்தார்.(மு)

## எனது உருவப்பொ...

சேவையாளர் விருது வழங்கும் விழா (எழுக நீ விருது ) வவுனியா நகரசபையின் கலாசார மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார் இவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்று (நேற்று) காலை எனக்கு பல தொலைபேசி அழைப்புக்கள் வந்தன. இன்று (நேற்று) வவுனியாவில் நடைபெறும் இந்தக் கூட்டத்திற்கு முன்னர் ஒரு கட்சி சார்ந்தோர் எதிர்ப்புத் தெரிவித்து எனது உருவப் பொம்மையை எரிப்பதற்கு ஆயத்தம் செய்வதாகச் சொன்னார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் எனக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் அந்தக் கட்சியைச் சார்ந்தோர் ஒன்றை மட்டும் நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டும். என்னுடைய உருவப் பொம்மையை ஒருமுறையல்ல ஆயிரம் முறை எரியுங்கள் அதைப்பற்றி நான் கவலைப்படமாட்டேன். ஆனால் தமிழ் மக்களின் நீண்ட கால கொள்கைகளை நீங்கள் சார்ந்த கட்சியுடன் சேர்த்து எரித்து விடாதீர்கள் என்று தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

தேர்தல் காலங்களில் பல்வேறு கட்சிகள் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிடுவதும் மேடைகளில் முழக்கங்களை மேற்கொள்வதும் நீங்கள் அனைவரும் அறிந்ததே. தேர்தல் காலங்களில் வாக்குறுதிகளை அள்ளி வழங்குவதும் தேர்தல் முடிந்த கையோடு அவற்றையெல்லாம் காற்றில் பறக்க விட்டுத் தம்மை வளப்படுத்திக் கொள்கின்ற நடவடிக்கைகளிலேயே எமது அரசியல் தலைவர்கள் பலர் ஈடுபட்டு வருகின்றார்கள்.

மக்கள் பற்றிய சிந்தனைகள், மக்களின் தேவைகள், அபிலாஷைகள் ஆகியவற்றை நிறைவு செய்ய வேண்டும் என்ற ஒரு எண்ணப்பாடு மக்கள் பிரதிநிதிகளாகிய எமது மனங்களில் இருந்திருக்குமாயின் எமது மக்களின் வாழ்வு என்றோ மேம்பட்டிருக்கும்.

நாம் பதவிக்கு வந்ததும் எவற்றைப் பற்றி சிந்திக்கின்றோம்? வழக்கமாக பிரதிநிதிகள் எமக்கான வசதிகளை மேம்படுத்தவே சிந்திக்கின்றோம். எமக்கு வசதிகள் தேவைதான். உதவிகள் தேவைதான். செலவுப் படிகள் தேவைதான். சலுகைகள் தேவைதான். ஆனால் அவை யாவும் மக்கள் நன்மைக்காகவும் மக்கள் சேவைக்காகவும் பாவிக்கப் பயன்படுத்தப்பட வேண்டும். மக்களுக்கென வழங்கப்படும் பணங்களில் மக்கள் சேவைக்கென வழங்கப்படும் உதவிகளில் கைவைத்தல் மக்களுக்குச் செய்யும் துரோகமான செயலாகும்.

நாம் கட்சிகளையும் எம்மையும் மேம்படுத்தப்போய் மக்களை மறந்து போகின்றோம். மக்கள் நலனுக்கென்றே கட்சிகள் உருவாக்கப்பட்டன. ஆனால் இன்று மக்கள் நலனை விட்டு கட்சி நலன்களிலேயே கவனத்தைச் செலுத்தி வருகின்றோம். சுயநலங்களிலேயே சிந்தனையைப் பதியவைத்து வருகின்றோம்.

இந்த நாட்டின் பூர்வீகக் குடிகளாக, செம்மொழி அந்தஸ்தைப் பெற்ற தமிழ் மொழியை தமது தாய் மொழியாகப் பேசுகின்ற மக்கள் வாழுகின்ற வடக்குக் கிழக்குப் பகுதிகளில் மொழி, கலை, கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம் ஆகியவற்றைப் போற்றிப் பாதுகாத்து வருகின்ற, வந்துள்ள பல்துறை சேவையாளர்கள் பலர் எம்மிடையே காணப்படுகின்றார்கள். ஆனால் அவர்களில் கூடுதலானவர்கள் இலைமறை காயாக மக்களுடன் மக்களாக வாழ்ந்து தம்மை இனங்காட்டிக் கொள்ளாதவர்களாகவே வாழ்ந்து வந்துள்ளார்கள். வாழ்ந்து வருகின்றார்கள்.

இவர்களின் சிறப்புக்களை ஏனைய மக்களுக்கு எடுத்துக் கூறுவதற்கும் அவர்களின் ஆக்கங்களை இலக்கியப் படைப்புக்களை, கவிதை நயங்களை, ஓவிய அலங்காரங்களை, இசைப்பணிகளை, பொதுமக்கள் சேவைகளை மக்கள் அறிந்து கொள்வதற்கும் அவற்றைப் படித்துப் பயன் பெறுவதற்கும் இவ்வாறான முன்னெடுப்புக்கள் பெரிதும் உதவுகின்றன. இன்றையநிலையில் பல்வேறுதுறைசார் சேவையாளர்கள் சிறப்புடன் வாழக் கூடிய ஒரு கட்டமைப்பை உருவாக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

எமது மொழி, அதன் செழுமை, இலக்கியச் சுவை, தொழிற் பாரம்பரியங்கள், சமூகப் பாரம்பரியங்கள் ஆகியன பாதுகாக்கப்பட வேண்டுமெனின் எமது பல்துறை சேவையாளர்கள் அடையாளங்காணப்பட்டு போற்றப்பட வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் எமது நாட்டின் அரசியல் முன்னெடுப்புக்களும் அரசியல்வாதிகளின் அல்லது மக்கள் பிரதிநிதிகளின் செயற்பாடுகளும் கேலிக்கூத்தாக மாற்றப்பட்டு பாராளுமன்றம் ஒரு நகைப்புக்குரிய மன்றமாக மாற்றப்பட்டிருப்பது வேதனைக்குரியது.

எது எவ்வாறிருப்பினும் எமது நாடு என்ற வகையில் எம்மைப் பிற நாட்டவர்கள் எள்ளி நகையாடுவதை நாம் இடமளிக்கலாகாது. அரசியல் என்பது எப்பாடுபட்டேனும் எமக்கெதிரான கருத்துக்களைக் கொண்டிருப்பவர்களை பெயரிழக்கச் செய்யும் ஒரு வித்தையாகவே இன்று மாறியுள்ளது.

அரசியல் ரீதி யாக ஒருவரைப் பிடிக்கவில்லை என்றால் அவர் மீது சேறு அள்ளிப் பூசுவதே அரசியல் என்று ஆகிவிட்டது. மக்கள் நலம் இச் சேறு பூசலின் போது அடிபட்டுப் போய் விடுகின்றது. சேறு பூசலும் அதற்கெதிரான செயற்பாடுகளுமே முதன்மை அடைகின்றன.

உண்மை பேசுபவர்களை அடக்கியாள முனைவதும் புளுகு மூட்டைகளை அவிழ்த்துக் கொட்டுபவர்களை உயரே தூக்கி வைத்து கொண்டாடுவதுமான நிலையே இன்று அரசியலில் வலுப்பெற்றுள்ளது. இந்த அரசியல் நிலை மாற்றப்பட வேண்டும்.

எமது அரசியல் முன்னெடுப்புக்களில் சட்டத்தின் வாயிலாக அரசியல் யாப்பு ரீதியாக எமது மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உரித்துக்களைப் பெற்றுக் கொடுப்பதையே நான் முதன்மைப்படுத்தி வருகின்றேன்.

கிடைப்பதை எடுப்பதே உசிதம் என்று வாழ்ந்து வரும் எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர் நிலை அங்கத்தவர்களுக்கும் ஏனைய பிரதிநிதிகளுக்கும் எனது செயற்பாடு சற்று விசனத்தை உண்டுபண்ணியிருப்பதை அவதானிக்கக் கூடியதாய் உள்ளது.

எனினும் எனது செயற்பாடுகள் நாம் மக்களுக்கு 2013ல் கொடுத்த வாக்குறுதிகளின் அடிப்படையிலேயே அமைந்திருப்பதை மக்கள் கவனிக்க வேண்டும். எமது மக்களின் விடிவிற்காக அவர்களின் வாழ்க்கைத் தர மேம்பாட்டிற்காக அவர்களுக்கான உரித்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காகவே நாம் பாடுபட்டு வருகின்றோம். இந்த நாட்டில் தமிழ் மக்கள் சகல உரித்துக்களுடனும் சமஷ்டி முறையிலான ஒரு அரசியல் கட்டமைப்பின் கீழ் சுதந்திரமாக வாழக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாக வேண்டும்.

ஆனால் எம்முடன் ஒத்த அரசியல் கருத்துக்களைக் கொண்ட கட்சிகள் கூட பல்வேறு திசைகளில் பயணப்படுகின்ற நிலை ஒன்று உருவாகி வருகின்றது. இது தவிர்க்கப்பட வேண்டும். தத்தம் கட்சி ரீதியான அவர்களின் சிந்தனைகளே பல சிக்கல்களை உருவாக்கி வருகின்றன. இந்த நிலையில் மேலும் ஒரு கட்சி அவசியமா என்று சிலர் கேட்கின்றார்கள். நான் புதியதொரு கட்சியை உருவாக்கியதன் ஊடாக ஏனைய கட்சிகளுடன் பகைத்துக் கொண்டேன் என்றோ அல்லது அவர்களை உதாசீனம் செய்து விட்டேன் என்றோ பொருள் கொள்ளக்கூடாது.

ஒத்த கருத்துடையவர்களைச் சேர்த்துக் கொண்டு தமிழ் மக்களின் விடிவுக்காக ஒரு நேர் வழியில் சிறந்த ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன் கூடிய ஒரு அரசியல் முன்னெடுப்பின் ஊடாக எமது இலக்கை அடைய முயற்சி செய்யவே விரும்புகின்றேன்.

என்னோடு இணைந்து கொண்டு சேவையாற்ற விரும்புகின்ற அனைவரையும் அன்புக்கரம் நீட்டி அழைக்கின்றேன். கட்சிகளுக்கிடையே உள்ள பேதங்களை மறந்து எமது மக்கள் நன்மை கருதி ஒற்றுமையுடன் உழைக்க முன்வாருங்கள் என அனைவருக்கும் இச் சந்தர்ப்பத்தில் பகிரங்க அழைப்பு மூலம் அழைப்பு விடுக்கின்றேன்.

எனினும் எமது கொள்கைகளுக்கு மாறாக இதுவரை செயற்பட்ட தமிழர் விரோதக் கட்சிகள் எம்முடன் இணைந்து செயலாற்ற முன்வந்தாலுங் கூட அவர்களை இணைத்துக் கொள்வது கடினம்.

இந்நிலையில் பொதுமக்களிடையே இனவாதங்கள், மதவாதங்கள், சாதிப் பிரிவினைகள், பிரதேச வாதங்கள் ஆகியவற்றைத் தூண்டிவிட்டு மக்களைப் பிளவு பட வைத்து தமது காரியங்களை இலகுவாக முன்நகர்த்துகின்ற அரசியல்வாதிகள் சிலர் என் மீது பழி சுமத்துகின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது நகைப்பிற்குரியது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையை நான் கலைத்துவிட்டதாக ஒரு சாரார் குற்றஞ்சாட்ட இன்னொரு சாரார் எனக்கு அரசியல் அனுபவம் எதுவும் இல்லை என்கின்றார்கள். பிழையான கருத்துக்களின் அடிப்படையில் ஒற்றுமையைப் பேணுவதில் எமது மக்களுக்கு எதுவித நன்மையும் ஏற்படாது.

ஒற்றுமை என்பது தகுந்த கொள்கை ரீதியான அடித்தளத்தில் இருந்து கட்டி எழுப்பப்பட வேண்டும். அடுத்து அவர்கள் கூறுவது போல அரசியல் அனுபவம் என்பது உண்மைக்குப் புறம்பான விடயங்களை அவ்வவ் போது மக்கள் நம்பக்கூடிய வகையில் உரத்துப் பேசி அவர்களை நம்ப வைக்கின்ற தன்மையே என்றால் போலிப்பித்தலாட்டம் ஆடுவதே அரசியல் அனுபவம் என்றால் அந்த அனுபவம் என்னிடம் இல்லை என்பதை நானும் ஏற்றுக் கொள்கின்றேன்.

எனக்கு எமது மக்களை ஏமாற்றத் தெரியாது. அவர்களுக்கு உண்மைக்குப் புறம்பான விடயங்களை உண்மை போல எடுத்துக்கூறத் தெரியாது. அதனால்தான் எமது தலைவர்கள் எதிர்பார்த்த கைப்பொம்மையாக என்னால் ஆட முடியாது போனது.

எமது மக்கள் பலர் எமது மக்கள் சந்திப்பின் போது என்னிடம் எடுத்துக் கூறிய துயர சம்பவங்களும் அவர்களால் தீர்க்கமுடியாத கவலைகளுந்தான் என்னைக் கல்லாக இறுக வைத்து விட்டது. அவர்கள் துயர் துடைக்க வெறுமனே அண்டிப் பிழைத்தல் வழியாகாது என்ற முடிவுக்கு வந்தேன். இதனால் தான் எனது பதவிக்காலம் முடிவுற்ற நிலையிலும் நான் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்தும் ஒரு வாடகை இல்லத்தில் வசித்து வருகின்றேன்.

என்னை நம்பி, எனக்குப் பெருந்தொகையான வாக்குகளை வழங்கி, முதலமைச்சராக்கிய வடபகுதி மக்களுக்கு என்னால் முடிந்த அனைத்து உதவிகளையும் அவர்களுக்கான உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும் என்ற காரணத்தினால் நான் தொடர்ந்தும் எனது மக்களுடன் வாழ்ந்து வருகின்றேன்.

2013ல் ஒரு இலட்சத்து முப்பத்திமூன்றாயிரம், பேர் சேர்ந்து எனக்கு வாக்களித்திருந்தார்கள் என்றால் இப்பொழுது கட்சி ரீதியாகப் பிரிந்து செல்பவர்களுக்கு மேலதிகமானோர் கொள்கை ரீதியாக என்னுடன் சேர்ந்து பயணிக்க விரும்புவதைக் காண்கின்றேன்.

எனவே போலிக் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்ற அரசியல்வாதிகள் யாராக இருந்தாலும் அவர்கள் தொடர்பில் அவதானமாக இருங்கள் என்று எனது அருமை மக்களிடம் நான் கூறி வைக்கின்றேன். வடக்கில் இருந்தாலென்ன கிழக்கில் இருந்தாலென்ன எப் பகுதிகளில் இருந்தாலும் நாம் அனைவரும் தமிழர்கள், தமிழ் உறவுகள் என்ற நிலைப்பாட்டில் எமது முன்னெடுப்புக்கள் அமைய வேண்டும் என மேலும் தெரிவி

## சு.க.வின் 14 எம்...

சுதந்திரக் கட்சியின் 14 பாராளுமன்ற உறுப்பினர்கள் முடிவெடுத்துள்ளனர். தமது தீர்மானத்தை அவர்கள் கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் அறிவித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திசாநாயக்க உள்ளிட்ட 14 பாராளுமன்ற உறுப்பினர்களே இவ்வாறு தீர்மானம் எடுத்துள்ளனர்.

மகிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்பட்ட நாளிலிருந்து இந்த 14 பாராளுமன்ற உறுப்பினர்களும் தற்போதைய அரசின் அதிருப்தியாளர்களாக உள்ளனர்.

தற்போது ஐக்கிய தேசிய முன்னணி அரசை அமைக்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ள நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 14 பாராளுமன்ற உறுப்பினர்களும் அந்த முன்னணியுடன் இணைந்து பணியாற்றுவது என்று தீர்மானித்துள்ளனர். (மு)

கொவிசெத
திகதி 2018.12.02
சீட்டிழுப்பு இலக்கம் 1961
ஆங்கில எழுத்து F
வெல்லப்பட்ட இலக்கங்கள் 18 52 54 61
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி 2018-12-02
சீட்டிழுப்பு இலக்கம் 83
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 11 71 72 73
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2018/12/02
சீட்டிழுப்பு இலக்கம் 480
லக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 01 31 36 59 26
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2018/12/02
சீட்டிழுப்பு இலக்கம் 3802
ஆங்கில எழுத்து S
வெல்லப்பட்ட இலக்கங்கள் 9 8 0 7 0 4
தேசிய லொத்தர் சபை

CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை

- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி,
(பெருமாள் கோவில் அருகாமை)
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
077 6655413

(C-4580)

## வங்கி...

முயன்ற நபர் ஒருவரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அந்த வங்கியின் தன்னியக்க பண பரிமாற்ற இயந்திரத்தில் நேற்று காலை நபர் ஒருவர் போலி அட்டையைப் பயன்படுத்தி பணம் பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இந்தத் திருட்டு முயற்சியை வங்கி முகாமையாளருக்கு அபாய ஒலி மூலம் இயந்திரம் தெரியப்படுத்தியது.

அதனை அடுத்து துரிதமாக செயற்பட்ட முகாமையாளர், பொலிஸாருக்கு அறிவித்தார். அங்கு விரைந்த பொலிஸார் சந்தேகநபரை கைது செய்ய முற்பட்ட போது, அவர் பொலிஸாரை தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பி சென்றுள்ளார்.

எனினும் பொலிஸார் சந்தேகநபரை துரத்திச் சென்று கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட நபரை பொலிஸ் நிலையம் கொண்டு சென்று தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (மு)

Study in ITALY
Full Scholarship
ஐரோப்பாவில் குடியேறுவதற்கு ஓர் அரிய வாய்ப்பு

Admission open for 2019 intake

Why Study in ITALY ?
- Bachelors & Master Degree
- Study in English Medium
- கற்கை நெறியுடன் கூடிய பகுதி நேர வேலை வாய்ப்பு.
- கல்வியின் பின் 26 நாடுகளில் ஒரு நாட்டில் வேலை வாய்ப்புடன் பிரஜா உரிமை பெறும் வாய்ப்பு.
- 100% விசா உத்தரவாதம்.
- குறைந்த பாட நெறி கட்டணம்
- Dependent visa to spouse
- Schengen visa

ICS Study Abroad
Admissions :- 077 3013060
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோவில் அருகாமை) : 021 492 6222
107 B 1/1 , Galle Road , Colombo 6

FLC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்சு
Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781
181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456/0762 669 614
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

Maths Classes
தரம் 6 - 11
தமிழ்மொழிமூலம் ஆங்கிலமொழி மூலம்
M.Asupathy (6606)
கொக்குவில் T.P:077 936 1728

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்
ராஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: ராஜ் - 077 679 6623

பிரத்தியேக / குழுவகுப்புக்கள்
A/L 2019 & DAY / A/L 2020
கணக்கீடு
MR. BALAKAJEN
கந்தர்மடச்சந்தி கந்தர்மடம் (Tue & Fri 5-7 P.M)
கொழும்புத்துறை (Sat & Sun 2-5 P.M)
தொடர்புகளுக்கு : 075 077 5660, 076 565 5956

காணி விற்பனைக்கு
சித்தன்கேணியில் அமைதியான சிறந்த சுற்றாடலில் வீடு கட்டுவதற்கான 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தரகர்கள் தேவையில்லை
தொடர்புகளுக்கு: (6641)
0778447753

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK- 550 /-Kg
கனடா-900 /-Kg
ஜேர்மனி- 700 /-Kg
நெதர்லாந்து-700 /-Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
மானிப்பாய் யாழ்ப்பாணம் கிளிநொச்சி சாவகச்சேரி நெல்லியடி பருத்தித்துறை வல்வெட்டித்துறை
V2 TRAVELS

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

கடந்த 18.11.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்



அமரர்

## வேதவனம் கந்தையா தருமராஜா

**(ஓய்வுநிலை பிரதி அதிபர் - வித்தியானந்தக் கல்லூரி- முள்ளியவளை)**

அவர்களின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், வித்தியானந்தக் கல்லூரி சமூகத்தினர் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையில் எமக்குதவிய வைத்தியர்கள், ஊழியர்கள், தொலைதூரங்களில் இருந்து வருகை தந்தவர்கள், தொலைபேசி, முகநூல் மூலமும் மலர்வளையம், கண்ணீர் அஞ்சலி பதாகைகள் ஊடாக துயர் பகிர்ந்தவர்களுக்கும் இறுதி அஞ்சலியில் உரையாற்றிய, உணவளித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 03.12.2018 திங்கட்கிழமை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்று நாளை 04.12.2018 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு நல்லூர் சட்டநாதர் சிவன் கோவில் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் தொடர்ந்து மதிய போசனமும் நடைபெற இருப்பதனால் இவ்அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இல.959, பருத்தித்துறை வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.** (6650)

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

சயன்ஸ் அக்கடமி
நல்லூர் - அரியாலை.
புதிய கல்வியாண்டு - 2019
தரமான கல்வியுடன் ஆரம்பமாகின்றது!
40 வருடங்களுக்கு மேலான கல்விப் பாரம்பரியத்தில் என்றும் முன்னணியில் திகழும் எமது நிறுவனம் அனேக பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க புதிய கல்வியாண்டில் மாணவர்களை இணைத்துக்கொள்கின்றது.
நிகரற்ற சிறப்பான நிர்வாகக் கட்டமைப்பின்கீழ்
முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த வழிகாட்டலில்
தமிழ்மொழி மூல வகுப்புக்கள் தரம் 6 முதல் O/L வரை
English Medium Classes Gr. 6 - O/L
வெற்றித்தேர்வு ஆரம்பக் கல்விப்பிரிவு
வெற்றித்தேர்வு பரீட்சைகளோடு
வெற்றித்தேர்வு வளவாளர்களுடன்
யாழ். முன்னணி ஆசிரியர்களின் சிறப்பான வழிகாட்டலில்
தரம் 1 முதல் தரம் 5 வரை
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
05.12.2018 புதன்கிழமை பி.ப 4.00 மணி
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536
நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.